
குடும்பத்துடன் களிக்க...

கல்கி

KALKI 9.10.2005
ரூ.7.00
96 பக்கங்கள்



சர்ச்சையும்
சங்கடமும்!

சீர்கெட்டுப் போகிறாரா
சிம்பு?

தீபாவளிக்கு எந்த கலர் பட்டு?



நீங்கள் பட்டில் இதுவரை பார்த்திருக்கவே முடியாத அபூர்வமான கலர்கள்தான் ஆரெம்கேவியின் தீபாவளி பட்டுகளின் சிறப்பம்சம். 50,000 வெவ்வேறு கலர்களைப் பட்டில் முதன் முதலில் உருவாக்கிய தொழில்நுட்பம் எங்களிடம் உள்ளதால் அவற்றில் அபூர்வ கலர்கள் பலவற்றை தேர்ந்தெடுத்து எங்கள் டிசைன் ஸ்டுடியோ மூலம் விசேஷ தீபாவளி ஸ்பெஷல்களை உருவாக்கி இருக்கிறோம்.

யாருமே அணிந்திராத அபூர்வ கலர் பட்டில் இந்த தீபாவளிக்கு ஜொலித்திடுங்கள்.

RmKV

Indha colour Promise

எல்லா கலர் பட்டும் ஆரெம்கேவியில் மட்டும்

பனகல் பார்க், சென்னை Ph 044-281 44445 | வடக்கு ரத வீதி, திருநெல்வேலி Ph 0462-2333105 | www.rmkv.com

Superbrand

As per BIS,
IS:2888-1983.



உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் ஸின்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. ஸின்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே ஸின்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்

வட்டமேஜை



நூத்துக்கு நூறு!

✉ சுதாமூர்த்தியின் கட்டுரையில் வந்த 'இலவசம் எனும்போது மக்கள் அதை மதிப்பதில்லை' என்ற வாசகங்கள் நூற்றுக்கு நூறு உண்மை.
வேளச்சேரி, கோவர்த்தனம்

✉ 'தெம்மாங்குக் குரல்...' கட்டுரை படித்ததும், விழாவில் நேரில் கலந்து கொண்ட திருப்தி!
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்

✉ எதிர்கட்சிகளே பாராட்டற அளவுக்கு விஜயபாஸ்கர் எம்.எல்.ஏ. சேவை செய்யறாரா...! நாடு முன்னேற இப்படிப்பட்ட ஒரு எம்.எல்.ஏ. மட்டும் போதாதுங்க, நிறையப் பேர் வேணும்.
தேனி, அகிலா

✉ சம்பிரதாயத்தைவிட மனிதாபிமானம் உயர்ந்தது என்பதை எடுத்துக்காட்டியது ஆதித்ய முரளியின் 'தொன்மைக்கு அஞ்சேல்!'
சென்னை, துரைராஜ்

✉ கண்ணெதிரே நடக்கும் அக்கிரமங்களைக் கண்டும் காணாமல் இருப்பவர்களுக்கு புத்தி புகட்டும் அருமையான சிறுகதை, 'இன்னமுமா'.
திருப்பரங்குன்றம், சுப்ரமணியன்

✉ 'அ... ஆ' விமர்சனத்தில் எஸ்.ஜே.சூர்யாவுக்கு நீங்கள் வைத்தது சரியான குட்டு!
சேலம், சியாமளா ஈஸ்வரன்

✉ 'விலங்குகள்' தொடர்கதையில் வரும் குட்டிக் கதைகள், சிறார்களுக்கு குஷியையும், நீதியையும் ஒருங்கே

✉ பொறுப்பான யோசனைகள் + விவேகமான எச்சரிக்கைகள் என்று கலந்து எழுதப்பட்ட விஜயகாந்த் தலையங்கம் அருமை!
நெல்லை, இ.க.சி.

✉ பதினெட்டு மணி நேரம் உழைக்கும் எழுபத்தியிரண்டு வயது இளைஞரைக் காண முடிந்தது, அப்பாசாமி சக்ஸஸ் ஸ்டோரியில்.
இழவனேரி, சத்தியசிலன்

✉ சுனந்தாஜியின் சொற்பொழிவு தேன் என்றால், வெற்றி உங்கள் சாய்ஸ் பாற்கடல் அமுதம்!
விருகம்பாக்கம், கிருஷ்ண.ராஜ்கோபால்

வாரம் ஒரு வாசகர்



✉ விஜயகாந்தின் கட்சியை வரவேற்கிறோம். ஆனால், அவர் சொன்னதைச் செய்ய வேண்டும்.
தஞ்சை, எம்.சிவகுருநாதன்

அளிக்கின்றன.
நெய்வேலி, **இந்துமதி**

✉ பரமுவின் பந்துக் கேள்விகளும் அஜீத்தின் மண்டையைக் குடையப் போவது நிச்சயம்.
திருச்சி, **பிரகாசம்**

✉ கனவுகளிலேயே காலம் தள்ளும் கார்மென்ட் தொழிற்சாலைப் பெண்களின் நிலையை சூர்யா விவரித்தது, மனதைத் தொட்டது.
தஞ்சை, **வளர்மதி ஆசைத்தம்பி**

✉ எனது மனதை அழுத்திய பிரச்னைகளைப் பார்த்து 'நோ ப்ராப்ளம்' சொல்ல வைத்துவிட்டது 'நோ ப்ராப்ளம்' கட்டுரை...!
உசிலம்பட்டி, **கருணையானந்தம்**

✉ சின்னத்திரை எனும் கண்ணாடி மாளிகையில் இருப்பவர்கள் 'அனலில் அடைபட்ட மெழுகு' நிலையில் உள்ளதை உணர முடிந்தது!
திருவண்ணாமலை, **சண்முகம்**



பா.விஜய்

நாயன்மார் வரலாற்றை புதுக் கவிதை வடிவில் புத்தகமாகத் தொகுத்து வருகிறார் பா.விஜய். சிதம்பரம் நடராஜர் கோயிலில் வெளியிடுவதாய் ஏற்பாடு.

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-


Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் பேழைக்கு

சீறுசுறுவென்றிருக்கிறார் சிம்பு. 'சரவணா' படப்பிடிப்பில் கே.எஸ்.ரவிக்குமாரின் கண்ணசைவுக்கேற்ப பரபரவென்று நடித்துக் கொண்டிருந்தவரை, துரத்தித் துரத்திப் பேசினோம். அந்த அனல் சந்திப்பிலிருந்து...

தொட்டி ஜெயா...?

''படம் ஹிட்டானதுல ரொம்ப



சந்தோஷம். எனக்கு செட்டாகிற இயக்குனரோடு படம் பண்ணும்போது, படமும் அங்கே ஜெயிக்குது 'அலை' இயக்குனர் இத்தனைக்கும் புதுமுகம்தான். அவரோட என் அலைவரிசை ஒத்தே போகலை. படமும் ஃப்ளாப் ஆச்சு. 'இது சிம்பு படம்'னு சொல்லித்தான் எல்லோரும் 'தொட்டி ஜெயா'வைப் பார்க்க வர்றாங்க. 'மன்மத'னோட வெற்றி இந்தப் படத்தோட ஓபனிங்குலதான் தெரிஞ்சது. ஒரு வெற்றிப் படம் கொடுத்துட்டு எத்தனை வருடங்கள் வேண்டுமானாலும் கேப் விடலாம். அது தாங்கும். ஆனா, தோல்விப் படம் கொடுத்துட்டா, அவ்வளவுதான். துக்கம் விசாரிச்சே ஒருவழி பண்ணிடுவாங்க.''

மந்த்ராபேடி, யானா குப்தா வரிசையில் சானியா மிர்சாவையும் உங்க ஜோடியாக்க ட்ரை பண்றீங்களாமே?

(உற்சாகமாகிறார்) ''அட, இந்த ஐடியாகூட நல்லாயிருக்கே! இதுவரைக்கும் எதுவும் முயற்சிக்கல. ஆனா அடுத்த படத்துக்கு வேணா அவங்களைக் கூப்பிடலாம்னு நினைக்கிறேன். ஏன்னா, யாரும் செய்யாத புது முயற்சிகளைச் செய்யறதுல எனக்கு எப்பவும் ஆர்வம் அதிகம். 'ஆட்டோகிராப்'ல கூட மூணு கதாநாயகிகள்ல இரண்டு புதுமுகங்களைத்தான் சேரன் சாரால போட முடிஞ்சது. எங்கே, நான் 'வல்லவன்'ல நயன்தாரா, ரீமாசென், சந்தியான்னு

– சிம்பு அதிரடி

மூனு பெரிய ஹீரோயின்களை சம்மதிக்க வச்ச மாதிரி பண்ணச் சொல்லுங்க பார்ப்போம்? முடியாது. ஒத்துக்கவே மாட்டாங்க. என் கதைகளால், என்னால் எதையும் சாதிக்க முடி





"தனுஷ் எனக்கு நண்பனில்லை!"

யுது.''

அதீதமான 'மன்மதன்' காதல் காட்சிகள், 'வல்லவன்' உதடு முத்த போஸ்டர் விவகாரம் போன்றவைகளால் நன்றாக வர வேண்டிய சிம்பு, சீர்கெட்டுப் போகிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறதே?

"நான் கதை அமைக்கும் படங்களில் உண்மைதான் அதிகமாக இருக்கும். நாட்டில் என்ன நடக்கிறதோ, அதைத் தான் திரையில் பதிவு செய்ய ஆசைப் படுறேன். மத்தபடி நான் எடுக்கிறதைப் பார்த்து மக்கள் நேர் வழிக்கோ அல்லது தவறான வழிக்கோ மாறணும்னு ஆசைப் படலை. வயசான பாட்டி தடுக்கி விழறாங்க. அவங்களை ஹீரோ பிடிச்சு காப்பாத்தறாருன்னு பொய் வேலைகள் காட்டி மக்கள்கிட்ட நல்ல பேர் வாங்க விரும்பலை. என் டார்கெட் அடுத்த சூப்பர் ஸ்டாராகணும்ங்கிறது கிடையாது. அதைத் தாண்டிப் போகணும்னு ஆசைப்படறேன்.

இன்னைக்கு திருமணத்துக்கு முன்பு உறவு வச்சுக்கிற வரைக்கும் காதலர்கள் போயிட்டாங்க. இந்த உண்மையை படத்துல காண்பிக்க விரும்பறேன். இப்படிச் சொன்னாத்தான் தியேட்டர்ல க்ளாப்ஸ் வரும்.

நயன்தாரா போஸ்டர் விவகாரத்துல யாருக்கு என்ன பிடிக்கும்னு தெரியாமப் போச்சு. நமீதா கவர்ச்சி காட்றது கூட எனக்குப் பிடிக்கலைதான். அதுக்காக நான் யாரையாவது குத்தம் சொல்ல முடியுமா? 'வல்லவன்' பார்த்தா என்னை யாரும் குறை சொல்ல மாட்டுங்க. 'நியூ' படத்தைத் தடை செய்யறதைப் பார்த்தா, எங்களை மாதிரியானவர்கள் அடுத்த கட்டத்துக்கு முன்னேறுவதை தடுக்கறாங்களோன்னு சந்தேகமா இருக்கு. இவங்க எல்லாம் சினிமான்னா இப்



படித்தான் இருக்கணும்னு ஒரு வட்டத்துக்குள்ளே இருக்காங்க. என்னை என்ன தடுத்தாலும், என் விருப்பப் படிதான் படம் எடுப்பேன்."

மாதவன் விவகாரமா? இன்னா அது!

தயாரிப்பாளர்களுக்கும் நடிகர்களுக்கும் சுமுகமான உறவு இல்லையே... உதாரணம் மாதவன் விவகாரம்...!

"தயாரிப்பாளருக்கும் நடிகருக்கும் பெரிய உறவு எதுவும் தேவையில்லை. சம்பளத்தை ஒழுங்கா கொடுத்தாங்கன்னா அவங்களுக்கும் நமக்கும் என்ன இருக்கு? என் விஷயத்துல, தாணு சார் கூட மட்டும்தான் சம்பள விஷயத்துல கருத்து வேறுபாடு இருந்துச்சு. இப்போ அதுவும் சுமுகமாயிடுச்சு. மத்தபடி மாதவன் விவகாரம் பற்றி நான் எதுவும் கேள்விப் படவேயில்லை."



தனுஷும் நீங்களும் யதேச்சையாகச் சந்தித்தால் கூட பரபரப்பாகி விடுகிறது. உண்மையில் உங்களுக்கு தனுஷ் நண்பனா? பகைவனா?

"என்னைப் பொறுத்தவரைக்கும் தனுஷ் சாதாரண மனுஷனாயிட்டார். எனக்கு அவர் நண்பனுமில்லை; அதே நேரத்துல பகைவனுமில்லை. அவர் ஒரு சாதாரண ஆள். தனுஷ் கூட இருக்கிறவங்க என்னைப் பற்றி என்ன சொல்லியிருப்பாங்களோன்னு எல்லாம் நான் கவலைப்படலை. இப்போ அவர் என்கிட்ட பேசாததுக்கு எந்தவிதக் காரணமும் கிடையாது. சமீபத்துல ஒரு நாள் சக ஆர்ட்டிஸ்ட் எதிர்ல வர்றாரேன்னு 'ஹலோ' சொன்னேன். அவ்வளவுதான்."

இப்பொழுது இயக்குனராகி விட்டீர்கள். இனிமேலாவது மசாலாத்தனம் இல்லாத யதார்த்தமான படங்களைத் தரலாமே?

"தரலாம்தான். ஆனா அந்தப் படத்துல சிம்பு ஹீரோவா நடிக்கக் கூடாது. சிம்பு படம்னா குத்துப் பாட்டு, நாலு ஃபைட்னு காட்சிகளெல்லாம் துடிப்பா இருக்கணும்னு ஆசைப்படறாங்க. இதெல்லாம் இல்லாம 'அலை'ன்னு ஒரு படம் பண்ணினேன். ஆனா அதை ரசிகர்கள் கொஞ்சங்கூட ஒத்துக்கவே இல்லை. ஆக, எனக்குப் பிடிச்சதை மட்டும்தான் பண்ணணும்னா வெளியே அனுப்பிடுவாங்க."

- ச.ந.கண்ணன்

அட்டை, படங்கள் : **ஸ்ரீஹரி**



பட்டாக தீபாவளியில் பளபளக்க வாருங்கள்
பட்டோடு ஃபேன்சி பரவசப்படுத்தும் பாருங்கள்
ராஜ்மஹாலின்
தீபாவளி
கலெக்சன்ஸ்
ராஜ்மஹால்
வெங்கலக்கடைத் தெரு, மதுரை-1.
போன்-2622647
விழாக்கால பட்டுப்புடவைகள், மில், பேன்சி சேலைகள்,
காட்டன் கலெக்ஷன்ஸ், சுடிதார் மெட்டீரியல்கள், ஆடவர் சூட்டிங்ஸ், சர்ட்டிங்ஸ்.
தொட்டுத் தொடரும் ஒரு பட்டுப் பாரம்பரியம்.
AMC/MDU/05

ரசிகர்கள் கோயில் கட்டிக் கும்பிட்ட குஷ்புவின் நிலை ஒரு வாரமாக தடம்புரண்டு கிடக்கிறது. கற்பு பற்றி கருத்துச் சொன்னதன் காரணமாக



சர்ச்சையும்

* அருள்மொழி

* சல்மா

எதிர்ப்பைச் சம்பாதித்துள்ள நிலையில், இப்பிரச்னையை எப்படி அணுகுகிறீர்கள் என்று சில வி.ஐ.பி.களிடம் கேட்டோம்.

நடிகை ரீமாசென்: குஷ்பு, புத்தகத்தில் வந்துள்ளது மாதிரி பேட்டியளித்திருப்பாரா என்றே சந்தேகமாக இருக்கிறது. நாம் ஒன்று சொன்னால், அதை வேறு விதமாக சில பத்திரிகைகள் எழுதிவிடுகின்றன. இந்த அனுபவம் அனேகமாக எல்லோருக்குமே ஏற்பட்டிருக்கும். தமிழக மக்கள் மீதும், தன் ரசிகர்கள் மீதும் அளவில்லாத பாசம் உடையவர் குஷ்பு. அதனால்தான் இப்பொழுது மன்னிப்புக் கேட்டுள்ளார். இதோடு இப்பிரச்னையை விட்டுவிடுவது தான் சரி...

நடிகை லதா : குஷ்பு அக்கருத்தை அனைவருக்கும் பொதுவாகப் பேசியிருக்கக் கூடாது. இதைத் தொடர்ந்து நடைபெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது ஒன்று புரிகிறது... என்னதான் நம் வாழ்வில் மேற்கத்திய கலாசாரம் ஊடுருவினாலும், தமிழ்க் கலாசாரத்தை மக்கள் இன்னும் கைவிடவில்லை என்பது ஆறுதலான விஷயம்.

கவிஞர் சல்மா : தனது பேட்டியில் குஷ்பு கற்பு பற்றிக் கூறப்பட்ட கருத்துகள் எனக்குத் தவறாகத் தெரியவில்லை. அந்தப் பத்திரிகையின் பாலியல் தொடர்பான ஒரு சர்வே குறித்துத்தான் குஷ்பு தன் கருத்தைத் தெரிவித்துள்ளார். உலகமயமாக்கல் காரணமாக இளைஞர்களிடையே பாலியல் தொடர்பான மனோபாவங்கள் மாறியுள்ளதே என்கிற கேள்வியை அவர் முன் வைக்கும்பொழுது, இதுபோன்று அவர் தன் தரப்பை வெளிப்படுத்தியுள்ளார். குஷ்பு தமிழ்ப் பெண் கிடையாது. உருது பேசும் முஸ்லிம். அவர் சிறுபான்மை இனத்தைச்

சேர்ந்தவராக இருப்பதால், இந்துத்வா சக்திகளும், தமிழ் தேசியவாதிகளும் அவரைப் பழிவாங்குகிறார்கள் என்பதே உண்மை. இதை நான் என் இனத்தவராக அவரைப் பார்க்காமல், ஓர் எழுத்தாளராக என் கருத்தைப் பதிவு செய்கிறேன். இந்த விஷயத்துக்கு ஒரு பின்னணி மட்டும் இருக்க முடியாது. தங்கர்பச்சானும் அவரைச் சார்ந்தவர்களும் இதைப் பழிவாங்கும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இப்படி குஷ்புவை ஆளாளுக்கு கேவலப்படுத்தும்போது என் மனம் உடைந்து போகிறது. என்னைப் பொறுத்தவரை, குஷ்பு பேட்டியளித்த அந்தப் பத்திரிகையில் எடுக்கப்பட்டது ஓர் ஆபாச சர்வே. அவர்கள் கூறுவதை எந்த



குஷ்பு விவகாரத்தில் நீண்ட நாள் மௌனம் காத்து வந்த நடிகர் சங்கம், இறுதியில் போராட்டம் நடத்திய விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க. மகளிர் அணியினர் மீது தங்களது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. தங்கர் பச்சான் விவகாரத்தில், விஜயகாந்துக்கும் திருமாவளவனுக்கும் ஏற்பட்ட மறைமுகப் போரின் அடுத்த கட்டமாகத்தான் குஷ்பு விவகாரம் பார்க்கப்படுகிறது. 'நடிகர், நடிகைகள் நிதானத்துடன் பேட்டி கொடுக்க வேண்டும். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு சங்கம் பொறுப்பேற்காது' என்று நடிகர் சங்கம் அறிவித்திருக்கிறது. குஷ்புவுக்கு நடிகர் சங்கத்தில் நல்ல மதிப்பு உள்ளது. அதனால்தான் அவர்மீது நடவடிக்கை எடுக்க நடிகர் சங்கம் தயக்கம் காட்டுவதாக, அதன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



சங்கடமும்!

வகையில் ஏற்றுக்கொள்ள முடியும்? வியாபார நோக்கில் எடுக்கப்பட்ட அந்த ஆபாச சர்வே பற்றி யாரும் பேசவில்லை என்பதுதான் ஆச்சர்யமானது.



• ரீமாசென்

பாரதி பாஸ்கர்: நடைபெற்ற சம்பவங்கள் எல்லாமே நம் சமூகத்தின் பலவீனத்தைத்தான் காட்டுகின்றன. நினைத்தால் ஒரு நடிகைக்குக் கோயில் கட்டுவதும், இட்லி, மல்லிகை, துணிமணி வரை அவரின் பெயரை இடுவதும், பிரச்னை என்று வந்துவிட்டால் அவரை கோபுரத்திலிருந்து தூக்கி எறிவதையும் பார்த்தால், சினிமா மோகத்திலுள்ள தமிழர்களைப் பார்த்து கோபம் கோபமாக வருகிறது. குஷ்பு என்ன ஒப்பினியன் லீடரா? சமுதாயத்தில் மாற்றம் ஏற்படுத்திய ஒரு பெண்மணியா? அவர் கருத்துகளுக்கு ஏன் இத்தனை முக்கியத்துவம்? குஷ்பு கற்பு பற்றித் தெரிவித்த கருத்துகளெல்லாம் யாரை மனத்தில் வைத்துச் சொன்னார்? இப்படிப் பேச அவருக்கு யார் உரிமை கொடுத்தது? அவருடைய ஒவ்வொரு எழுத்தும் கண்டிக்கத்தக்கது. அதேசமயம் இந்த வாக்கியங்களுக்கு வெளியேயும் உண்மைகளைத் தேட வேண்டியிருக்கிறது. இரண்டு பெண்களுக்குத் தாயான ஒரு பெண் இப்படிப்பட்ட கருத்துக்களை எப்படிச் சொல்லியிருப்பார் என்று நம்ப முடியாமல் இருக்கிறேன்.

"குஷ்புவின் கருத்து பொதுப்படையானது"

- திருமாவளவன்



தங்கர்பச்சான் விவகாரத்துக்கு பதிலடி கொடுக்கும் நோக்கத்துடன்தான், இந்தப் பிரச்னையை விடுதலைச் சிறுத்தைகள் கையிலெடுத்தது என்று பேசப்படும் நிலையில், திருமாவளவன் என்ன சொல்கிறார்?

"நான் தூண்டி விட்டுத்தான் எங்கள் கட்சியின் மகளிர் அணியினர் போராட்டம் நடத்தினார்கள் என்றால், தமிழகம் முழுக்க உள்ள பெண்கள் குழுக்களும், பல்வேறு பிரிவினரும் எதிர்ப்பும் போராட்டமும் நடத்தினார்களே, அவர்களையெல்லாம் யார் தூண்டி விட்டது? இந்தப் பிரச்னையில் ஆண்கள் பதில் சொல்லவே கூடாது என்னாலேயே என் மகளிர் அணியினரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தப் பத்திரிகையில் குஷ்பு, கற்பு பற்றி தெரிவித்த கருத்துகள் என்னைப் பொறுத்தவரைக்கும் பொதுப்படையாகவே உள்ளன. ஆனால் அதற்கு எதிர்ப்புகள் கிளம்பியபோது, தொடர்ந்து பதிலளித்த குஷ்பு, 'தமிழ்நாட்டிலுள்ள பெண்களெல்லாம் திருமணத்துக்கு முன்பு பாலியல் தொடர்பு வைத்துக் கொள்வதில்லையா?' என்று வீம்புக்குப் பேசியதுதான் பிரச்னையைக் கிளறிவிட்டது. ஆக போராட்டங்களைத் தூண்டிவிட்டதே அவர்தான்.

தங்கர்பச்சான் விவகாரத்தில் அவர் மன்னிப்புக் கேட்டும், ஒரு நாள் படப்பிடிப்பு நிறுத்தம் செய்த நடிகர் சங்கம், குஷ்பு விவகாரத்தில் மட்டும் ஒதுங்கியது ஏன்? நடிகர் சங்கம் முன்பு பெண்கள் போராட்டம் நடத்தியதற்கு நடிகர் சத்யராஜ் தவறான தகவல்களைக் கூறியிருக்கிறார். தமிழ்ப் பெண்களை இழிவுபடுத்தி குஷ்பு பேசியதற்கு 'புரட்சித் தமிழன்' என்று கூறிக் கொள்பவர் ஆதரவு தெரிவிக்கிறாரா? தமிழகப் பெண்களெல்லாம் அப்படித்தான் இருக்கிறார்களா? மற்றபடி குஷ்பு முஸ்லிம் என்பதால் டார்கெட் செய்யப்படுகிறார் என்பதெல்லாம் அபத்தமான பேச்சு. பல பேருக்கு குஷ்பு வட இந்தியப் பெண் என்றுதான் தெரியுமே யொழிய, அவர் முஸ்லிம் பெண் என்கிற உண்மை தெரியாது."

வழக்கறிஞர் அருள்மொழி : தன் கருத்தைச் சொல்வதற்கு குஷ்புவுக்கு உரிமை உள்ளது. ஆனால் அவர் கருத்துக்கு மதிப்புக் கொடுக்க நான் விரும்பவில்லை. 'கற்பு எனப்படுவது யாதெனில்...' என்று ஒரு சிந்தனையாளர் கற்பு பற்றிப் பேசினால், அவரிடம் விவாதம் செய்யலாம். மற்றபடி போகிற போக்கில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் தரக் கூடாது. நடிகர், நடிகைகளுக்கு சமூகச் சிந்தனையின் ஆழமான புரிதல்கள் கிடையாது. தங்கர்பச்சான் நடிகைகளைக் கேவலமாகப் பேசினார் என்றார்கள். அதைவிட, நடிகைகளின் உடம்பை ஒரு நுகர்வுப் பொருளாகப் பயன்படுத்தும் இயக்குனர் மற்றும் ஹீரோ மீது ஏன் கோபம் வருவதில்லை? நடிகைகளுக்குப் பெண்ணியம், பாலியல் சார்ந்த விழிப்புணர்வு அவசியம் என்றே நினைக்கிறேன்.

• லதா




• பாரதி பாஸ்கர்



-சநகன்

படங்கள் : ஸ்ரீஹரி

தீபா - வேங்கடேசன்



மணமகள் : திருச்சி, அகஸ்தியர் வி.சுப்பிரமணிய அய்யர், வேப்பத்தூர் என்.சுப்பிர மணிய அய்யர் ஆகி யோரின் அருமைப் பேத்தி. ஆனந்தி - நாராயணன் தம்பதியின் புதல்வி.

மணமகன் : முள்ளங்குடி ஸ்ரீ சேதுராம அய்யர் அவர்களின் குமாரன். கேனடா தேச நிறுவனம் ஒன்றில் உயர்பதவி வகிப்பவர்.

தீபா - வேங்கடேசன் திருமணம் அண்மையில் சென்னையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. மாலை வரவேற்பின்போது ரஞ்சனி - காயத்ரி கச்சேரியை விருந்தினர் கேட்டு ரசித்தனர்.

முகூர்த்த சமயத்திலும், வரவேற்பின்போதும் ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தனர்.

அன்பான வேண்டுகோள்



சிவானந்த குருகுலத்தில் இருக்கும் சுமார் 300 ஆதரவற்ற குழந்தைகளும் 60 முதியோர்களும் இந்த வருடம் தீபாவளி திருநாளை மனமகிழ்ச்சியுடன் கொண்டாட பொதுமக்களிடம் உதவிக்கரம் நீட்டுகிறோம். பொதுமக்கள் அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை **பணமாகவோ (அல்லது) புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்பு, எண்ணெய், சீக்காய், அரிசி, கோதுமை** போன்ற தானிய வகைகளாகவோ நன்கொடை கொடுக்கலாம்.

அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடைத் தொகையினை காசோலையாகவோ / டிராப்டாகவோ **''சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்''** என்ற பெயரில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

பொது செயலர்,
சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,
நெ.20, கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059
தொலைபேசி எண்கள்:
2239 2444 / 2239 1078
FAX NO. 2279 1017

சென்னையில் நன்கொடை கொடுக்க வேண்டிய முகவரி:


M/S. பிரகாஷ் டிரேடிங் கம்பெனி,
நெ.156, தம்பு செட்டித் தெரு,
சென்னை - 600 001.
தொலைபேசி எண்: 2534 2803

சிவானந்த குருகுலம், காட்டாங்கொளத்தூர் தொலைபேசி எண்கள்:
(உள்ளூர்) : 954114 - 252345 / 251815
(வெளியூர்) : 04114 - 252345 / 251815

Email: sivanand@md2.vsnl.net.in/ashram23@rediffmail.com
Web:www.sivanandagurukul.org/www.buildhope.org

பின்குறிப்பு: காசோலையாகவோ /டிராப்டாகவோ ''சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்'' என்ற பெயரில்தான் அனுப்ப வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம். நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.

I.T.EXEMPE DIT (E) 2939(88)86-87 DT.17.7.2003



கண்ணீர் துடைப்பல்ல; கண் துடைப்பு!

பெயர்தான் 'தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத' திட்டம்!

இத்திட்டத்தில் வேலைவாய்ப்புக்கான உத்தரவாதமே கிடையாது! வேலைவாய்ப்பு கிட்டாதுபோனால், ஆண்டில் நூறு நாட்களுக்கு (குறைந்த பட்சம்) செய்யாத வேலைக்குக் 'கூலி'க்குத்தான் உத்தரவாதம் தரப்படுகிறது.

அதாவது, கிராமப்புற மக்களுக்கு வேலை கொடுக்க அரசு முயற்சி செய்யும்... அந்த முயற்சி கைகூடாவிட்டால், நாளொன்றுக்கு ரூ.60 வீதம் வருடத்தில் நூறு நாட்களுக்கு ஊதியத்தைக் கொடுத்துவிடும்!

அரசாங்க திட்டங்களே பொதுவாக அரைக் கிணறு தாண்டும் திட்டங்களாக இருப்பதுதான் வழக்கம். அதிலும் இத்திட்டம் அரைக்கிணற்றிலும் பாழுங்கிணற்றுத் திட்டமாக இருக்கிறது!


இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் கட்டாயம் அரசுக்கே இல்லாதபோது, அரசாங்க ஊழியர்களோ, அதிகாரிகளோ இந்த நலத் திட்டத்தில் என்ன அக்கறை கொண்டுவிடப் போகிறார்கள், ஏழைகளிடம் லஞ்சம் பெறுவது தவிர?

போதும் போதாததற்கு, இத்திட்டத்தின் பொருளாதாரச் சுமையை இப்போது மாநில அரசுகளின் தலையில் ஏற்றி வைத்துள்ளார்




கல்கி

2005 அக்டோபர் 9
பார்த்திப புரட்டாசி 23
மலர் : 64
இதழ் : 10



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




பிரதமர்! தலைநகரில் நடந்த தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத கூட்டத்தில் அவரும் நிதியமைச்சரும், இதர நிபுணர்களும் கூடி விவாதித்து, வேலைவாய்ப்பு கிட்டாதவர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை அந்தந்த மாநில அரசுகளே வழங்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டனர்! வேலை கேட்டு பதினைந்து நாட்களுக்குள் வேலை தரமுடியாவிட்டால், மாநில அரசு மானியம் வழங்க வேண்டுமாம்!

இந்த முடிவு, நடைமுறை சாத்தியமற்றது என்பதுடன், மாநில அரசுகளுக்கு இழைக் கப்படும் அநீதியும்கூட. சோனியாவின் செல்லத் திட்டமாகிய இதனை உருவாக்கியது மத்திய அரசு. 'தேசிய' திட்டம் என்று பெயரிலேயே இருக்கிறது. ஆனால், மாநில அரசுகள் நிதிச் சுமையை ஏற்க வேண்டும் என்றால், எவ்வாறு சாத்தியம்? குறிப்பாக, காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களில் இத்திட்டத்துக்கு என்ன ஆதரவு கிடைத்து விடும்? திட்டச் செலவு 40,000 கோடி முதல் 50,000 கோடி வரை ஆகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதில் 90 சதவிகிதத்தை மத்திய அரசு, வேலைவாய்ப்புகள் பெருக்குவதற்காகத் தருமாம். எப்போது தரும்? யாரிடம் தரும்? வேலைவாய்ப்புகளைப் பெருக்க என்ன திட்டம்? திட்டத்தை யார் நிறைவேற்றுவது? அதில் ஊழல் புகாமல் யார் காப்பது...? ஒரு விவரமும் இல்லை.

ஆழம் தெரியாமல் காலை விடுவது போல், வாக்குறுதியை அள்ளி வீசிவிட்டு அதைக் காப்பாற்ற முடியாமல், ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே மத்திய அரசு திணறிக் கொண்டிருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

வேலைவாய்ப்பின்மை என்பது நம் நாட்டின் முதன்மையான பிரச்னையாகப் பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. நேரு காலம் தொட்டு இதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டன. 'வறுமை ஒழிப்பு', 'வங்கிக் கடன்', 'மானியம்', 'இருபது அம்சத் திட்டம்' என்று எவ்வளவோ திட்டங்கள் அறிமுகமாகியும், கிராமப்புற வேலைவாய்ப்பின்மை பிரச்னை மட்டும் பூதாகாரமாகத் தொடர்கிறது.

கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் இந்தியா பொருளாதார முன்னேற்றம் கண்டுள்ளது; அன்னியச் செலாவணி கையிருப்பு அதிகரித்து, அயல்நாட்டுக் கடன் சுமை



குறைந்திருக்கிறது. ஏற்றுமதி, உற்பத்தி இரண்டும் பெருகியுள்ளன... ஆனால் இந்த முன்னேற்றங்கள் எதுவும் கிராமப்புற மக்களின் வாழ்வைத் தொடவேயில்லை.

மென்பொருள், ஆயத்த (ரெடிமேட்) ஆடை, தோல் பொருள்கள் ஏற்றுமதியால் கிராம மக்களின் வயிறு கழுவப்படமாட்டாது. அந்நிய நாட்டு கார், மோட்டார் சைக்கிள் கம்பெனிகள் இங்கே முதலீடு செய்வதாலும், மேல்நாட்டுக் குளிர்பான கம்பெனிகள் வருகையாலும் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு பெருகுவதில்லை. விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களை மட்டுமே நம்பி, தலைமுறை தலைமுறையாக வாழ்க்கை நடத்திவரும் பல கோடிக்கணக்கானோருக்குக் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பருவமழை பொய்த்துப் போய் பெருஞ்சோதனை ஏற்பட்டுள்ளது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக விவசாயிகள் தற்கொலை பற்றிய செய்தி வெளிவந்த நாட்டில், இப்போது அதுவே நித்திய நிகழ்வாக ஆகிவிட்டது! வறண்ட பகுதிகளில் வன்முறை இயக்கங்களால் இவ்வேழைகள் கவர்ந்திழுக்கப்படும் அபாயமும் அதிகரித்து வருகிறது.

இவர்களுடைய பிரச்னையைத் தீர்க்க வேண்டுமானால், கிராமப்புறங்களில் விவசாயம் சார்ந்த தொழில்கள் நிறுவ, வளர, அரசு வழிசெய்ய வேண்டும் ; ஊக்கம் அளிக்க வேண்டும். அத்தகைய தொழில்கள் மூலம் உருவாகும் தொடர்ச்சியான வேலைவாய்ப்புகளே இந்த ஏழைகளின் கண்ணீரைத் துடைக்க முடியும் ; அவர்களுடைய வயிறுகளை நிரப்பி, மனங்களைக் குளிரச் செய்ய முடியும்.

ஆனால், மத்திய அரசோ கண்ணீரைத் துடைப்பதற்கு பதில் வெறும் கண்துடைப்பு நடவடிக்கையில் ஈடுபடுகிறது ; அதையும் பாதியில் கைவிட்டு, பொறுப்பை மாநில அரசின் தலையில் சுமத்திவிட்டுக் கைகழுவிக் கொள்ளப் பார்க்கிறது.

அறிவித்த வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை அர்த்தமுள்ளதாக்க, மெய்யாகவே வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் மத்திய - மாநில அரசுகள் ஒத்துழைத்து இயங்கட்டும். வேலை செய்யாததற்குக் காசு தந்து அகௌரவப்படுத்தாமல், மக்களுக்கு வேலைவாய்ப்புகளைத் தந்து, மதிப்பையும் மகிழ்ச்சியையும் கூட்டட்டும். ●

"கடவுளே நினைச்சாலும் என்னைக் காப்பாத்த முடியாதாம்!"


* 'துள்ளல்' படக் காட்சி...

பிரவீண்காந்தை ஞாபகமிருக்கிறதா? 'ரட்சகன்', 'ஜோடி', 'ஸ்டார்' போன்ற படங்களை இயக்கி, கோடம்பாக்கத்தில் கொஞ்சகாலம் கோலோச்சியவர், சடா ரென்று காணாமல் போனார். மறுபடி 'துள்ளல்' என்ற படத்துக்கு பூஜை போட்டுத் தாமே தயாரித்து, இயக்கி, நடித்து படத்தை ரெடி செய்தார். ஆனால் வாங்கத்தான் ஆளில்லை. தாம் இதுவரை பட்ட கஷ்டங்களை 'நிழலின் காலடியில் நிஜங்கள்' என்கிற தலைப்பில் புத்தகமாக்கி வெளியிட்டிருப்பவரைச் சந்தித்தோம். ஆற்றாமையோடு பேசினார்...

"நான் நடிகனாக வேண்டும் என்கிற கனவில்தான் சினிமாவுக்குள் நுழைந்தேன். ஆனால் அதற்கு பெரிய பேக்ரவுண்டு வேண்டும் என்பதால், இயக்குனர் பிரியதர்ஷனிடம் இணை இயக்குனராகப் பணியாற்றத் தொடங்கினேன். ஒரு கட்டத்துக்குப் பிறகு பிரியதர்ஷன் சாரே கே.டி. குஞ்சுமோனிடம் அழைத்துச் சென்று 'என்னைவிட அற்புதமாக படம் பண்ணுவான்' என்று உறுதிமொழி கொடுக்க, நாகார்ஜுன், சுஷ்மிதா சென், ஏ.ஆர். ரஹ்மான் என்று படாடோபமாக ஆரம்பமானது ரட்சகன். அடுத்து 'ஜோடி' வெற்றிக்குப் பிறகு, பிரசாந்தை வைத்து 'ஸ்டார்' படத்தைத் தொடங்கினேன். அப்பொழுதே நான் ஹீரோவாகியிருக்க வேண்டும். ஏ.ஆர். ரஹ்மானின் கால்ஷீட் கிடைத்த நிலையில் படமும் உடனடியாக வியாபாரம் ஆகியிருக்கும். ப்ச்... முதலில் பிரசாந்திடம், 'நான் சும்மா நாலஞ்சு ஸீன் தான் நடிப்பேன்' என்று எழுதிக் கொடுத்து படப்பிடிப்பை நடத்தினேன். ஆனால், நாளடைவில் என் கேரக்டர் இரண்டாவது ஹீரோவாக உருமாறிய பிறகு, பிரசாந்தின் தந்தை தியாகராஜன் எதிர்ப்புத் தெரிவித்தார். முன்னணியில் இருக்கும் ஒரு ஹீரோவை பகைத்துக் கொள்ளக் கூடாது என்று அப்பொழுது தெரியவில்லை.

'ஸ்டார்' படத்திற்குப் பிறகு தமிழில் உள்ள எந்த ஹீரோவும் எனக்கு கால்ஷீட் தரத் தயாராய் இல்லை. ஏன் கதைகூட கேட்கத் தயாராய் இல்லை. ஆனால் நான் சொன்ன ஒரு கதையில் 'இம்ப்ரஸ்' ஆன உலக அழகி ஐஸ்வர்யாராய், இன்று வரைக்கும் அதுபற்றி விசாரித்து வருகிறார்.


சரி, பேசாமல் நாமே நடித்து விடுவது என்று தைரியமாய் இறங்கினேன். சினிமா பற்றித் தெரிந்தால் போதும். மற்றபடி தமிழ் சினிமா தயாரிக்கப் பெரிதாகப்

பணம் ஒன்றும் அவசியமில்லை. என்னுடன் ஜோடியாக நடிக்க தமிழ் நடிகைகள் பலரும் முன்வரவில்லை. மீரா ஜாஸ்மின், சதா, சாயாசிங் போன்றோரிடம் நேரில் சென்று கதை கூறியும், இன்று வரை பதிலளிக்க யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.



• பிரசாந்த்

என்னுடன் இணைந்து நடிப்பதை சாதாரணமாக நினைத்து விட்டார்கள் போலும். இறுதியில் மும்பைக்குச் சென்று, குர்லின் சோப்ராவைக் கண்டெடுத்து ஹீரோயினாக்கினேன்.





• பிரவீண்காந்த்

படம் முடித்து, பலரின் ஆலோசனையின் பேரில் விளம்பரங்கள் செய்தேன். பட வியாபாரத்தைத் தொடங்கலாம் என்று விநியோகஸ்தர்களை அழைத்தால், அவர்கள் சொன்ன விலை எனக்கு ஒத்து வரவில்லை. இதற்கிடையில் விநியோகஸ்தர்கள் பெரிய படங்களை வாங்கி, கோடிக்கணக்காகப் பணம் இழந்து, சின்னப் படங்களே வேண்டாம் என்று முடிவெடுத்ததால், கதையை நம்பிப் படம் எடுக்கும் எங்களைப் போன்றவர்கள் பாதிக்கப்பட்டனர். 'படம் எப்போது ரிலீஸ், ட்ரைலர் சூப்பர்' என்று கேட்ட மக்களிடம் பதில் சொல்ல முடியாமல் தவித்தேன்.

இடையில் ஒருவரிடம் மாதத் தவணைக்கு வட்டிக்குப் பணம் வாங்கியிருந்தேன். அவர் நெருக்க ஆரம்பித்தார். என் சொத்து விவரம் கேட்டறிந்தார். அதெல்லாம் என் பெற்றோர் சொத்து. இறுதியில் என் காரை விற்று அப்பிரச்னையிலிருந்து தப்பித்தேன்.

இதுவரைக்கும் 'துள்ளல்' படம் பார்த்தவர்களெல்லாம் 'படம் நிச்சயம் ஓடும்' என்று தெம்பூட்டுகிறார்கள். 'நல்ல வேளை, படம் நல்லா வந்திருக்கு. இல்லாட்டி, உங்களை கடவுளே நினைச்சாலும் காப்பாத்த முடியாது. ஏன்னா, சினிமா அவ்வளவு மோசமா இருக்கு' என்றார் சி.டி.வி. ஜெயக்குமார்.


என் அத்தனை வலிகளையும் எனக்கும் பின்னால் வருபவர்கள் உணர வேண்டும், சுதாரித்துக் கொள்ள வேண்டும் என்கிற முனைப்பில்தான் 'நிழலின் காலடியில் நிஜங்கள்' புத்தகத்தைக் கொண்டு வந்துள்ளேன்.

'நீங்கள் புதுமுகம். மக்களிடம் எடுபடாது' என்கின்றனர் விநியோகஸ்தர்கள். ம்.. இதுவரைக்கும் மூணு படங்கள் பண்ணியிருக்கிறேன். 12 வருஷத்துக்கு மேல் சினிமாவில் இருக்கிறேன். எனக்குத் தெரியாதா நான் நடிக்கிறது சரியா - தப்பான்னு" - விரக்தியோடு சிரித்தாலும் பிரவீண் காந்தின் கண்களில் நம்பிக்கை தெரிகிறது.

- செந்தில்

–பிரபல இயக்குனரின் வேதனை

புஷ்ஷைக் கிழித்த நோபல் விஞ்ஞானி!





• அமெரிக்காவில் சென்னை!

பல்வேறு நாடுகளிலிருந்து நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் 54 பேர், ஜெர்மனியில் உள்ள லிண்டோ நகரத்துக்கு அண்மையில் வந்திருந்தனர். உலகமெங்கும் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள், அவர்களைச் சந்தித்து உரையாட ஏற்பாடு செய்திருந்தது ஜெர்மன் அரசாங்கம். இந்தியாவிலிருந்து 24 மாணவ, மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் சென்னையைச் சேர்ந்த வித்யா, வெங்கட்ராம், கிருத்திகா, அசோக் ஆகியோரும் அடக்கம். இவர்களுள் வித்யா, வெங்கட்ராம் இருவரும், நோபல் விஞ்ஞானிகளைச் சந்தித்த அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டனர் :

• மத்திய அரசின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுத்து, விண்ணப்பங்களைப் பெற்று, இறுதியாக, தகுதியான மாணவ - மாணவிகளைத் தேர்ந்தெடுத்து, அரசாங்கச் செலவிலேயே அனுப்பி வைத்தது. குறைந்தபட்சம் முதுகலைப் பட்ட மணவர்களாக இருக்க வேண்டும். பள்ளியிலிருந்தே சாதனைகளைப் புரிந்து, பரிசுகள் பெற்றிருக்க வேண்டும். கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்திருக்க வேண்டும். அப்போதுதான் இந்த



• நோபல் விஞ்ஞானியுடன் வெங்கட்ராம், வித்யா...

வாய்ப்பு கிடைக்கும்.

• ஜெர்மனி செல்ல விண்ணப்பித்தவுடனேயே, மாக்ஸ் முல்லர் பவனில் சேர்ந்து ஜெர்மன் மொழி கற்றுக் கொண்டோம். காரணம், அமெரிக்காவை விட, ஜெர்மனிக்குச் சென்று எங்கள் பாடமான வேதியியலில் ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்பதே எங்கள் லட்சியம்.

• நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகள் என்பதால், அவர்களை நெருங்கி, கலகலப்பாகப் பேச முடியாது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் பாதிப்பேர், அப்படி இல்லாமல் கலகலப்பாக பேசினார்கள்.

• ராபர்ட்ஸ் ஏர்னஸ்ட் என்கிற சுவிட்சர்லாந்து விஞ்ஞானி, உலக நாடுகளை பெரியண்ணன் போல மிரட்டிக் கொண்டிருக்கும் அமெரிக்காவினால், உலகமெங்கும் நிகழும் சுற்றுச்சூழல் கேடுகளை புள்ளி விவரங்களுடன் விளக்கி, கடுமையாகச் சாடிப் பேசினார். சில இடங்களில் அதிபர் ஜார்ஜ் புஷ்ஷை நார் நாராகக் கிழித்துவிட்டார்.

• அணு வேதியியல் விஞ்ஞானியான ஜப்பான் நாட்டு தோஷிபா, "நோபல் பரிசு பெற வேண்டும் என்று லட்சியம் வைத்துக் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபடாமல், அதில் முழுமையாய் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். பரிசு வந்தால் வரட்டும். இல்லையென்றால் போகட்டும். தோல்விகளைக் கண்டு துவண்டு போகக் கூடாது" என்றார்.

• அமெரிக்க விஞ்ஞானி ஒருவர், "எண்ணெய் முதலிய எரிபொருள் கட்டுப்பாடு பெரிய சவாலாக எதிர்காலத்தில் இருக்கப் போகிறது. அதற்கு ஒரு தீர்வு, காற்றினைப் பயன்படுத்துதல். இன்னொன்று ஹைட்ரஜனைப் பயன்படுத்துவது. அதில் தொழில் நுட்பம் சிக்கலானது. ஆபத்தானதும்கூட" என்றார்.


• ஜெர்மனியைச் சேர்ந்தவரான வெர்ட்மனுக்கு, 68வது பிறந்தநாள் வந்தது. உலக நாடுகள் பலவற்றிலுமிருந்து வந்த அனைவரும் அவரைச் சுற்றி நின்று "ஹாப்பி பர்த்டே" பாடினோம்.

• நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளில் பலர் வயது முதிர்ந்தவர்கள். ஆனாலும், அவர்கள் உலகம் முழுக்க விடாமல் டூர் போய்க் கொண்டு இருக்கிறார்கள். காரணம், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும், சொற்பொழிவாற்ற அவர்களுக்கு அழைப்புகள் வந்துகொண்டே இருக்கின்றன.

• நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஒருவரின் கீழ் ஆராய்ச்சி மேற்கொண்டிருக்கும் இந்தியாவைச் சேர்ந்த ஒரு மாணவரைச் சந்தித்தோம். அவர், "நீங்கள் ஒருபோதும், நோபல் பரிசு பெற்றவர்களிடம் ஆராய்ச்சி மாணவராகச் சேராதீர்கள். அவர்கள் பாட்டுக்கு உலகமெங்கும் சுற்றிக்கொண்டே இருப்பார்கள். உங்களுக்கு வழிகாட்ட அவர்களுக்கு நேரமே இருக்காது" என்றார்.

• ரிச்சர்ட் ராபர்ட்ஸ் என்பவர் ரொம்ப ஜாலியான விஞ்ஞானி. அவரைப் பற்றிக் கேட்டவுடன், தன் லேப்-டாப் கம்ப்யூட்டரைப் பிரித்து வைத்துக்கொண்டு, தன் குழந்தை வயதுப் புகைப்படம் தொடங்கி, நோபல் பரிசு பெற்றது வரை அனைத்தையும் ஒரு பவர் பாயின்ட் பிரசன்டேஷனாக எல்லோருக்கும் காட்டிவிட்டார்.

தொகுப்பு : **கௌதம்ராம்**



'நான் செலக்ட்டடா மேடம்?'



'சாஃப்ட்வேர்தான் எங்க சாய்ஸ்!'

"படித்தவர்களே எங்களை

அண்மையில் சென்னையில் நடைபெற்ற வேலைவாய்ப்புக் கண்காட்சிகளை வலம் வந்த போது, எங்கும் இளைய தலைமுறையின் திருவிழாக் கூட்டம். 'இத்தனை பேர் நம் நாட்டில் வேலையில்லாமல் இருக்கிறார்களா?' என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே,

''படித்த இளைஞர்களின் வாழ்க்கையில், படித்தவர்களே விளையாடுவது தான் வேதனையான விஷயம்'' என்றொரு குண்டைத் தூக்கிப்போட்டார் எம்.எஸ்.சி கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கும் மகேஷ்.

''இன்றைய நிலையில், மாணவர்களோட அனைத்து முயற்சிகளும் சாஃப்ட்வேர் வேலையை நோக்கித்தான் போய்க்கிட்டிருக்கு. இதுல கிடைக்கிற சம்பளம் மற்ற தொழிலைவிட பத்து மடங்கு அதிகமா இருக்கு. மாசத்துக்கு ஒரு லட்சம் சம்பளத்தை வேறெந்தத் தொழிலிலாவது இளைஞர்களால் வாங்க முடியுமா? ஆனா இதுலதான் எல்லாத் தவறுகளும் நடக்குது'' என்றவர், ''அரசாங்க வேலைக்குத்தான் சிபாரிசு வேணும்னா, இன்னைக்கு சாஃப்ட்வேர் வேலைக்கும் கட்டாயம் ஏதாவதொரு பெரிய கம்பெனியில நமக்குத் தெரிஞ்ச ஓர் ஆள் இருக்கணும். ரெஃபரன்ஸ் (Reference) இல்லாம இன்னைக்கு எந்த சாஃப்ட்வேர் கம்பெனிக்குள்ளேயும் நுழைய முடியாது. சில கம்பெனிகள்ல அரசியல்வாதிகள் பங்குதாரர்களாக இருப்பதால், அவர்களுடைய சிபாரிசுக் கடிதமும் தேவைப்படுது. அப்போ அஞ்சு வருஷம் கஷ்டப்பட்டு படிச்சு என்ன பிரயோஜனம்?'' என்று மனம் வெறுத்துப் பேசினார்.


'நாம தேறுவோமா?'



பி.இ முடித்திருக்கும் லக்ஷ்மி கூறும் போது "இன்னைக்கு சென்னை, கோவை போன்ற சிட்டிகளிலுள்ள காலேஜ்கள்ல கேம்பஸ் இண்டர்வியூ மூலமா பெரும்பாலான மாணவர்களுக்கு எப்படியோ வேலை கிடைச்சிடுது. ஆனா, மற்ற கல்லூரிகள்ல படிக்கிற மாணவர்களோட நிலைமைதான் ரொம்பப் பரிதாபம். முதல்ல வேலைக்காக எல்லோரும் சென்னையில வந்து விழணும். 'ஃப்ரஷ்ஷர்ஸ் நீட்'னு போட்டிருக்குற விளம்பரங்களைப் பார்த்து அப்ளை பண்ணணும். ஆனாலும் அவ்வளவு

வசம் உண்டு. எங்களிடம் பணம் கட்டி, நாங்கள் சொல்லும் கோர்ஸைப் படித்தால் நிச்சயம் வேலை வாய்ப்பு உண்டு. முதல் மாதச் சம்பளத்தை எங்களுக்குக் கொடுத்து விட வேண்டும் என்கிறார்கள். எப்படியாவது வேலை கிடைத்தால் சரி என்று நாங்களும் இங்கு வந்து விழுவோம். கல்லூரியில் லட்சக் கணக்கில் அழுதது போதாதென்று, இங்கும் சில ஆயிரங்களை வாரி இறைக்க வேண்டும்.

இவர்கள் பெரிய கம்பெனி





ஏமாற்றுகிறார்கள்!"

• 'வேலை கிடைக்குமா வேலை?!'

சுலபத்துல யாரும் ஃப்ரஷ்ஷர்ஸை எடுக்கறதில்ல. எல்லாமே கண்துடைப்பு. எங்களோட உள் காயங்களைப் புரிஞ்சுக்காம இஷ்டத்துக்கு ஆட்டி வைக்கிறாங்க" என்று வெதும்பினார்.

"கன்சல்டன்சி என்கிற பெயரில் சில நிறுவனங்கள் நடத்தும் சித்து விளையாட்டுகள், மேலும் எங்களின் நிலைமையைக் கேள்விக்குறியாக்குகின்றன'' என்கின்றனர் நாம் சந்தித்த பெரும்பாலான இளைஞர்கள். "இந்தந்த பெரிய கம்பெனிகள் எங்கள்

• சிவசங்கர்



களிலுள்ள ஹெச்.ஆர் எனப்படும் மனிதவள மேம்பாட்டுத் துறை அதிகாரிகளை ஸ்கக்குள் போட்டுக் கொள்ளும் அநியாயங்களும் சில இடங்களில் நடக்கின்றன. வெறுமனே நேர்முகத் தேர்வுக்கு நூற்றுக் கணக்கில் அப்ளிகேஷன்களை வரவழைத்து விட்டு, கன்சல்டன்சி அனுப்பும் நபர்களை மட்டும் தேர்ந்தெடுக்கும் கோல்மால்களும் இதன் வழியே நடக்கின்றன. என்னதான் டெக்னிக்கலாக இண்டர்வியூவில் பாஸ் செய்தாலும், ஹெச்.ஆர். அனுமதித்தால்தான் மேற்கொண்டு அந்த வேலை கிடைக்கும். இப்படி

– குமுறும் பட்டதாரி இளைஞர்கள்!

சிபாரிசும், பணமும், வேலை தேடும் இளைஞர்களை அலைக்கழிக்கின்றனர்" என்று குமுறுகிறார்கள்.

இதுபோன்ற சௌகரியங்கள் இல்லாதவர்கள் அடுத்து என்ன பண்ணுகிறார்கள்?

"எல்லோரும் முன் அனுபவம் இருக்கா என்றே கேட்பதால், சம்பளமில்லாமல் வேலை தரும் கம்பெனிகளின் வலையில் விழுந்து விடுகிறார்கள். இல்லாவிட்டால் இருக்கவே இருக்கு பி.பி.ஓ வேலைவாய்ப்பு. சர்க்யூட், ட்ரான்ஸிஸ்டர் என்றெல்லாம் படித்துவிட்டு, இறுதியில் கால்சென்டர் வேலையில் அமர்வதென்பது கொடுமையான விஷயம்தான். ஆனால் வேறு வழியில்லை. இங்கு மட்டுமல்ல, சாஃப்ட்வேர் கம்பெனிகளிலும் எங்களிடமிருந்து எதிர்பார்ப்பது ஆங்கில அறிவு மற்றும் கம்யூனிகேஷன் திறன் மட்டும்தான். கல்லூரியில் விழுந்து விழுந்து படித்துச் சேர்த்து வைத்த அறிவையெல்லாம் யாருமே கணக்கிடுவதில்லை.

இன்று பி.பி.ஓவில் இருக்கும் பாதிப் பேர் சாஃப்ட்வேர் வேலை கிடைக்காமல் இதில் வந்து ஒதுங்கியிருப்பவர்கள்தான். சமீபத்தில்தான் விதை போட்டு வளர்ந்து வரும் பி.பி.ஓ., நாளை எப்படி வளரும், எவ்விதமான எதிர்காலத்தை மாணவர்களுக்குத் தரும் என்பது யாருக்குமே தெரியாது" என்கிறார் முதுகலைப் பட்டதாரியான கார்த்திக்.



• லக்ஷ்மி

பி.இ. மெக்கானிக்கல், கெமிக்கல் டெக்னாலஜி படித்தவர்கள் கூட சாஃப்ட்வேர் தொழிலுக்குள் நுழைவதால், கண்ணுக்குப் புலப்படாத 'Brain Drain' அந்தந்தத் துறைகளில் ஏற்பட்டிருக்கிறது. குறைந்த வேலைவாய்ப்பு, சுமாரான சம்பளம் போன்ற குறைபாடுகளால் பெரும்பாலான இளைஞர்கள் மற்றப் படிப்புகளைச் சீண்டிப் பார்ப்பதுகூட இல்லை. ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் போன்ற சிவில் சர்வீஸ்களுக்கு முயலும் இளைஞர்கள் மட்டும்தான் இறுதிவரை சாஃப்ட்வேர் வலையில் விழாமல் தாங்கள் நினைத்ததைச் சாதிக்கின்றனர்.

சரி, 'அரசாங்க வேலை?" "வேண்டவே வேண்டாம். இன்று பெரும்பாலான இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களது படிப்பைப் பதிவு செய்வதேயில்லை. ஆயிரம் கஷ்டங்கள் கொடுத்தாலும் தனியார் கம்பெனிகள் வழங்கும் சம்பளத்தை, சுகங்களை அரசாங்கத்தால் தர முடியுமா? ப்ராஜக்ட் என்ற பெயரில் வருடத்துக்கு இரண்டு முறை வெளிநாட்டுக்கு அனுப்ப முடியுமா?" என்று கேள்வி எழுப்புகிறார் கம்ப்யூட்டர் சயின்ஸில் டிகிரி முடித்த சிவசங்கர்.

இவர்களின் கேள்விகளுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் பதில் வேண்டி சாஃப்ட்வேர் கம்பெனிகளை அணுகியபோது, "இவ்வருடம் மட்டும் இதுவரை இத்துறையிலுள்ள டாப் 10 கம்பெனிகள், 75000 பேரை தேர்வு செய்திருக்கிறார்கள். இந்தியாவில் இதுபோன்ற அபரிமிதமான வேலைவாய்ப்பு வேறு எந்தத் துறையிலுமில்லை. திறமையும் தகுதியும் உள்ள மாணவர்கள் வீட்டிலிருந்தால்கூட, கம்பெனிகள் தாமாக வந்து கொத்திக்கொண்டு போவார்கள். எதற்கும் பொறுமை அவசியம்" என்றனர்.

- ச.ந. கண்ணன்

படங்கள்: ஸ்ரீஹரி

எனக்கே ஆச்சர்யமாகத்தான் இருந்தது. எக்ஸ்போர்ட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது, எட்டு முன் பற்களில் கிளிப் போட்டுக் கொண்டிருப்பேன். வாயைத் திறந்து தைரியமாய்ச் சிரிக்க முடியாது. காதோரங்களில் வழியும் வியர்வையைத் துடைத்துத் துடைத்து கன்னங்கள் இரண்டும் கறுத்துக்கிடந்தன. துவண்டு ஒடுங்கிய தோள்களோடு ஊட்டச்சத்து கிடைக்காமல் வளர்ந்த குழந்தையைப் போல் தோற்றமளித்த நான், சினிமாவில் நடிப்பதில் தவறில்லை என சட்டென்று எப்படி முடிவெடுத்தேன்?!

முதல் காரணம், வஸந்த் சாரின் மென்மையான அணுகுமுறை! என்னைவிட என் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை. 'ஆசை' படத்துக்காக என்னைக் கேட்டு, முன்பே அப்பாவிடம் வந்திருக்கிறார். அந்த படத்தில் ஒவ்வொரு பாத்திரத்தையும் அதனதன் தனித்தன்மை குன்றிவிடாமல் அவர் கையாண்ட நுணுக்கம் என்னைக் கவர்ந்துவிட்டது. அந்தப் படத்தின் பாடல்களில் லயித்திருக்கிறேன். அவற்றைப் படமாக்கிய விதத்தைப் பார்த்து பிரமித்துப் போனேன்.

போட்டோ ஷூட் என்று அழைப்பு வந்து மணிரத்னம் சாரின் அலுவலகத்துக்குப் போனபோது, சினிமாக் கம்பெனி மாதிரியே தெரியவில்லை. ரொம்பவும் ஒழுங்காக, அவரவர் வேலைகளைச் செய்வதிலேயே கவனமாக இருந்தார்கள். இந்த புரொஃபெஷனல் தன்மை, எடுத்ததுமே எனக்கு நம்பிக்கை கொடுத்தது. எனது தோள்கள் இரண்டையும் எடுப்பாகக் காட்ட ஷோல்டர் பானல் வைத்து, மேலே லெதர் ஜாக்கெட் போட்டு விட்டார்கள். கே.வி.ஆனந்த் ரஷ்யன் ஆங்கிளில் ஃபோட்டோ எடுத்தார். வீடியோவில் ஷூட் பண்ணினார்கள். ஸ்கிரீன் டெஸ்ட் முடிந்து கலவர மனத்தோடு நிமிடங்களை எண்ணிக் கொண்டிருந்த எனக்கு, ஜிலீர் ரிசல்ட்!

''எங்களுக்கு சரவணன் மேல் இருநூறு பர்சென்ட் நம்பிக்கையிருக்கிறது'' என்று வஸந்த் சாரும், மணிரத்னம் சாரும் அப்பாவிடம் சொன்ன பிறகு, எனக்கு இருப்புக் கொள்ளாத சந்தோஷம். ஃபோட்டோ செஷனில் எடுக்கப்பட்ட எனது ஃபோட்டோக்களைப் பார்த்து ஆச்சர்யப்பட்டுப் போனேன். நாம் தான் இவ்வளவு அழகாய் இருக்கிறோமா? மறுநாள் எல்லா தினசரிப் பத்திரிகைகளிலும் எனது ஃபோட்டோ! 'சரவணா நீ நடிக்கிறியா? நிஜம் தானா?' என்று கேட்டு நிறைய தொலைபேசி



200% நம்பிக்கை...

யார் இந்த சூர்யா?

பர்சனல் டைரி 21



அழைப்புகள். "சிவகுமார் பையனாம்பா... ஆளு பார்க்க நல்லா இருக்குறாப்ல!" என்று எடுத்த எடுப்பிலேயே எதிர்பார்ப்பு கிளம்பிவிட்டது.

ஏற்கெனவே சரவணன் என்பவர் நடித்துக் கொண்டிருந்ததால், எனது பெயரை, 'சூர்யா' என்று மாற்றினார்கள். அம்மா - அப்பா அழகாய் வைத்த பெயரை ஒரே இரவில் சினிமா மாற்ற வைத்து விட்டதே என்று சின்ன வருத்தம் இருந்தாலும், சூர்யா என்று பெயர் வைத்த பிறகு புதிதாய்ப் பிறந்து விட்டது போல ஒரு புத்துணர்ச்சி. அதே புத்துணர்ச்சியோடு முதல் நாள் படப்பிடிப்புக்குப் போனேன்.

அம்மாவும், லட்சுமி அக்காவும் ஷூட்டிங் பார்க்க வந்திருந்தார்கள். எழும்பூர் மியூசியத்தில்தான் முதல் ஷாட். நண்பர்கள் டீமோடு யமஹா மோட்டார் சைக்கிளில் சீறி வந்து, ஒரு தள்ளு வண்டிக்கு அருகில் நிறுத்தி, அங்கிருக்கும் சலவைத் தொழிலாளியைப் பார்த்து "கிருஷ்ணா, சட்டையைக் கொடு" என்று கேட்க வேண்டும். எனக்குச் சுத்தமாக நடிக்கத் தெரியவில்லை. சிவகுமார் மகனாகப் பிறந்ததே பெரிய விஷயம். அவர் சினிமாவில் சம்பாதித்த பெயரையெல்லாம் கெடுப்பதற்கு நமக்கு என்ன உரிமை இருக்கிறது? அப்பாவிடமிருந்து எனக்குள் இடம்பெயர்ந்த நடிப்புக் கலையின் ஜீன்கள், உடலின் ஏதோ ஓர் மூலைக்குத் தூங்கப் போய்விட்டனவா? அடுக்கடுக்காய்க் கேள்விகள்.

கோபமாய் முறைக்கச் சொல்லி, அதைப் படம் பிடித்தார் இயக்குனர். என் மீது இருநூறு பர்சென்ட் நம்பிக்கை வைத்த அவருக்கு, இருபது பர்சென்ட் கோபப் பார்வையைக் கூட என்னால் காட்ட முடியவில்லை. சாப்பிட்டுக் கொண்டே... ஷூ லேஸ் கட்டிக் கொண்டே.... வேடிக்கை பார்த்துக் கொண்டே.... டயலாக் பேச வேண்டும். எல்லாம் நீளமான ஷாட்டுகள். ஞாபக சக்தி மிகக் குறைவாக

20% நடிப்பு!

இருந்ததால் டயலாக்குகள் அடிக்கடி மறந்து போய், நிறைய டேக்ஸ் வாங்கி னேன். இயல்பாக என்னால் நடிக்க முடிய வில்லை. ஆனால் ரியலாக வரும்வரை வஸந்த் சார் என்னை விட மாட்டார். "உன்னால் முடியும்டா... நிச்சயம் நீயொரு பெரிய ஹீரோவா வருவே! எனக்கு நம்பிக்கையிருக்கு" என்று எல்லோருக்கும் என்னைப் பிடிக்கிற மாதிரி ரசித்து ரசித்து ஷாட் வைப்பார். எனக்குத் தலை சீவி விடுவார். "அவனை எப்படியாவது அழகா காட்டுங்கையா" என்று கேமரா மேனிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருப்பார்.

நான் நடித்துக் கொண்டிருந்த கேரக்டர் அஜீத் பண்ணவேண்டியது. அஜீத் இரண்டு மூன்று நாள் ஷூட்டிங் வந்து நடித்துவிட்டு, பின்னர் மறுத்து விட்டார். இந்தப் படத்தில் விஜய்யும் ஒரு ஹீரோ என்பதெல்லாம் 'நேருக்கு நேர்' ஷூட்டிங் போன பிறகு தான் தெரிந்தது. விஜய் ஏற்கெனவே எட்டுப் படங்களில் நடித்து பாப்புலரான ஹீரோ. அவருக்குச் சமமாக என் கேரக்டர். நான் அறிமுக ஹீரோவாக இருந்தாலும் எனக்கு சிம்ரனோடு டூயட், விஜய்க்கு சமமாக காஸ்ட்யூம்கள் என்று நமக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத் திருக்கிறார்கள்! இரண்டு ஹீரோக்களை அடிப்படையாகக் கொண்ட கதையில், ஒருத்தன் டம்மியாகப் பண்ணினால் கூட எல்லோருடைய உழைப்பும் வீணாகி விடும். இந்தப் படத்தில் நமக்கு நிறையப் பொறுப்பு இருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து விட்டாலும், நடிப்பதில் பயம் போன பாடில்லை. செட்டில் கூனிக்குறுகி... நாற்காலியின் முனையில் நடுக்கத்தோடு உட்கார்ந்திருப்பேன். கேமராமேன் கே.வி.ஆனந்தும், ஆர்ட் டைரக்டர் ராகவனும் என்னைக் கூப்பிடுவார்கள். "எதுக்கு இவ்ளோ அன்ஈஸியா இருக்கே...? நாற்காலியில கால்மேலே கால்போட்டு உட்கார். நீ இந்தப் படத்திலே முக்கிய மான ஹீரோ. முரட்டுப் பையன் கேரக்டர். தெனாவெட்டா இரு" என்று தைரியம் கொடுப்பார்கள். அவர்கள் கொடுத்த தைரியமெல்லாம் சட்டென்று வடிந்து போகிற மாதிரி அமைந்துவிட்டது கல்கத்தா ஷூட்டிங்.

எனக்கு டான்ஸ் என்றால் வேப்பங்காய். நண்பர்களோடுகூட ஆடியதில்லை. 'எங்கெங்கே எங்கெங்கே' என்ற டூயட் பாடலை படம் பிடிக்க கல்கத்தாவுக்கு வந்துவிட்டோம். நண்பர்கள் முன்பே ஆடத் தெரியாத என்னை, ஒரு பெண் முன்னால் ஆடு என்றால் எப்படி ஆடுவது? சிம்ரனோ ஆடவேண்டாம் என்று சொன்னாலும் ஆடிக் கொண்டிருந்தார். ஒருவழியாக அந்தப் பாடலின் ஒருபகுதியைப் படம் பிடித்து முடித்து விட்டு, மாலை ஏழு மணி வாக்கில் குளித்து ஃப்ரெஷ்ஷாக டின்னர் சாப்பிட ரெஸ்டாரெண்டுக்குப் போனோம். அங்கே 'கல்கத்தா பிரியாணி' என்றொரு ஸ்பெஷல் அயிட்டம். நல்ல பசி, வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தேன். அப்போது இயக்குனர் வந்தார். அவரைப் பார்த்து 'கல்கத்தா பிரியாணி சூப்பரா இருக்கு', சாப்பிட



* மொட்டை மாடியில் சங்கர் மாஸ்டருடன் ஸ்டண்ட் பயிற்சி...



• சென்னை எழும்பூர் மியூஸியத்தில் நான் நடித்த முதல் ஷாட்!

லையா?'' என்றேன். ''இப்போ மட்டும் நல்லா வக்கணையா பேசு! பர்ஃபா மென்ஸ்ல கோட்டை விட்டுடு" என்று கோபத்தோடு பதில் சொன்னார். ரெஸ்டாரெண்டில் ஒட்டுமொத்த யூனிட்டின் கவனமும் என்மீது குவிந்து விட, எனக்கோ அங்கே நின்று சாப்பிடுவதா, இல்லை அங்கிருந்து போய்விடுவதா என்று கூடத் தெரியவில்லை. பலர் முன்னிலையில் நேர்ந்த அவமானம், எதற்கு நடிக்க வந்தோம் என்று எண்ண வைத்து விட்டது. அன்றிரவு தனிமையில் அழுதேன். சென்னைக்குத் திரும்பிப் போய் விடலாமா என்றுகூட நினைத்தேன். வஸந்த் சாரின் கோபத்தில் இருந்த நியாயம் என்னைத் தடுத்தது.

படப்பிடிப்பு முடிந்து சென்னைக்குத் திரும்பியதும் எனது முகவாட்டத்தைக் கண்ட அப்பா அருகே அழைத்தார். "இயக்குனருக்கும் உனக்கும் நடக்கும் விவாதங்கள், மனஸ்தாபங்கள், நல்லது கெட்டதுகளை வீட்டில் யாரிடமும் சொல்லாதே! டைரக்டர் உன்னைத் திட்டினால், அவர் ஹீரோவைத் திட்டுவதாக எடுத்துக் கொள். பாரம் நிரம்பிய வண்டியை மேட்டின் மேல் இழுத்துப் போகும் மாடுகள் உயிரைக் கொடுத்து முட்டி, மோதி இழுத்துப் போகுமே தவிர, உயிரே போனாலும் பின்வாங்காது. ஐந்தறிவு கொண்ட விலங்குகளே எடுத்த முயற்சியைக் கைவிடாதபோது, நாம் சிந்தனை பலம்கொண்ட மனிதர்கள். சவாலான சூழ்நிலைகளில் நம்மால் முடியும் என்று போராடி வெற்றி பெறுவதுதான் மனித வாழ்க்கை" என்று சொன்னது, பனிச்சென்று எனக்குள் புதுரத்தம் பாய்ச்சியது. எனது உடல் முறுக்கேறினால், மனமும் பலப்படும் என்று அப்பா நினைத்திருக்க வேண்டும். "சினிமாவில் நடிக்க டான்ஸ், ஸ்டண்ட் இரண்டும் அடிப்படை. நீ சட்டென்று நடிக்க வந்து விட்டதால் டான்ஸ் கற்றுக்கொள்ள அவகாசமில்லை. ஸ்டண்ட் கற்றுக் கொள்" என்று சங்கர் மாஸ்டரை ஏற்பாடு செய்தார். அவர் எம்.ஜி.ஆரின் ஸ்டண்ட் குரு. எம்.ஜி.ஆரைப் போலவே மது, புகைப் பழக்கம் இல்லாத அபூர்வ ஸ்டண்ட் கலைஞர். எங்கள் வீட்டின் மொட்டை மாடியில், முறையான சிலம்பம், ஜிம்னாஸ்டிக் என்று அவர் புகட்டிய ஸ்டண்ட், இன்னும் 'தீராத தீக்குச்சியைப் போல எனக்குள் தன்னம்பிக்கையை அணையாமல் காத்துக் கொண்டிருக்கிறது.

நேருக்கு நேர் படம் முடிந்து கடகட ரிலீஸானது. அன்று எனக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. ரசிகர்கள் நம்மை எப்படி எடுத்துக் கொள்வார்கள்? லப்-டப் இதய ஒலி காதுகள் வரையிலும் வந்து கலவரப்படுத்திக் கொண்டிருக்க, வீட்டை விட்டுக் கிளம்பி, உதயம் தியேட்டருக்கு வந்தேன். அங்கே முதல் பகல் காட்சி முடிய பத்து நிமிடங்கள் பாக்கி இருந்தது. படபடப்போடு தியேட்டரின் பிரதான கதவருகே வந்து நின்று கொண்டேன். படம் முடிந்து ரசிகர்கள் எழுந்தார்கள். வேகவேகமாய் வெளியே வந்த ஒரு ரசிகர் என் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டுச் சொன்னார், "சூப்பரா சொதப்பீட்டீங்க!"

(டைரியைத் தொடர்வேன்)

பாசக் கதை

நடப்பது நனவா, கனவா என்று செங்கமலத்தாச்சிக்கு ஒருகணம் புரியத்தான் இல்லை.

தன் துப்பட்டாவின் மடிப்பை மெல்லிய விரல்களால் நீவி, நாசூக்காக உதறி, தோளில் அதையும் ஒரு ஸ்டெதாஸ்கோப் போல போட்டுக்கொண்ட நாச்சியா, நிதானமாக தாயைப் பார்த்தாள்.

பிறகு மெல்லச் சொன்னாள்.

"என்னவோ, எல்லாமே வேகமா நடந்து போச்சும்மா. உன் பேச்சை மீறி, உன்னை அழ அழத் துடிக்க வெச்சுட்டு அந்த எழில்மலைதான் உசத்தின்னு ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். அஞ்சு வருஷ வாழ்வு அஞ்சு யுகம் மாதிரி போச்சு. இதோ இந்தப் பிரியாகுட்டிதான் அந்த யுத்தத்துல எனக்குக் கிடைச்ச ஒரே லாபம்... பிரியலாம்னு முடிவெடுத்துட்டேம்மா... மூணு மாசம் எனக்கு ஜெர்மனில ஒரு முக்கியமான ட்ரெயினிங் இருக்கு.... ப்ரியாகுட்டி இந்த மூணு மாசம் உன்னோட, இந்த தாமரைக்குளத்துலயே இருக்கட்டும்... சென்னைல இருக்கிற அவங்கப்பாகிட்ட வேணாம்... நான் திரும்பி வந்தபிறகு வக்கீலைக் கூப்பிட்டு முறைப்படி என்ன செய்யணுமோ செஞ்சுக்கலாம்..."

செங்கமலத்தாச்சி ஒருதடவை தன் உடலைச் சிலிர்த்துக்கொண்டாள். நம்ப முடியவில்லை. 'நாச்சியா வந்துவிட்டாளா? விட்டு விலகியா? யம்மா, தண்டுமாரி! கடைசில என் மகளை என்னிடம் சேர்த்துவிட்டாயா? சாதி, குலம், கோத்திரம், அந்தஸ்துன்னு இளவரசியாட்டம் வளர்த்த மகள், நெஞ்சுல ஒதைச்சுட்டுப் போனாளே, துள்ளத் துடிக்க குமுறிக்கிட்டு கெடந்தேனே, அந்த வேதனை புரிஞ்சுதா ஒனக்கு? ஓம் புள்ளைய கொண்டாந்து கடைசில என் கைலயே சேத்துட்டியாடி ஆத்தா!'

"என்னம்மா அப்படிப் பாக்குறே? உன் கோபம் தணியலையா இன்னும்? மன்னிக்க மாட்டியா என் தப்பை?"



"உணர்ந்துட்டியேடி என் ராசாத்தி, இது போதாதா எனக்கு?" என்று முதிய விரல்களால் மகளின் முகம் தொட்டு கோதினாள். "தாராளமாப் போயிட்டு வாடி என் தங்கம்... என் கறுப்புப் பேத்தியை சொக்கத் தங்கமா நான் பாத்துக்கறேன்."

சேவல் கூவிய பிறகுதான் விழிப்பு வர, செங்கமலத்தாச்சி சட்டென்று எழுந்தாள். பக்கத்தில் படுத்திருந்த

வி. உஷா

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2005ல் பிரசுரத்துக்குத் தேர்வான கதை



இருட்டை அகற்றும் நட்சத்திரம்

ப்ரியாகுட்டியைக் காணவில்லை.

"ப்ரியா! கண்ணு! ப்ரியா..." என்று குரல் கொடுத்தாள்.

"இதோ இங்க இருக்கேன் பாட்டி, தோட்டத்துல..." என்று இனிப்பான குரல் கேட்டது.

"தோட்டத்துல என்ன பண்ணுற?" முணுமுணுத்தபடியே பின்பக்கம் நோக்கி நடந்தாள்.

"வாக்கிங் பாட்டி.... அப்பா சொல்லியிருக்காரு... காலை வேளைகள்லதான் ஓஸோன் காத்துல ஆக்ஸிஜன் நிறைய இருக்குமாம்... கலப்படம் இல்லாத காத்தாம். தெனம் அப்பா என் கையைப் பிடிச்சுகிட்டுத்தான் வாக்கிங் போவார்..."

செங்கமலம் முகவாயைத் தோளில் இடித்துக்கொண்டாள்.

"காட்டுப்பய! காலைல ஒதுங்கறதுக்கு வாய்க்கா வரப்புன்னு சொம்பு தூக்கிப் போயே பழகின பய! இப்ப அரசாங்க மானியத்துல படிச்சு டாக்டராகிப்புட்டாப்பல, பெரிய சீமான் கணக்கா ஆயிடுவானா? வாக்கிங்காம் வாக்கிங்..."

"பாட்டி..."

"என்னடா கண்ணு?"

"ராத்திரி சரியா தூங்கலே நீ? என்னவோ முணுமுணுத்தியே..."

"மாத்திரை போட மறந்துட்டேன் கண்ணு..."

"அதெல்லாம் மறக்கவே கூடாது பாட்டி! இப்ப உடனே போட்டுக்க..."

"வெறும் வயித்துல போடக் கூடாதில்லே! ரெண்டு இட்லி ஆக்கி முழுங்கிட்டு, பெறகு போட்டுக்கறேன்" என்ற செங்கமலத்தை பேத்தி இடைமறித்தாள்.

"இப்பல்லாம் அப்படி இல்லையாம் பாட்டி! ப்ரஷர் மாத்திரையை காலைலயேகூட போட்டுக்கலாமாம்! அப்பா பேஷன்ட்கிட்ட சொல்லும்போது கேட்டிருக்கேன்... நீ மொதல்ல மாத்



நா.முத்துக்குமார்

சென்ற வருடம் 'காதல்', '7ஜி' படங்களுக்கு மட்டும் தனியாகப் பாடல்கள் எழுதிய முத்துக்குமார், இந்த வருடம் 35 படங்களுக்கும் மேல் தனியாகப் பாடல்கள் எழுதி வருகிறார்.

திரை போட்டுக்க... போ...போ..."

பிஞ்சு விரல்களால் நெட்டித் தள்ளிய குழந்தையின் அன்புக்கு உள்ளம் உடனே அடிபணிந்தது. ஆனால் உணர்வுகள் எரிச்சலுடன் நினைத்தன.

'எப்பப் பாரு அப்பா அப்பாங்குதே!"

"ஓ... ப்ரியா... இங்க வா..."

செல்போனில் என்னவோ செய்து கொண்டிருந்த ப்ரியா, பாட்டியிடம் வந்தாள்.

"குளிச்சியா?"

"குளிச்சுட்டேன் பாட்டி... ஏன்?"

"இந்தா..." என்று நீட்டினாள்.

"என்ன பாட்டி இது?"

ரகம் ரகமாக சீசாக்கள், ட்யூப்கள், திரவங்கள், பவுடர்கள், புட்டிகளில் ஏதேதோ கலவைகள்.

"எல்லாம் பட்டணத்துல இருந்து நான் வரவழைச்சது..." என்றாள் செங்கமலம் ரகசியமாக.

"எதுக்கு பாட்டி?" ப்ரியா வியந்தாள்.

"உன்னை செக்கச் செவேல்னு இளவரசி மாதிரி மாத்தறதுக்குத்தாண்டி என் கண்ணு..."

ப்ரியா நிதானமாக பாட்டியைப் பார்த்தாள். அளவாகப் புன்னகை செய்தாள்.

"கறுப்பா இருந்தா தப்பா பாட்டி?"

"என்னது?"

"கறுப்புங்கிறது உழைப்புக்கு அடையாளம்னு அப்பா சொல்லியிருக்கார் பாட்டி... வயல், காடு, நதியோரம்னு பரம்பரை பரம்பரையா உழைச்சவங்க உடம்பு கறுப்பாத்தான் இருக்குமாம்"

"நல்லா வக்கணையாத்தான் பேசுற..." செங்கமலம் அலுத்துக்கொண்டாள். விட்டுத்தான் பிடிக்கணும் என்று உள்ளே நினைத்துக்கொண்டாள்.

கோயிலுக்குப் போய்விட்டு வந்து கொண்டிருந்தார்கள் பாட்டியும் பேத்தியும். ப்ரியா கேட்டாள்...

"நான் கொடுத்த வாழைப்பழத்தை யானை அழகா சாப்டுடுச்சு பாட்டி. கோயிலுக்குக் கூட்டிட்டு வந்ததுக்கு ரொம்ப தேங்ஸ். ஆமா, தாத்தா கூட வருஷத்துக்கு நாலு தடவை அன்னதானம் செய்வாராம், பண்ணை ஆளுங்க குழந்தைங்க படிக்கணும்னா உதவி பண்ணுவாராம்... நெஜமா பாட்டி?"

"ஆமாண்டி கண்ணு! அன்னதானம் ஜமீன்னு பேரே இருந்துச்சு ஒரு காலத்துல... யாரு, அம்மா சொன்னாளா?" என்றாள் பெருமையாக.


"அப்பாதான் சொன்னார் பாட்டி. அய்யோ, பாரேன் அந்தப் பையன் சைக்கிள்ல இருந்து விழுந்துட்டான்... மைகாட்..."

ப்ரியா ஓடினாள். முன்னே சென்று கொண்டிருந்த பையனும், சைக்கிளும் விழுந்த இடம் அடைந்து, தன் பிஞ்சு விரல்களால் பையனைத் தூக்கி விட்டாள். திரும்பப் பாட்டியிடம் ஓடி வந்து தண்ணீர் பாட்டில் எடுத்து வந்து "இந்தா குடி, வாய ஆ... காட்டு" என்று ஊற்றினாள்.

"ரொம்ப தேங்ஸ்" என்றவன், சட்டென்று செங்கமலத்தைப் பார்த்துவிட்டு எழுந்து சைக்கிளை விறுவிறுவென்று தள்ளிக்கொண்டு நகர்ந்துவிட்டான்.

செங்கமலம் கத்தினாள். "புத்தி இருந்தாத் தானே! டர்ரு புர்ருன்னு ஓட்ட வேண்டியது, விழுந்து அடிபட வேண்டியது..."

"அடிபடாம யாருமே சைக்கிள் கத்துக்க முடியாதாம் பாட்டி... அப்பா சொல்லி யிருக்கார்... பாவம், நல்ல அடிபட்டிருக்கு..."



வைரமுத்து

தமது பெரும்பாலான நேரங்களை இனி இலக்கியத்துக்காகச் செலவிட முடிவெடுத்துள்ளார் வைரமுத்து. சினிமாவை விட அதிக சுதந்திரம் இலக்கியத்தில் கிடைப்பதுதான் காரணமாம்.

"அதான் சொன்னேன்ல, பட்டாத்தான் தெரியும் அந்த முட்டாப் பசங்களுக்கு! பிறவி அப்படி! மூளை அப்படி! யார் என்ன செய்ய முடியும் இதுக்கு? வாங்கிட்டு வந்த வரம் அப்படி! நாச்சியாகிட்ட எவ்வளவு அடிச்சுக்கிட்டேன் தெரியுமா? என் பேச்சை மீறிப் போனா, அழுதுக்கிட்டு வந்து நிக்கறா! இதுகளைத் திருத்த யாராலும் முடியாது..."

"இல்லே பாட்டி... அவங்களுக்கும் நல்ல படிப்பு கொடுத்து, கரன்ட்டு, சாப்பாடுன்னு கொடுத்தா போதும் பாட்டி... மூளை எல்லாருக்கும் ஒண்ணுதான் தெரியுமா? படிப்பும் மூளையும் ஒண்ணு சேர்ந்தா, யார் வேணா பெரிய ஆளா வரலாம்னு அப்பா சொல்லுவார் பாட்டி..."

"சரி சரி... இப்படித் திரும்பு... இந்த வழியாத்தான் போகணும் வீட்டுக்கு..."

"ஏன் பாட்டி? இது சுத்து வழியில்லே? அந்தத் தெரு வழியா போனா சீக்கிரம் போயிடலாம்தானே?"

"அங்கல்லாம் குடிசைங்களா இருக்கும்டி ப்ரியா. சாக்கடை ஓடும். பன்னிங்க நடமாடும். ஒரே நாத்தமா இருக்கும். திணைத்தடில சண்டை போடுவாங்க பொம்பளைங்க, வா...வா" கிழவி, பேத்தியின் கையைப் பற்றி இழுத்தபடி நடந்தாள்.

இன்னும் விடிவதற்கு நேரமிருந்தது.

ப்ரியா நல்ல தூக்கத்தில் இருப்பதைப் பார்த்தபடியே செங்கமலம் எழுந்து உட்கார்ந்தாள்.

வலி! நெஞ்சின் ஆதாரமான மையப் புள்ளியில் சுருக்கென்று ஒரு வலி! அய்யோ! பிடித்துக்கொண்டாள்! ஒரு கணம்தான்! உடனே மறுபடி சுருக்! மறுபடி வலி! மின்னல் பாய்வது போல... பரவிப்... படர்ந்து...

"ப்ரி...யா... ப்ரி...யா..." தொண்டை கிழிவது போலக் கத்தினாள்.

"அய்யோ, என்ன பாட்டி..." ப்ரியா உடனே விழித்துக்கொண்டாள்.

"என்ன பாட்டி இப்படி வேர்த்திருக்கு? என்ன ஆச்சு? என்ன பாட்டி...?"

கிழவியின் முகம் வலியில் துடித்தது. உடல் ராட்டினம் போலச் சுழன்றது. நெஞ்சுக்குள் பாறைகளை வைத்து யாரோ சிதைப்பது போல தாங்க முடியாத வலி. உடல் வியர்த்து வழிந்தது. தொண்டை அடைத்தது.

"மா...மா...த்...ரை..." என்று சொல்வதற்குள் தலை கிறுகிறுத்தது. கண்கள் செருகத் தொடங்கின.

ப்ரியா ஓடினாள். போனை எடுத்து தந்தையின் எண்களைப் போட்டாள். காத்திருந்தாள்.

"ப்ரியாம்மா... என்னடா கண்ணு, இவ்வளவு காலைல?" என்று எழில்மலையின் குரல் கேட்டது.

"பாட்டி நெஞ்சு வலில துடிக்கிறாங்கப்பா... மாத்திரைன்னு சொன்னாங்க... டப்பால நெறைய மாத்திரைங்க இருக்குப்பா... எது கொடுக்கணும்னு தெரியலேப்பா..." ப்ரியாவின் அச்சம் தழுதழுப்பில் தெரிந்தது.

"சரிம்மா... மொதல்ல பயப்படாதே... பாட்டி ஒரு ஹார்ட் பேஷன்ட்... சார்பிட்ரேட்னு ஒரு மாத்திரை இருக்கும் பாரு... எடு அதை... பதட்டப்படாம எடு..."

"கலர் கலரா சைஸ் சைஸா... ஏகப்பட்டது இருக்குப்பா... எதுப்பா, தெரியலேப்பா..." ப்ரியா சரசரவென்று தேட, கிழவியின் சுவாசத்தில் தடை ஏற்பட்டது. வியர்வை கொப்புளித்தது.

"சரி... வேகமாப் படி... என்னென்ன மாத்திரை இருக்குன்னு சொல்லு..." எழில்மலை பொறுமையாகக் கேட்டான்.

"ஆர்இபிரசிடு... இப்படி ஒரு மாத்



Mr.மெட்ராஸ்

திரைப்பா... ஏஇஸட்டிஓ இப்படி ஒண்ணு... அப்புறம் இ சி ஏ வி ஐ டி இன்னு ஒரு மாத்திரை... எஸ் ஏ ஆர் பி ஐ டி ஆர் ஏ டி இன்னு..."

"அதுதான்! சார்பிட்ரேட்! உடனே அதை எடு ப்ரியா... பாட்டியோட நாக்குக்கு அடில வை... உடனே வெளிலே போ... யாரை யாவது கூப்பிடு. கார், வண்டி, ஆட்டோ எது கெடைச்சாலும் ஏறி, பாட்டியை ஆஸ்பிடலுக்கு அழைச்சுட்டுப் போ... க்விக் ப்ரியா... திஸ் இஸ் அன் கோல்டன் அவர் அண்ட் யூ ஆர் தி ஸேவியர்... ஆக்ட் ஃபாஸ்ட்..."

"சரிப்பா... செய்யறேம்பா... இதோப்பா..."

ப்ரியா உறையைப் பிரித்தாள். மாத்திரை எடுத்துப் பாட்டியின் வாயைத் திறந்து நாக்கடியில் வைத்தாள். எச்சில் சேர்ந்து மாத்திரை கரையத் தொடங்குவதை உறுதி செய்துகொண்டு வாசலுக்கு ஓடினாள். சைக்கிளில் சென்று கொண்டிருந்த பால்கார கோனாரிடம் சொல்லி ஏறிக்கொண்டு, ஆலமரத்து ஜங்ஷனுக்கு வந்தாள். நின்றிருந்த ஒரே ஒரு ஆட்டோவில் ஏறி வீட்டுக்கு வந்து, பாட்டியை எழுப்பி, தூக்கி வண்டியிடம் கொண்டு வந்து, வண்டி விரைந்து, ஆஸ்பிட்டல் வந்து...

"ஒரே ஒரு டாக்டர் இருக்கார்ப்பா... உன் பேர் சொன்னேம்பா... உடனே பாட்டியைக் கவனிக்கிறாருப்பா" என்று தந்தையிடம் சொன்னபோது குழந்தையின் குரல் சமனப் பட்டிருந்தது.

கிழக்கில் இன்னொரு அழகிய விடியல் ஏற்பட்டு விட்டது. செங்கமலம் பிழைத்து விட்டாள்.

"பாட்டி..." குழந்தையின் ஸ்பரிசம் ஒரு தாயின் வருடல் போல தேகத்தைச் சிலிர்க்க வைத்தது. "காபி, டீ வேண்டாம் பாட்டி... மோர் குடிக்கிறியா? தாயம்மாகிட்ட மோர் கொண்டு வரச் சொல்லவா?" என்றாள்.

"ப்ரியா..."

"என்ன பாட்டி?"

"அம்மா நம்பர் தெரியுமா உனக்கு?"

"தெரியும் பாட்டி... ஏன்?"

"பேசணும் நான்... இப்பவே... உடனே..." என்றாள் குரல் தழுதழுக்க.

"அப்படி என்ன பாட்டி அவசரம்? இன்னும் கொஞ்ச நாள்லதான் அம்மா வந்துடுவாங்களே..."

"இல்லடா கண்ணு! ரொம்ப அவசியம் இது..."

"என்கிட்ட சொல்லு பாட்டி... நான் சொல்றேன். நீ நல்லா ரெஸ்ட் எடுக்கணும்னாரே டாக்டர்! அம்மா வந்தபிறகு நீ ஆபரேஷன் செஞ்சுக்கணும்னாரே... மறந்துட்டியா?"

"ஒரே ஒரு காரியம் அம்மா செஞ்சா போதும்டா கண்ணு... உடம்பு குணமாய்டும் எனக்கு... முழுக்க முழுக்க குணமாய்டும்..." என்றபோது அவள் கண்கள் பனித்தன. "அப்பாகூட சண்டை போட மாட்டேன், இனிமே நல்லபடியா அவர்கூட சேர்ந்து வாழ்வேன்னு ரெண்டு வார்த்தை சொல்லணும் உன் அம்மா! போதும் எனக்கு. யானை பலம் வந்துடும்... சொல்வாளா... உன் அம்மா?"

"எனக்கு எப்படித் தெரியும் பாட்டி? நான் சின்னப் பொண்ணுதானே?" என்றாள் ப்ரியா. ○



அன்பு வளர்!

தற்கால நிலையில் நாம் என்ன நினைக்கிறோம்? 'நமக்கு வருகிற கஷ்டத்தைப் பிறத்தியான் போக்கணும். நமக்குத் தரித்ரமா, பிறத்தியான் நமக்கு அள்ளிக் கொடுக்கணும். நமக்கு வியாதியா, பிறத்தியான் சுச்ருஷை பண்ணணும். நமக்கு ஒரு காரியம் பாரமா இருக்கா, அதைப் பிறத்தியான் தலையில் கட்டிவிட வேண்டும்' - இப்படித்தானே நினைக்கிறோம்? இதை அப்படியே மாற்றி நம் இடத்தில் பிறத்தியானை வைத்து, அவனுக்கு எந்த விதத்தில் கஷ்டமானாலும் அதை நாம் போக்கணும் என்று ஆக்கிக் கொண்டு விட்டால், அதுதான் 'ஆத்மௌபம்யம்'. இன்னொருத்தனைக் கஷ்டப்படுத்தியாவது நாம ஸந்தோஷம் அடையணும் என்று இப்போது நினைப்பதில், 'இன்னொருத்தன்', 'நாம்' என்கிற இரண்டு பேரின் இடத்தையும் 'இன்டர்சேஞ்ஜ்' பண்ணிவிட்டால், பரஸ்பரம் இடம்மாற்றி விட்டால் போதும். அன்பு என்ற ஒன்றை வளர்த்துக்கொண்டு விட்டால் இந்த ஆத்மௌபம்யம் தன்னால் ஸித்தித்துவிடும் என்று திருக்குறளிலிருந்து தெரிகிறது. விச்வ வியாபகமான அன்பு இல்லாமல், நம்மிடம் மாத்திரமே நாம் அன்பு பாராட்டிக் கொண்டிருக்கும்போது, பிறத்தியானுக்கு ஸௌக்கியம் தருகிற எல்லாமும் நம்மிடம் வந்துவிட வேண்டுமென்று நினைக்கிறோம்; உத்தமமான அன்புக் குணம் நமக்கு வந்துவிட்டாலோ, இது அப்படியே மாறி, பிறத்தியாருக்கு நம்முடைய ஸகலத்தையும் கொடுத்துவிட வேண்டுமென்று தோன்றிவிடும். ஸகலத்தையும் என்பதற்கு 'நம்முடைய எலும்பையும்' என்று திருவள்ளுவர் சொல்கிறார். அதாவது ததீசி மஹரிஷி தம்முடைய முதுகெலும்பையும் தேவ கார்யத்துக்காகக் கொடுத்ததுபோல, உயிரையும் தியாகம் செய்வதே அன்புடைமை என்கிறார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

வலைபாயுதே



• நான் யார் தெரியுதா?

அனுப்பி ராஜா அனுப்பி!


இசை : அக்காலத்து 'மன்மத லீலையை- வென்றார் உண்டோ' முதல் இன்று உங்களைத் தாளமிடவைக்கும் 'மன்மத ராசா!' வரை தமிழ்த் திரையிசை நடந்து வந்த பாதையைப் படம் பிடிக்கும் வரலாற்றுத் தொடர் - 'பாட்டொன்று கேட்டேன்!' தயாரித்து வழங்கிக் கொண்டிருப்பவர் சம்பத்குமார். கிடைக்குமிடம் www.bbc.co.uk/tamil/ பி.பி.சி.யின் தமிழ்த் தளம் இது. இங்கே இந்தத் தொடர், ஆடியோ வடிவில் கிடைக்கிறது. தெளிவான குரலில் பாகவதர், என்.எஸ்.கே., ஜமுனா ராணி, சீர்காழி கோவிந்தராஜன், சந்திரபாபு என தமிழ்த் திரையுலகில் குரலோவியம் படைத்த பலரின் வாழ்க்கை வர்ணனைகள் மிக அழகாக, பொருத்தமாக மிக்ஸ் செய்யப்பட்ட பாடல்களுடன் கிடைக்கின்றன.

டௌன்லோட் : உங்ககிட்ட இருக்குற எல்லா போட்டோலயும் விறைப்பா நின்னு, போட்டோகிராபரைப் பார்த்து முறைச்சுக்கிட்டு ஒரே ஃபார்ம்ல இருக்கீங்களா நீங்க? அதுல எதையாவது ஸ்பெஷலா மாத்தணும்னு நினைக்கறீங்களா! www.efreedown.com/screenshot_113763.htmlக்குப் போங்க. 'கார்ட்டூனிஸ்ட்' அப்படீங்கற அப்ளிகேஷனை இறக்குமதி பண்ணுங்க. இனிமே ஒரே காமெடிதான். ரொம்ப ஈஸியா இதை உபயோகிச்சு, போட்டோவுல இருக்குற உங்க 6 செ.மீ. மூக்கை 2 செ.மீ. அளவுக்குக் குட்டியாக்கலாம். வாயை மணிபர்ஸ் அளவுக்குப் பெருசா ஆக்கலாம். யோசிச்சுப் பாருங்க, சாதாரண போட்டோவை காமெடி போட்டோவா மாத்தி எல்லாரையும் கலாய்க்கலாம். ஜமாய்ங்க.

வலைப்பதிவு : பிலி எனப்படும் பில டெல்பியாவில் கால் வைத்து ஒரு மாத மாகிவிட்டது. ஒரு பத்துப் பதினைந்து நாட்கள் சோற்றுக்குச் சிங்கியடித்ததில் ரைசின் ப்ரான், சப்வே வெஜ்ஜி பாட்டி, உறைய வைத்த உணவுப் பண்டங்கள் என்று சகலமும் தோழமையாகியிருக்கிறது. கூடவே பஞ்ச புட்டு, சுகியன், சம்மந்திப்பொடி என்று மலையாளத்துச் சாமான்களும், நடப்பன, ஊர்வன, பறப்பன எல்லாம் சமபந்தி போஜனத்துக்காக ஐக்கியமாகியிருக்கின்றன. அம்மா, அப்பா தவிர, மற்ற அனைத்தும் உறைய வைத்து கிடைக்கின்றன. (Suvadu.blogspot.com-வலைப் பதிவில் ஷங்கர்.)

- வலைஞன்

அட!



வயசுக்கு மரியாதை!

அவர்கள் முதலில் அந்தச் சிறுமியிடமிருந்து திருடியது செய்ஜா ஸ்டோஜ்கா எனும் அவளது பெயரைத்தான். அப்பொழுது அவளுடைய வயது பத்து. வியன்னாவில் உள்ள ஒரு பள்ளியில், ஒரு சிறிய வகுப்பறையில் சத்தம் போட்டு எதையோ படித்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் திடீரென்று உள்ளே நுழைந்த நாஜி வீரர்கள், சாயாவை (இந்திய உச்சரிப்பின்படி) வெளியே இழுத்து வந்து, அவளது இடது கையில் நீல மையினால் Z6399 என்று அழுத்தமாகப் பச்சை குத்தினார்கள். பிறகு ஆஸ்க்விட்ஸ் மரணச் சிறையில் 11,000 ஜிப்ஸிக்களோடு அவளும் அடைக்கப்பட்டாள் (ஹிட்லரைப் பொறுத்த வரையில் ஜிப்ஸிக்கள் அசுத்தமானவர்கள், வாழ லாயக்கற்றவர்கள். அவர்களுக்கு பெயர்கூட அநாவசியம்தான்).

இன்று அந்தச் சிறுமியின் வயது 71. முகத்தில் நிறைய சுருக்கங்கள். தமது வீட்டில் நிறைய பூந்தொட்டிகளை வாங்கி வைத்து வளர்த்துக் கொண்டிருக்கிறார். நேரம் கிடைக்கும்பொழுது ஓவியங்கள் தீட்டுகிறார் (''என் தந்தை நன்றாக வரைவார்''). தொலைந்து கொண்டிருக்கும் ஜிப்ஸி இன மக்களின் இசையை மீட்டுக் கொண்டிருக்கிறார். இவர் எழுதிய We Live in Seclusion : Memoris of a Romni, ஒரு ஜிப்ஸி ஆஸ்க்விட்ஸ் அனுபவங்கள் பற்றி எழுதி வெளிவந்திருக்கும் முதல் நூல்.

ஓவியங்களைப் பற்றி ஏதாவது கேட்டால், மென்மையாகப் புன்னகை செய்தபடி பதிலளிக்கும் இவரிடம் ஆஸ்க்விட்ஸ் பற்றிக் கேட்டால் மட்டும் சத்தமே வருவதில்லை. ஏன்? "நான் அனுபவித்த சிரமங்களைப் பற்றி என்னால் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்க முடியாது. ஒவ்வொரு முறையும் அந்தச் சம்பவங்களைப் பற்றி நான் யோசிக்கும்பொழுது, அந்த நிமிடங்களை மீண்டும் நான் வாழ்வது போல் உணர்கிறேன்" என்கிறார்.


1945ல் பிரிட்டன், ஆஸ்க்விட்ஸை விடுவித்தபொழுது, 11,000 ஜிப்ஸிக்களில் எஞ்சியிருந்தவர்கள் சாயாவைச் சேர்த்து 2000 பேர்தான். 1942 முதல் "அப்பா எங்கே?" "அப்பா எங்கே?" என்று தன் அம்மாவிடம் கேட்டுக் கொண்டிருந்த சாயாவுக்கு 2003ல்தான் தன் தந்தை கொல்லப்பட்டது தெரிந்திருக்கிறது. இவரது தம்பி இளம் வயதிலேயே இறந்து போனான். மருத்துவப் பரிசோதனைகளுக்காக எலிக்கு பதிலாக வேறொரு உயிர் தேவைப்பட்டபொழுது, அவனை மருத்துவர்கள் உபயோகப்படுத்திக் கொண்டார்கள். அவன் உயிருடன் இருந்தபொழுதே!

கார்ட்டூனுக்கு எத்தனையோ ஸ்கோப் இருந்தும் என்னைப் போட்ட ஆர்ட்டிஸ்ட் வாழ்க!

ஆஸ்க்விட்ஸ் மீண்டு 60 வருடங்கள் ஆகிவிட்டதை அடுத்து, இந்த வருடம் முழுக்க சாயா பற்றிய ஒரு சிறப்புக் கண்காட்சி வியன்னாவிலும் பிற நாடுகளிலும் நடைபெறப் போகிறது. சாயாவின் ஓவியங்கள், அவர் மற்றும் அவர் குடும்பத்தினரின் புகைப்படங்கள் (பெரும்பாலானவர்கள் உயிருடன் இல்லை) போன்றவை கண்காட்சியில் இடம் பெறும்.

பெருககளை 'பெருககள்' என்று





அநாகரிகமாகச் சொல்லாமல் 'வயதானவர்கள்' என்று பணிவோடு விளிப்பது ஜப்பானியர்களின் வழக்கம். இப்படி விளிப்பதோடு நிறுத்திக் கொண்டாலும் பரவாயில்லை. ஒரு தாத்தாவோ, பாட்டியோ எதிரே வந்துவிட்டால், தலைபோகிற அவசரமாகயிருந்தாலும் ஸ்கூட்டரை நிறுத்தி அணைத்துவிட்டு நிதானமாக முதுகை நேர்க்கோட்டில் வளைத்து வணக்கம் செலுத்துவார்கள் (ஆபீஸுக்கும் சரியான நேரத்துக்குப் போய்ச் சேர்ந்து விடுவார்கள்). மூச்சுக்கு முன்னூறு தடவை மரியாதையோடு 'சான்' போட்டுப் போட்டு பேசுவார்கள் ("சான் பெரியவரே, சான் நேற்று, சான் எங்கே சான் போயிருந்தீர்கள் சான்?").

வாக்கிங் ஸ்டிக் நுனியால் தூங்கிக் கொண்டிருக்கும் தாத்தாவின் காலைச் சொறிந்து 'பால் பாக்கெட் வாங்கியா' என்று துரத்த மாட்டார்கள். 'இந்தா இதிலே சாஞ்சிக்கிட்டு கம்மாயிரு' என்று ஈஸிசேரை மடக்கி வாசலுக்கு வெளியிலோ, தோட்டத்துக்குப் பின்புறமோ போடமாட்டார்கள். பெருசுகளுக்கே, அதாவது வயதானவர்களுக்கே கூச்சம் வரும் அளவுக்கு விழுந்து விழுந்து வணங்குவார்கள்.

அதனால்தானோ என்னவோ, நூறு வயதைக் கடந்தவர்களின் எண்ணிக்கை ஜப்பானில் ஒவ்வொரு வருடமும் பெருகிக் கொண்டே போகிறது (சென்ற வாரக் கணக்கெடுப்பின்படி இவர்களது எண்ணிக்கை 25,606). கடந்த செப்டம்பர் 19ம் தேதியன்று 'வயதானவர்களை மதிக்கும் நாள்' எனும் பெயரில், ஒரு குட்டித் திருவிழாவை நடத்தியிருக்கிறார்கள். இது தேசிய விடுமுறை நாள் வேறு. கேட்க வேண்டுமா? நூறு வயதைக் கடந்த ஒவ்வொருவருக்கும் ஒரு சான்றிதழும் கோப்பையும் கொடுத்து கௌரவித்திருக்கிறார்கள். கொடுத்து வைத்த பெருசுகள். மன்னிக்கவும் வயதானவர்கள்.

மதிப்பும் மரியாதையும் வயதானவர்களுக்கு மட்டும் கிடைப்பதில்லை. வயதான திரைப்படங்களுக்கும் கிடைக்கும் என்று லண்டன் திரைப்பட விழா நிரூபித்திருக்கிறது. அக்டோபர் 19 அன்று Treasures from the Archieves எனும் பெயரில், பலத்த வரவேற்பு பெற்ற பழைய திரைப் படங்களைத் திரையிடப் போகிறார்கள். சார்லி சாப்ளினின் படங்கள் மட்டும் மொத்தம் நான்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலிருந்து இந்தி ('ஷோலே' 'அந்தர மஹால்'), வங்காளம் (15, பார்க் அவென்யூ) மற்றும் மலையாள ('கலாமண்டபம் ராமன்குட்டி நாயர்' 'சஞ்சாரம்') மொழிப் படங்கள் லண்டன் விமானத்தில் பயணிக்கப் போகின்றன. தமிழ்ப் படம்? உண்டு. ஆனால் ஒன்றே ஒன்று. 'காதல்'.

- மருதன்

டயமாச்சு யமுனா!

கே.பி.ஜனார்த்தனன்

5 நிமிஷத்தில் 2 புடைவை எடுக்க எந்தப் பெண்ணால்தான் முடியும்?

"அதெல்லாம் முடியாது. உனக்குப் பிடிச்சதா ரெண்டு ஸாரி இன்னிக்கே எடுத்துக் கொடுத்தாத்தான் ஆச்சு!" என்று மனைவி யமுனாவை இழுத்துக் கொண்டு தியாகு அந்த ஜவுளிக்கடையில் நுழையும்போது, மணி இரவு எட்டரையைத் தாண்டியிருந்தது.

கடையில் இருந்த பெண்ணிடம், "நல்ல கலராப் பார்த்து எடுத்துப் போடும்மா" என்றவர், கடைக்காரரிடம், "கடையைப் பூட்டப் போறீங்களா?" என்றார்.

"அதெல்லாமில்லை. டேக் யுவர் டைம். நீங்க எடுத்து முடிக்கிறவரை வெயிட் பண்றோம்."

அதற்குள் அந்தப் பெண் சில புடைவைகளை எடுத்துப் போட்டாள். யமுனா பார்க்கத் தொடங்கினாள்.

அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்த தியாகு கேட்டார், "உன்னை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே. பி.கே.புரமா?"

"இல்லீங்க... பெரியபாளையம்."

பத்து நிமிடம் கூட ஆகவில்லை. இருப்புக் கொள்ளாமல் தவித்த தியாகு, "சரி, சரி, செலக்ஷன் கிடைக்கலேன்னா பரவாயில்ல. நாளைக்கு வந்து பார்க்கலாம். புறப்படு" என்றார்.

"இன்னும் ஒரு ஸாரி கூட எடுக்கலீங்க!"


"பரவாயில்ல. டயமாச்சு. விஷாக் வீட்டுக்கு வந்திருப்பான்."

"அவன்கிட்டதான் இன்னொரு சாவி இருக்கே?"

"சாவியை எடுத்தானோ என்னவோ? கிளம்பு, போயிடலாம்."

கோபத்தை அடக்க முயன்றாள் யமுனா. 'வேண்டாம், வேண்டாம்' என்றவளை 'இன்னிக்கே வாங்கியாகணும், அடுத்த வாரம் உனக்குப் பிறந்தநாள்' என்று இழுத்து வந்துவிட்டு, இங்கே வந்து அவசரப்படுத்தினால் எப்படி? ஐந்து நிமிஷத்தில் ரெண்டு புடைவை எடுக்க எந்தப் பெண்ணால்தான் முடியும்?

"சார் என்ன அதுக்குள்ள கிளம்பிட்டீங்க? இன்னும் நிறைய வெரைட்டி இருக்கு..." என்ற கடைக்காரரிடம்,



"நாளைக்கு வர்றோம்" என்றுவிட்டு வெளியே வந்தார் தியாகு. பின்னாலேயே வந்த யமுனா வெடித்தாள் யமுனா. "இதுக்கு என்னை நீங்க கூப்பிடாமலே இருந்திருக்கலாம்!"

"ஏம்மா, காரணமில்லாம அப்படிச் சொல்வேனா?" என்ற தியாகு தொடர்ந்து, "நீ புடைவையைத்தான் பார்த்துட்டிருந்தே. ஆனா, நமக்கு புடைவை எடுத்துப் போட்ட அந்தப் பெண்ணின் கண்ணில் ஒரு மிரட்சி இருந்ததை நீ கவனிக்கல. கடிகாரத்தை நொடிக்கொருதரம் பார்த்ததைக் கவனிக்கல. அதான் அவள் எந்த ஏரியாங்கிறதை மறைமுகமா

ஈரக் கதை

விசாரிச்சேன். இனிமே அவள் பஸ் பிடிச்சு பெரியபாளையம் வரை போகணும். பாவம் சின்னப் பெண். நேரம் ஆக ஆக தவிப்பு இருக்காதா? கடைக்காரர் வர்ற கஸ்டமரைப் பார்ப்பாரா, அவள் கஷ்டத்தைப் பார்ப்பாரா? அதான் நைஸா நழுவிட்டேன். நாளைக்கு இதே கடைக்கு நேரத்தோடு வந்து, ஆற அமர இருந்து ரெண்டுக்கு மூணு ஸாரி எடுத்துரலாம்" என்றார்.

யமுனாவின் வருத்தம் மறைந்தது. ●



ஒரு படகோட்டி. அவன் தினமும் காலையில் ஆரம்பித்தால் இருட்டுகிற வரை ஜனங்களை இக்கரையிலிருந்து அக்கரைக்கும், அங்கிருந்து இக்கரைக்கும் ஏற்றிச் செல்வான்.

வழக்கத்தைவிட அதிகமான வருமானம் அவனுக்கு அன்றைக்குக் கிடைத்தது. "சரி! இன்றைக்கு வாழ்க்கையைக் கொஞ்சம் சந்தோஷமாக அனுபவிக்கலாமே!" என்றது அவனது இடுப்பிலே முடிந்து வைக்கப் பட்டிருந்த உபரி வருமானம்.

நேரே சாராயக் கடைக்குப் போனான். பாவம்! சந்தோஷம் என்றால் அவனுக்குத் தெரிந்த வழி அதுதான்! குடித்துவிட்டு, தட்டுத் தடுமாறி நடந்து படகுத்துறைக்கு வந்தான்.

படகிலே ஏறி உட்கார்ந்தான். துடுப்பைக் கையில் எடுத்தான். மயக்க நிலையில் இருந்தாலும் தன் பலத்தையெல்லாம் பிரயோகித்து, துடுப்புப் போட்டான். சிறிது நேரத்தில் துடுப்புப் போட்ட களைப்பில் அப்படியே படகில் சரிந்து தூங்கிப் போனான்.

காலைப்பொழுது விடிந்தது. போதை தெளிந்து கண் விழித்துப் பார்த்தான் படகோட்டி. ஒன்றுமே புரியவில்லை. இரண்டு கைகளாலும் ஆற்றுத் தண்ணீரை அள்ளி முகத்தில் தெளித்துக்கொண்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். 'ராத்திரி மறுகரையில் உள்ள வீட்டுக்குப் போவதற்காக படகில் உட்கார்ந்து புறப்பட்டோமே! இன்னும் ஏன் அக்கரைக்குப் போகாமல், இக்கரையிலேயே இருக்கிறோம்?' என்று ரொம்பவே குழம்பிப் போனான்.



'ராத்திரி முழுக்கத் துடுப்புப் போட்டோமே! அப்புறம் ஏன் படகு புறப்பட்ட இடத்திலேயே இருக்கிறது?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். படகைச் சுற்றி தன் பார்வையைச் சுழலவிட்டான்.

விஷயம் பிடிபட்டுவிட்டது. படகு, கரையை ஒட்டிய ஒரு தூணில் கட்டி வைக்கப்பட்டிருந்தது. 'அடடே! புறப்படுகிற போது, இந்தக் கயிற்றை அவிழ்க்கவில்லை. அதனால்தான், படகு இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. சாராய மயக்கத்தில் இது தெரியாமல், நாம் ராத்திரி துடுப்புப் போட்டிருக்கிறோம்' என்று அவனுக்குப் புரிந்தது.

கயிற்றை அவிழ்த்து விட்டான். துடுப்பைப் போட ஆரம்பித்ததும், படகு நகரத் தொடங்கியது. சிறிது நேரத்தில் மறு கரை போய்ச் சேர்ந்தான் அந்தப் படகோட்டி.

சாராய மயக்கத்தில் அந்தப் படகோட்டி செய்த காரியத்தைத்தான் இன்று நிறையப் பேர் செய்துகொண்டு இருக்கிறார்கள். ஈகோ என்கிற கயிற்றால் கட்டப்பட்டு இருப்பதன் காரணமாக, அந்த மனிதர்கள் வாழ்க்கையில் ஒரே இடத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள். ஈகோ என்ற கயிற்றினை வெட்டி விடாமல், அவர்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், ஒரு பயனும் இல்லை; அவர்களால் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து அடுத்த கட்டத்துக்கு முன்னேறிச் செல்ல முடிவதில்லை.

சரி! ஈகோ என்பது என்ன?





வாலி

பத்திரிகைப் பேட்டி என்றால் மறுத்து விடும் வாலி, பொது நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அதிக ஆர்வம் காட்டி வருகிறார்.

நான், என் குடும்பம், என் நண்பர்கள், என் தொழில் என்று ஒரு குறுகிய வட்டத்துக்கு அதீத முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிறோமே அந்த சுயநலம்தான், அந்த மனப்போக்குதான், அந்த பந்தம்தான் ஈகோ! அதைக் கத்தரித்து விடுங்கள். தன்னலமற்ற மனப்பான்மையுடன் இந்தப் பரந்த உலகத்தைப் பாருங்கள். இதுவரை நீங்கள் பார்த்திராத ஒரு புதிய உலகம் உங்கள் பார்வைக்குப் புலப்படும்.

எதைச் செய்தாலும், பலருக்கு அதனைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்; பலருக்கும் எல்லாவிதங்களிலும் பயன்படத்தக்க முறையில் செய்ய வேண்டும் என்கிற அணுகுமுறையே இருப்பதில்லை. "இதைச் செய்வதால், எனக்கு என்ன நன்மை? எனக்கு என்னென்ன பலன்கள் கிடைக்கும்?" என்றுதான் பலரும் கணக்குப் போட்டுப் பார்க்கிறார்கள்.

பகவத்கீதையைப் படிப்பதால் என்ன பலன்? என்று கேட்டால், "நண்பா! பகவத்கீதையைப் படிப்பதால் என்னென்ன நன்மைகள் எல்லாம் உனக்குக் கிடைக்கப் போகிறது தெரியுமா?" என்று கேள்வி கேட்டு, நன்மைகளைப் பட்டியல் போடுவது என்பது சற்றும் சாத்தியமில்லாத காரியம். 'நீ உண்மையை அறிந்து கொள்ள முடியும்'. இதுதான் கீதையினால் ஏற்படக்கூடிய ஒரே பலன். சரி! உண்மையின் மதிப்பு என்ன? இந்தக் கேள்வியைக் கேட்டால் என்ன பதில் கிடைக்கும் தெரியுமா? உண்மை விலைமதிக்க முடியாதது.

"அதெல்லாம் சரி! எனக்குப் பயன் ஏதும் இல்லை என்றால், நான் அதுபற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? அக்கறை காட்ட வேண்டும்?" என்று கேட்டுவிட்டு, நீங்கள் பாட்டுக்கு உங்கள் வழியில் போகிற ஆசாமியாக இருந்தால், உங்களுக்காகப் பரிதாபப்படலாம்! அவ்வளவுதான்! உண்மையை அறிதலின் மதிப்பை உணர்ந்து, அதை அனுபவித்து, ஆனந்தப்பட விரும்புபவராக நீங்கள் இருக்கும் பட்சத்தில், கீதை உங்களுக்குக் கைகொடுக்கும் கையாக இருக்கும்! உங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் உண்டாகும்.

ஒரு சிறு துணியை எடுத்துக் கொள்ளுங்கள். அதை உற்று நோக்குங்கள். அதில் என்ன இருக்கிறது? 'நூல்' என்று சொல்லுவீர்கள். இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து பாருங்கள். அந்த 'நூல்' என்பது என்ன, பஞ்சிலிருந்து உருவாக்கப்படுவது. இப்போது யோசித்துப் பாருங்கள். அந்தத் துணியிலிருந்து பஞ்சை நீக்கிவிட்டால், என்ன மிஞ்சும்? ஒன்றும் மிஞ்சாது. பஞ்சு இல்லை என்றால், அந்தத் துணியும் கிடையாது. ஆக, பஞ்சுதான் துணி; பஞ்சின் இன்னொரு வடிவம்தான் துணி.

ஆர்ப்பரிக்கும் கடலுக்கு முன்னால் நின்று கொண்டு, கண்ணுக்கெட்டிய தூரம் வரை உங்கள் பார்வையைச் செலுத்துங்கள். உங்கள் கண்களுக்குப் புலப்படுவது என்ன? கடல்தானே! கடல் என்பது எதனால் ஆனது? தண்ணீர். ஒட்டுமொத்தமாக அங்கு வியாபித்திருக்கும் தண்ணீருக்கு மனிதன் சூட்டியுள்ள பெயர்தான் கடல்! ஆனால் கடல் வேறு; தண்ணீர் வேறு அல்ல. தண்ணீர் இல்லாமல் கடலை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? ஆக, தண்ணீர்

விலை விலை வி

அந்த இடத்தில் எடுத்துள்ள உருவத்துக்கு நாம் வைத்திருக்கும்

பெயர்தானே கடல்?

கணவனும், மனைவியும் நகைக்கடைக்குப் போகிறார்கள். இரண்டு பேரும் போய் அமர்ந்தவுடன், கடைக்காரர் காதுகளில் அணிந்துகொள்ளும் விதம்விதமான காதணி வகைகளை எடுத்துக்காட்டுகிறார். கைகளில் அணியும் வளையல்களில்தான் எத்தனை வகை! கழுத்துக்குப் போட்டுக்கொள்கிற செயின், நெக்லஸ், இத்யாதிகள். ஒவ்வொரு நகையிலும்தான் எத்தனை எத்தனை டிசைன்கள்... கையால் உருவாக்கப்பட்டவை, மெஷின்களால் வடிவமைக்கப்பட்டவை... வாங்க வருபவர்களின் ஆசையைத் தூண்டக்கூடிய, மனதைக் கவர்ந்து இழுக்கும்படியான, எதை வாங்குவது என்று குழப்பத்தை ஏற்படுத்தும்படியான நகைகள்! அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர்!

'எந்த நகையை எடுத்தாலும், கணவன் பார்ப்பது ஒன்றே ஒன்றைத்தான்! அதுதான் நகையின் விலை!' என்கிற ஜோக் ஒருபக்கம் இருக்கட்டும். நகை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவிதமான பெயர் இருந்தபோதிலும், அடிப்படையில் அனைத்துக்கும் பொதுவான விஷயம் அவை எல்லாவற்றிலும் இருக்கிற தங்கம். எல்லா நகைகளிலும் தங்கம் இருக்கிறது. அந்தத் தங்கத்தை எடுத்துவிட்டால், அந்த நகைகளும் இருக்காதல்லவா?

மனிதர்கள் என்ன செய்கிறார்கள்?



ல விலை விலை விலை

நூலைப் பற்றிய சிந்தனை இல்லாமல், துணியைப் பார்க்கிறார்கள். தண்ணீர்தான் கடல் என்ற உண்மையை மறந்துவிட்டு, கடலைப் பார்த்து பிரமித்துப் போகிறார்கள் தங்கம்தான் பல்வேறு உருவங்களையும் பெற்றிருக்கிறது என்பதை ரொம்ப சௌகரியமாக மறந்துவிட்டு, அந்த உருவங்களுக்கு இடப்பட்ட பெயருக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றின் பெருமை பேசுகிறார்கள்.

ஆக, பெயர்களுக்கும், உருவங்களுக்கும் தான் மனிதர்கள் அதிகமாக முக்கியத்துவம் தருகிறார்கள். ஒருவரைப் பார்த்தவுடன், அவரது பெயர், அவர் பார்க்கும் வேலை, அவரது சுற்றுச்சூழல், குணநலன்கள், அவர் பற்றிய நல்லது, கெட்டதுகள் இவையெல்லாம் நம் நினைவுக்கு வருகின்றனவேயொழிய, அவருக்கு உள்ளே ஆத்மா என்ற ஒரு அம்சம் இருக்கிறது; அது நிரந்தரமானது என்பது நமக்குப் புலப்படுவதில்லை. சொல்லப்போனால் ஒவ்வொரு மனிதருக்குள்ளேயும் இருக்கும் ஆத்மா, வெவ்வேறு உருவங்களில், வெவ்வேறு பெயர்களில் இவ்வுலகில் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. ஆத்மா இந்த வாழ்க்கைப் பயணத்துக்காக எடுத்துக்கொள்கிற வாகனம்தான் இந்த உடம்பு.

கம்ப்யூட்டர்களுக்குள்ளே ஹார்டுவேர், சாப்ட்வேர் என்று இரண்டு பிரதான அம்சங்கள் இருப்பதுபோல, இந்த உடம்புக்குள்ளேயும் இரண்டு உண்டு. அவை என்னவாக இருக்கும் என்று கொஞ்சம் யோசியுங்கள்.

(வெற்றி தொடரும்)

ஒரு துளி மௌனம்

கனிமொழி

10

ஆர்ப்பரித்து ததும்பி வழிந்து
சலனமற்றுப் போனது நகரம்

வீதியோரத்து மரக் கிளைகளில்
காய்ந்து விழும் மலர்களை
ஏந்தியபடி கழிகிறது காலம்.

கரிய விருட்சங்களில்
கரைகின்றன கேட்டறியா பறவைகள்

நிலவும் வரமறந்த இரவை
வியாபிக்கின்றன உன் விழிகள்
சர்ப்பங்கள் நெளியும்
சில்லிட்ட நடுயாமத்தை
நிறைக்கிறது உன் சுவாசக் காற்று

கடக்க முடியாக் கடலின்
அலைகள் நனைத்துவிட்டுப்
போகின்றன
வெளிரிய கரைகளை

தீராத தனிமையின்
தணியாத பசியடங்க
தசை தேய்த்துத் தருகையில்
படபடத்து முறிகிறது
புறாவின் சிறகு.

நான் வேண்டுவது உன்
வார்த்தைகளை அல்ல.
உந்திச் சுழியின் கரு சுமந்து வரும்
ஒரு துளி மௌனத்தை.

ஓவியம்: மருது



வாரம் ஒரு வாசகர் குடும்பம்

ஒண்ணே ஒண்ணு... கண்ணே கண்ணு!

சென்னையில் கலபத்தில் பொன், புதன் கூடக் கிடைத்துவிடும். ஆனால் அண்ணாநகரில் மட்டும் மலிவாக நிலம் கிடைக்காது.

"அது 77ம் வருடம். கீழ்ப்பாக்கத்தில் என் மாமனார் வீடு இருந்ததால், அண்ணா நகரில் வீடு வாங்க யோசனை கூறப்பட்டது. 'அடடா, சென்னையோட ஒதுக்குப் புறத்திலா வீடு வாங்குவது?' என்று தீவிர யோசனை. அப்போ ஒரு கிரவுண்ட் முப்பதாயிரம் ரூபாய் (என்னது?!). இன்னைக்கு அது நாற்பது லட்சத்துக்குக்கூடக் கிடைக்க மாட்டேங்குது" என்று கூறிவிட்டு, தமது ஃப்ளாட்டின் ஏழாவது தளம் வழியே அண்ணாநகரின் வளர்ச்சியைக் கண்டு பெருமூச்சு விடுகிறார் மூர்த்தி. அருகே மனைவி அம்பா மற்றும் மகள் அகிலா.

அண்ணாநகரைப் போலவே மூர்த்தியும் படிப்படியாக வளர்ந்திருக்கிறார். தொழிற்சாலைக்குத் தேவையான ஜல்லடைத் துணியை இறக்குமதி செய்யும் வியாபாரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி, இன்று நல்லதொரு நிலைமைக்கு வந்திருக்கிறார்.

"எங்களோட பெரிய சொத்தே படிப்புதாங்க. இவர் 69ல எம்.பி.ஏ. முடிச்சார். நான் பி.எஸ்.சி. படிச்சு இவருக்கு பிஸினஸ்ல ஒத்தாசையா இருக்கேன். என் மகன் மது, முகுந்த் ரெண்டு பேரும் பி.டெக், பி.ஈ. படிச்சு அமெரிக்கால வேலை பார்க்கறாங்க. பொண்ணு அகிலா, ஐ.ஐ.எம். முடிச்சு அவளும் இப்போதான் ப்ராஜக்ட்டுக்காக யு.எஸ். போயிட்டு வந்தா. எங்களோட முதல் மருமகள் கிருத்திகாவும் இப்போ யு.எஸ்.ல எம்.எஸ். படிக்கிறா. 'கற்றது கைமண் அளவு'ன்னு அந்தக் காலத்துல சும்மாவா சொன்னாங்க." என்று பெருமை பொங்கப் பேசுகிறார் அம்பா.

"அப்பா, இன்னுமா நீங்க காண்பிக்கலை" என்று சட்டென்று வீட்டுக்குள் ஓடோடிச் சென்ற அகிலா, அங்கு பீரோவை உருட்டும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் வந்த அவர் கையில் அந்நாளைய கல்கி இதழ்கள்! யெஸ்... அம்பாமூர்த்தி என்கிற புனை பெயரில் மூர்த்தி எழுதிய நான்கு கதைகள் கல்கியில் பிரசுரமாகியுள்ளன. இதுவரை தமிழில் ஐம்பது கதைகள் எழுதியிருக்கும் மூர்த்தி, ஆங்கிலத்தில் பல கட்டுரைகளும் புனைந்துள்ளார்.

"நாகர்கோவிலைச் சேர்ந்தவன் என்பதால், எனக்கு எழுத்தாளர் சுந்தர ராமசாமியைச் சந்திக்கும் பாக்கியம் சிறு வயதில் பலமுறை ஏற்பட்டிருக்கிறது. ஒன்பது வயதில் நான் எழுதிய சிறுகதையைப் படித்துவிட்டு 'நல்லா எழுதறே. ஆனா வயசுக்கு ஏத்த மாதிரி எழுது' என்று தட்டிக் கொடுத்தார். அன்று அவர் வசம் நான் சமர்ப்பித்தது ஒரு காதல் கதை" என்று சிரிக்கிறார் மூர்த்தி.

இவர் வாழ்க்கையில் இரு சுவாரஸ்ய நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. ஒன்று, நடிகர் அஜித்தை பதினைந்து வருடங்களுக்கு முன்பு மார்க்கெட்டிங் வேலைக்காக இண்டர்வியூ செய்தது. ("அப்பவே நெனச்சேன். எங்கே இந்த ஸ்மார்ட்டான இளைஞன், இந்த மார்க்கெட்டிங் தொழிலில் நீடிக்கப் போகிறான்

என்று''). மற்றது, பயணமொன்றின் போது கவிஞர் கண்ணதாசன் இவருடன் பழகியது. அதன்பின்பு இவர் தம் குடும்பத்துடன் நட்பு ரீதியில் நெருக்கமாகி விட்ட கண்ணதாசன், ஒரு தமிழ்ப் புத்தாண்டன்று அனைவரையும் தம் வீட்டுக்கு அழைத்து, சுமார் ஒரு மணி நேரம் அளவளாவியிருக்கிறார் ("பிரபல கவிஞரிடம் பேசுகிறோம் என்கிற இடைவெளியை ஏற்படுத்தவேயில்லை அவர்").

"சுய முன்னேற்ற நூல்கள் படிப்பதில் மிகவும் ஆர்வமுடையவன் நான். புத்தகங்கள் மட்டுமே எல்லோரையும் சமமாய் பாவிக்கும். நாங்க காசு கொடுத்து வாங்கற 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' பத்திரிகை கல்கி மட்டும்தான்"



யுகபாரதி

மாப்பிள்ளையாகப் போகிறார் யுகபாரதி. வீட்டில் தீவிரமாகப் பெண் பார்த்து வருகிறார்கள்.

• குடும்பத்துடன்...



என்று மூர்த்தி கூற, "அது மட்டுமில்ல, வியாபார இடைஞ்சல்களுக்கு அடிபணியாமல் தலை நிமிர்ந்து நடக்கும் ஒரே தரமான பத்திரிகையும் கல்கிதான்" என்றார் அம்பா.

எல்லாம் முடிந்து புறப்படும்போது "'குடும்பத்துடன் களிக்க' என்பதற்கு ஏற்றாற்போல் வாசகர்களிடமிருந்து 'U' சர்ட்டிபிகேட் வாங்கியிருக்கும் கல்கியோட வாசகரா இருக்கறதுல எங்க எல்லாருக்கும் ரொம்பப் பெருமை" என்றார் அகிலா. நமக்கும்தான்.

- சநகன்

படம் : ஸ்ரீஹரி



உயிர் பெறும் கன

ஒரு படம் ஓஹோவென்று ஓடினால் அந்தப் படத்தின் இயக்குனருக்குப் பாப்பு வாரிட்டி கிடைக்கும். ஆனால் 'காதல்' படம், அந்தப் படத்தின் ஒளிப்பதிவாளர் விஜய் மில்டனுக்கும் விளம்பர வெளிச்சத்தை வாரித் தந்துவிட்டது. அவர் இப்போது இயக்குனர். 'அழகாய் இருக்கிறாய்... பயமாய் இருக்கிறது!' படத்தை ஒளிப்பதிவு செய்து இயக்குகிறார்.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு, இரண்டு படங்களை இயக்கி, இரண்டு படமுமே வெளிவராத நிலையில் தமது கனவு கருகிவிட்டதை எண்ணி முடங்கிப் போனவர் விஜய ராஜ். இவர்தான் மில்டனின் அப்பா. அப்பாவின் கனவுக்கு நாமாவது உயிர் கொடுக்க



வு!

வேண்டும் என்று சினிமாவுக்குள் நுழைந்து, ஓர் ஒளிப்பதிவாளராக ஜெயித்த விஜய்மில்டன், சேரனின் 'ஆட்டோகிராஃப்' படத்தில் வரும் கேரளக் காட்சிகளுக்கு ஒளிப்பதிவு செய்திருக்கிறார். அப்போது தமது அப்பாவின் கதையை சேரனுக்குச் சொல்ல, போராடி ஜெயித்த சேரன், நெகிழ்ந்துபோய் உடனடியாக விஜய்மில்டனை இயக்குனராக்கி, அழகு பார்த்துவிட்டார். சேரன் தயாரிக்க, விஜய்மில்டன் இயக்கும் படத்துக்கு வசனம் எழுதுவது, அவரது தந்தை விஜயராஜ்.

தலைப்பைப் போலவே வில்லன் இல்லாத கவித்துவமான இந்தக் காதல் கதையின் ஜோடி பரத்-மல்லிகாகபூர். ''இசையை ரொம்ப ஸ்பெஷலாக பயன்படுத்தியிருக்கிறோம்'' என்கிறார் யுவன்சங்கர் ராஜா. உதாரணத்துக்கு ஒன்று, டான்ஸ் மாஸ்டர் ஸ்ரீதர், பரத், பாலிவுட் டான்ஸ் மாஸ்டர் ஆச்சார்யா மற்றும் குழுவினருக்குப் பயிற்சியளித்த நடன அசைவுகளை முதலில் படம் பிடித்து, அதை யுவன்சங்கருக்குப் போட்டுக் காட்ட, நடன அசைவுகளைப் பார்த்து டியூன் கம்போஸ் செய்தாராம் அவர்... கேட்கவே ரொம்ப அழகா இருக்குல்ல!

- ஸ்ரீசக்கரம்

அலிபுரம் ஜெயிலும் மூட்டைப்பூச்சிக் கடியும்!

ஈயும் எறும்பும் சாதாரணமாக எல்லாவிடங்களிலும் உண்டு. ஆனால் மூட்டைப்பூச்சி ஜெயிலுக்கும், ரயிலுக்குமே படைக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. நியாயமோ, அநியாயமோ, சட்டப்படி ஆறுமாதம், ஒரு வருஷம், பத்து வருஷம் என்று தண்டனை கொடுத்துக் கைதிகளைச் சிறைக்கூடங்களுக்கு அனுப்புகிறார்கள். ஆனால் எந்தச் சட்டத்தின்படி, அவர்களைச் சிறையில் மூட்டைப்பூச்சி கடி என்னும் சித்திரவதைக்கு உள்ளாக்குகிறார்களென்பது தெரியவில்லை. சட்டப்படி ஏற்பட்ட எல்லா தண்டனைகளையும்விட, சட்டத்துக்குப் புறம்பான இத்தண்டனை மிகக் கொடியது.

ஓர் அம்சத்தில் மூட்டைப்பூச்சிகளை சத்தியாகிரஹிகளுடன் ஒப்பிடலாம். சத்தியாகிரஹிகளைக் கொல்லக் கொல்ல, அவர்கள் மேலே மேலே மரணத்துக்குத் தயாராய் மாரைக் காட்டிக் கொண்டு வந்து கொண்டிருப்பார்கள். அதுபோல் மூட்டைப்பூச்சியை நீங்கள் கொல்லக் கொல்ல, அவை மேலும் மேலும் உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கும். இந்தப் பூச்சிகளை வெள்ளைக்காரருக்கு ஒப்பிடுவோரும் உளர். மூட்டைப்பூச்சிகள் உடம்பில் பெரிய காயம் பண்ணாமல், ஆங்காங்கே ஊசி போன்ற தங்கள் மூக்கைச் செலுத்தி எப்படிச் சிறிது சிறிதாய் இரத்தத்தை உறிஞ்சுகின்றனவோ, அதுபோல் தான் வெள்ளைக்காரரும் பிறநாடுகளில் பல வழிகளாலும் செல்வத்தைச் சிறுகச் சிறுகச் சுரண்டிக் கொண்டு போகிறார்கள். அவர்கள் பணம் பறித்துக் கொண்டு போவதே மற்றவர்களுக்குத் தெரிவது பிரயாசை.

அமரர் கல்கி

மூட்டைப்பூச்சியைக் கொல்வதற்குப் பல வழிகள் உண்டு. அவற்றில் முதன்மையானது, ஸ்பென்ஸர் கம்பெனியிலிருந்து ‘பிளிட்’ என்னும் திராவகத்தை வாங்கி, ஒவ்வொரு மூட்டைப்பூச்சியாகப் பிடித்து, ஒவ்வொன்றின் தலையிலும் அரைச் சேர் திராவகத்தை ஊற்றுவதுதான். ஆனால் இந்த நாகரிகமான முறையில் பணச்செலவு அதிகம். சராசரியில் ஒரு மூட்டைப்பூச்சியைக் கொல்ல முக்கால் ரூபாய் பிடிக்கலாம். கேவலம் ஒன்றே முக்காலணாவில் மூன்று வேளையும் சாப்பிட்டுக் காலந்தள்ளும் சிறைச்சாலைக் கைதிகளுக்கு, இந்த நாகரிக முறை ஒத்து வராது என்று சொல்ல வேண்டியதில்லை. எனவே, மூட்டைப்பூச்சியைக் கண்டவிடத்திலெல்லாம் கையினாலோ, காலினாலோ தேய்த்துக் கொன்றுவிடும் அநாகரிக முறையைத் தான் சாதாரணமாகக் கைதிகள் கையாண்டு வந்தார்கள். எனவே, அறைகளின் சுவரெல்லாம் ஒரே இரத்தக் கறையாகக் காணப்படும். இவ்வளவு அசங்கியமில்லாத வேறொரு முறையை நான் கண்டுபிடித்துக் கையாண்டு வந்தேன். ஒரு குவளையில் தண்ணீர் எடுத்து, மூட்டைப்பூச்சி கண்ணுக்குப் படும்போதெல்லாம் பிடித்துப் பிடித்துத் தண்ணீரில் போட்டு விடுவேன். நல்ல வேளையாக மூட்டைப்பூச்சிக்கு நீந்தத் தெரியாது. எனவே, சில மணி நேரம் தண்ணீரில் கிடந்தால் அவை மூச்சுத் திணறிச் செத்துப் போகும். அல்லது செத்துப் போனதாகப் பாசாங்காவது செய்யும். பிறகு அவற்றைத் தூர எறிந்துவிடுவது வழக்கம்.

நான் சிறை புகுந்த சில நாளைக்

கெல்லாம் விடுதலையாகி வெளியே சென்ற வேதாரண்யத் தொண்டர் ஒருவர், தமது அறையை எனக்குக் கொடுத்துச் சென்றார். அவர் அந்த அறையில் வெகுநாள் சிரமப்பட்டு மூட்டைப்பூச்சி சம்ஹாரம் செய்து, சுண்ணாம்பு பூசி சுத்தமாய் வைத்திருந்தார். பிறகு நானும் சர்வ ஜாக்கிரதை யுடன் இருந்தபடியால் மூட் டைப்பூச்சிக் கடிக்கு அதி கம் ஆளாகாமல் தப்பி னேன். ஆனால் நண்பர் ஈசுவரன் ஒரு யோசனை சொன்னார். "நீர் நூலாசிரி யர் ஆயிற்றே? மூட் டைப்பூச்சிக்கடியை அநுபவித்துப் பார்த்தாலொழிய எப்படி அதைப பற்றி நன்றாய் எழுத முடி யும்? மூட்டைப்பூச்சி நிறைய உள்ள அறை யில் நீர் சில நாளாவது இருக்க வேண்டும்." என்று யோசனை கூறினார். இந்த யோசனையை வந்தனத்துடன் மறுதலித்துவிட்டேன். இந்த மாதி ரிக் காரியங்களில்தான் ஆசிரியர் களின் கற்பனா சக்தி உபயோகமா கிறதென்றும், சொந்த அநுபவம் வேண்டியதில்லையென்றும் பதில் தெரிவித்தேன்.



நான் அறிந்தவரையில் மூட் டைப்பூச்சி இல்லாத சிறை கன்னிக் கோட்டை ஸ்பெஷல் ஸப் ஜெயில் ஒன்றுதான். நான் பார்த்த சிறைக்கூடங்கள் எல்லாவற்றிலும் இதுதான் சுத்தத்தில் சிறந் தது என்று கூறுவேன். ஆனால் மூட்டைப் பூச்சிக்குப் பேர் போனது அலிபுரம் பெரிய ஜெயில். கைதிகளுக்கு இங்கு தனித்தனி அறைகள் இல்லை. பெரிய அறைகளில் ஐம் பது. அறுபது பேரைச் சேர்த்து அடைப்பார் கள். படுக்கையை அரைமணி நேரம் விரித் திருந்து விட்டுப் பிறகு பார்த்தால், படுக் கையே தெரியாமல் ஒரே மூட்டைப்பூச்சி மூடியிருக்கும் என்று அந்தச் சிறையில் இருந்த நண்பர்கள் தெரிவித்தார்கள். "அலி புரத்திலும் திருச்சியிலும் இருந்தபோது புதிய கைதிகள் வந்தால் நான் சந் தோஷப்படுவது வழக்கம். ஏனென்றால் மூட்டைப்பூச்சிகளையும் ஈக்களையும் அவர்களும் பங்கிட்டுக் கொள்வார்கள். அப்போது என்னுடைய பங்கு கொஞ்சம் குறையுமல்லவா?" 'என்று ஒரு நண்பர் கூறினார்.

- **'கண்ணீரால் காத்த பயிர்' நூலிலிருந்து வானதி பதிப்பகம்.**

டாக்டர் ஈஸ்வர் காரில் வந்து கொண்டிருந்தார். வழியில், சாலை ஓரத்தில் சிறு கும்பல் ஒன்று தெரிய, அதில் ஒருவன் டாக்டரின் காரை நிறுத்தினான்.

வேறு வழியின்றி காரை நிறுத்திய ஈஸ்வரிடம், "சார்... ஒருத்தர் மயக்கமாயிட்டாரு... பக்கத்துல ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும் சார்...!" அந்த நபர் சொல்ல, "கமான்... உடனே கொண்டாங்க..." ஈஸ்வர் காரிலிருந்து இறங்கி மயக்கமான நபரைப் பார்த்தார்.

அந்த ஆள் கழுத்தில் தடிமனான செயினும், கைகளில் வாட்சும் மோதிரமுமாய்... பார்க்கக் கொஞ்சம் டீஸண்டாகவும் தெரிந்தான். பரபரவென்று எல்லோரும் அந்த ஆளை காரில் ஏற்ற, ஈஸ்வரின் மனது வேறு கணக்கு போட்டது. உடனே காரைத் தமது சொந்த மருத்துவமனைக்குச் செலுத்தினார். மருத்துவமனையில் நுழைந்ததுமே, "சிஸ்டர், உடனே இந்த பேஷண்ட்ட ஐ.சி.யு.ல அட்மிட் பண்ணுங்க... ஹி இஸ் அன்கான்ஷியஸ் ஃபார் பாஸ்ட் ஆஃப் அன் அவர்... உடனே ஈ.சி.ஜி, எக்கோ, ஸ்கேனுக்கு ப்ரிப்பேர் பண்ணுங்க..." கட்டளையிட்டபடி தன் அறைக்குள் சென்றார் ஈஸ்வர். அடுத்த அரைமணியில் பேஷண்ட்டுக்கு மயக்கம் தெளியவும்... அவருக்கு எடுக்கப்பட்ட பரிசோதனைகள்

ட்ரீட்மெண்ட்!

நார்மலாகி இருப்பதாகத் தெரியவும் சரியாயிருந்தது.

ஈஸ்வர் அந்த பேஷண்டிடம் நேரிடையாகவே நடந்தது பற்றி ஆரம்பத்திலிருந்து சொன்னார். மேலும் தற்போது அவருக்கு எதுவும் பிரச்னையில்லை என்றும்... அதேசமயம் "கொடுத்த ட்ரீட்மெண்டுக்கு ரூபாய் ஐயாயிரம் ஃபீஸ்" என்றும் சொல்ல,

"டாக்டர்... இட் இஸ் டூமச்... ஏன் இந்த டெஸ்ட் எல்லாம் பண்ணீங்க...?" பேஷண்ட் பதற...

"மிஸ்டர்... நான் இங்க டாக்டர். உங்களோட அந்த கண்டிஷன்ல... எது தேவை, எது தேவையில்லன்னு நான்தான் முடிவு செய்யணும்... அன்டர்ஸ்டேண்ட்...?"

டாக்டர் ஈஸ்வர் சற்றுக் கோபமாகச் சொல்ல...

"சாரி டாக்டர்... நான் இன்னிக்கு விரதம்... காலைலேர்ந்து சாப்பிடல... அதான் மயக்கம். பட் நீங்க... தேவையில்லாம..."

டாக்டர் ஈஸ்வர் மேலும் கோபமானார்.

கீதா

''வாட் மேன்? உனக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்தது தப்பா...? ஐ ஆம் எ டாக்டர்... நீ ஒரு பேஷண்ட்... நோ யுவர் லிமிட்... உனக்கு ஏன் மயக்கம்ங்கிறத நான்தான் சொல்லணும்...?''

அந்த நபர்... தன் கைகளைச் சற்று உயர்த்தி...


''வெரி சாரி டாக்டர்... உங்கள மாதிரி டாக்டர்ஸோட ஆடிட்யூட்ட என்னால புரிஞ்சுக்க முடியும். இது உங்க சொந்த ஹாஸ்பிடல்தானே...? பட்... ஒரு விஷயத்த நீங்க புரிஞ்சுக்குங்க...''

சற்று நிறுத்திவிட்டு... மேலும் தொடர்ந்தார் அந்த நபர்...

''நானும் ஒரு டாக்டர்...!''

டாக்டர் ஈஸ்வரின் முகத்தில் ஈயாடவில்லை!






''தலைவர் ஆனாலும் மோசம்பா!''

''ஏன்?''

''செல்போன்லகூட கைத்தட்டல் சத்தத்தை ரிங்டோனா வைச்சிருக்காரு!''

- அம்பை தேவா


படங்கள் :
பிள்ளை



''மன்னர் அந்தப்புரம் போகவில்லை... வேறு எந்தப்புறம் போனாரென்றும் தெரியவில்லை, மகாராணி...!''

''ம்... அவர் வந்தப்புறம் பேசிக்கிறேன்...!''

- புன்னகை மன்னன்



''உங்க மக கல்யாணத்துக்குத்தான் நல்ல முகூர்த்த நாளா குறிச்சுக் கொடுத்திருக்கேனே... அப்புறம் எதுக்கு வெயிட் பண்றீங்க?''

''அப்படியே டைவர்ஸுக்கும் ஒரு நல்ல நாளா பார்த்துச் சொல்லிட்டீங்கன்னா நல்லாயிருக்கும்...''

- ஆனந்தன்



"அப்பா, தூக்கம் வர மாட்டேங்குது... பேய்க் கதை ஏதாவது சொல்லுப்பா..."

"உங்கம்மாவுக்கும் எனக்கும் கல்யாணம் ஆனப்ப..."

- தெனாலி

பேய்க் கதை கேளுங்க!

"மாடு வாங்க லோன் கேக்கறீங்களே... உங்க பேரு?"

"அடைக்கலசாமி"

"இதுக்கு முன்னாடி வாங்கின கடனைக் கட்டிட்டீங்களா?"

"அடைக்கல சாமி!"

- ஆர்.கே.இராமநாதன்



"அந்தத் திருடனை லாக்கப்ல வச்சு ஒரு வாரமா எவ்வளவோ அடிச்சும் உண்மையை வரவழைக்க முடியலை. ஆனா நீ ஒரே வார்த்தையில உண்மையைக் கக்க வச்சுட்டியே... அப்படி என்ன சொன்னே?"

"'உண்மையைச் சொல்றியா? இல்லை, உன்னைச் சந்திக்க உன் பொண்டாட்டியை வரவழைக்கட்டுமா'ன்னேன்..."

- ஆனந்தன்





எய்ட்ஸ் பிரச்னை குறித்து ரேவதி எடுத்த '·ஃபிர்மிலேங்கே' இந்திப்படம், ஐ.நா. சபையின் பாராட்டைப் பெற்றிருக்கிறது. அமிதாப்பச்சனுக்கு ஜோடியாக நடித்த படம் அண்மையில் ரிலீஸ் ஆகியுள்ளது. இதோ, இந்த வருடத்து இமாலயன் கார் பந்தயத்தில் பங்கேற்கத் தயாராகிவிட்டார். இன்னொரு பக்கம் அடுத்த படத்துக்கான ஸ்கிரிப்ட் பணியும் நடந்து கொண்டிருக்கிறது. பிஸியான தமது வேலைகளுக்கிடையே நம்மிடம் மனம் திறந்து பேசினார் ரேவதி.

அமிதாப்பச்சனுக்கு ஜோடியாக நடித்த அனுபவம் எப்படி இருந்தது?

"தில் ஜோ பை க ஹே என்ற இந்திப் படத்தில் அவருடன் நடித்த அனுபவம் சுவாரஸ்யமானது. கதை நடக்குமிடம் மொரீஷியஸ். இந்தியப் பையனுக்கும், பிரிட்டிஷ் பெண்ணுக்குமிடையிலான காதல்தான் கதை. பாரம்பரியத்தில் வந்த இந்திய அம்மாவான நான், அமிதாப்புக்கு ஜோடி. தாயையும், மகனையும் காம்ப்ரமைஸ் செய்து வைக்கிறார் அமிதாப்.

அமிதாபின் தொழில் ஈடுபாடு என்னை பிரமிக்க வைத்தது. ஒரு திருவிழா நடனக்காட்சி. அதற்கான பாடலில் சுமார் முன்னூற்றைம்பது அடி நீளத்துக்கு வரும் காட்சியில், அமிதாப் தனியாக நடனமாடும்படி அமைத்திருந்தார் நடன இயக்குனர்.


அதற்குரிய ஸ்டெப்ஸ்களைச் செய்து காட்டச் சொன்ன அமிதாப், "இந்தக் காட்சியை கடைசியாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டார். அதன் பிறகு பார்க்க வேண்டுமே... தினமும், நேரம் கிடைக்கிறபோதெல்லாம், ஒரு நடன உதவியாளருடன், அந்த ஸ்டெப்ஸ்களை கடுமையாக பிராக்டீஸ் செய்ய ஆரம்பித்துவிட்டார். "கஷ்டமாய் இருந்தால், மாற்றி வைத்துக்கொள்ளலாமே" என்று டைரக்டர் சொன்னபோதுகூட, அதற்கு ஒப்புக்கொள்ளாமல், பயிற்சியைத் தொடர்ந்தார். இந்த வயதிலும் அவரது சின்சியாரிட்டி என்னை ஆச்சரியப்படுத்தியது."

கார் பந்தயத்தில் ஈடுபாடு வந்தது எப்படி?

"இமயமலைப் பகுதி எனக்கு மிகவும் பிடித்தது. அதன் அமைதியான பிரம்மாண்டம் எனக்குள்ளே அடக்கத்தையும், மன அமைதியையும் ஏற்படுத்துகிறது. அங்கே கார் ஓட்டுவது சவாலான விஷயம். வருடத்துக்கு ஒரு தரம் கார் பந்தயத்தில் பங்கேற்பது எனக்குப் புத்துணர்வை ஏற்படுத்துகிறது."

எய்ட்ஸ் ரொம்ப சென்சிடிவான விஷயம். அதை வைத்து ஒரு படம் எடுக்கும் எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?

"எய்ட்ஸ் இன்று ஓர் உலகப் பிரச்னை. இதை வைத்து ஒரு படம் இயக்கித் தர



"காதலைத் தவிர படமெடுக்க வேறு விஷயமில்லையா?"

- கொதிக்கிறார் ரேவதி

வேண்டும் என்று ஒரு தயாரிப்பாளர் என்னை அணுகினார். அவருக்கு என் முதல் படத்தைப் பார்த்து என்மீது நம்பிக்கை ஏற்பட்டதாம். பல்வேறு எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பணியில் ஈடுபட்டுள்ள சமூகத் தொண்டு அமைப்பினருடன் பேசினேன். நிறைய உண்மைக் கதைகளைக் கேட்டேன். 'பிலடெல்பியா' என்கிற ஆங்கிலப் படமும் ஒரு விதத்தில் என்னை மிகவும் கவர்ந்தது. அழுத்தமான கதை சொல்ல வேண்டும் என்று யோசித்தேன். எய்ட்ஸ் நோயாளி பற்றிய இந்தச் சமூகத்தின் பார்வை, அவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்படும்போது அதை எதிர்த்துப் போராடத் துணியும் ஒரு புத்திசாலியான இளம் பெண் ஆகியவற்றை வைத்து ஸ்கிரிப்ட் தயார் செய்தேன். பல தரப்பிலிருந்தும் பாராட்டு கிடைத்தது."

நடிகை ரேவதிக்குள், ஓர் இயக்குனர் இருப்பதை எப்படிக் கண்டு கொண்டீர்கள்?

"அதற்கு முக்கியக் காரணம் டெலிஃபோட்டோ நிறுவனமும், சுரேஷ்மேனனும்தான். டெலிஃபோட்டோ, டி.வி. சீரியல்களைத் தயாரித்தபோதுதான் நான் டைரக்ஷன், கேமரா, எடிட்டிங் போன்ற டெக்னிக்கல் விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். டைரக்ஷனில் ஈடுபட விரும்பியபோது, யாராவது ஒருவரிடம் ஒரு வருடமாவது உதவி இயக்குனராக இருந்து பயிற்சி பெற வேண்டும் என்று ரொம்பவும் ஆசைப்பட்டேன். அதற்காக மணிரத்னம், சந்தோஷ்சிவன் இரண்டு பேரையும் அணுகினேன். ஆனால் அது நிறைவேறாமல் போய்விட்டது. நேரடியாகவே இயக்குனரானேன்."

நடிப்பது குறைந்துவிட்டதே! ஏன், நடிப்பு போரடிக்கிறதா?

"மனம் திறந்து சொல்வதானால் 'ஆம்.' நம் திரைப்படங்களில், முப்பத்தைந்து வயதுக்கு மேலான பெண்களுக்கு அம்மா, அக்கா, அண்ணி கேரக்டர்களைத்தான் தருகிறார்களே தவிர, நல்ல கேரக்டர்கள் அமைவதில்லை. வழக்கமான கேரக்டர்களில் வந்து போகவும் விருப்பமில்லை. நல்ல கதாபாத்திரமாக அமைந்தால் மட்டுமே நான் நடிக்கிறேன்."

இப்போது வரும் தமிழ்ப் படங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

"தொழில் நுட்பரீதியில் நிறைய மாற்றங்கள். நிறைய இளைய தலைமுறையினர் வந்திருக்கிறார்கள். ஆனால் 'காதல்' தவிர இந்த உலகத்தில் வேறு விஷயமே இல்லை என்பது போல நினைத்து படமெடுப்பதைத்தான் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. முன்பெல்லாம் ஆணும், பெண்ணும் காதலிப்பார்கள். இப்போது பையனும், சிறு பெண்களும் காதலிக்கிறார்கள்."

ஒரு ஆணைவிட பெண் இயக்குனருக்கு சமூகப் பொறுப்புணர்வு அதிகமாக இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

"ஆணோ, பெண்ணோ, யாராக இருந்தாலும் சரி, சமூகப் பொறுப்புணர்வு இல்லாமல் படம் எடுக்கக் கூடாது என்பது என் அழுத்தமான கருத்து. 'கமர்ஷியல் நிர்ப்பந்தம்' என்று காரணம் சொல்லி எதையும் சினிமாவுக்குள் நுழைத்துவிடும் இன்றைய போக்கு கண்டிக்கத்தக்கது."


- எஸ்.சந்திரமௌலி

அய்யா...

ஜெகஜ்ஜோதியா ஜொலிக்குதப்பு கோயம்பேடு ஆண்டாள் அழகர் திருமண மண்டபம். என்னா விஷேசம்ங்கிறியா? நம்ம கேப்டன் கட்சியோட தலைமை அலுவலகமே இதான்! மத்த கட்சி ஆபீஸ்ல காணப்படுற தொண்டர்கள் ஒல்டு... இங்க யங்கு! விஜயகாந்த் முகம் போட்ட பேனா, வாட்ச் கட்டி வளைய வந்துட்டிருந்த தொண்டருங்ககிட்ட நைசா பேச்சுக் கொடுத்தேன்.

"என்னண்ணே,. அண்ணாச்சி பண்ருட்டியார வளைச்சிட்டாரு போலிருக்கே..."

"அசத்திப்புட்டோம்ல... அவரை வச்சி வடமாவட்டம் பூரா திண்டிவனத்தாருக்கு (ராமதாஸ்) செமையா கவுண்டர் கொடுக்கலாம். எம்.ஜி.ஆர். விசுவாசிங்களையும் ஓரளவுக்கு கரெக்ட் பண்ணலாம். ஓரே கல்லுல ரெண்டு





மாங்கான்னு நினைச்சோம். ஆனா இப்போ மூணாவதா ஒரு மாங்காவும்ல விழுது..."

"என்னண்ணே சொல்றீங்க?"

"ஆமாண்ணே. முன்னால பண்ருட்டியாரைப் பத்தி அரசல் புரசலா ஒரு பேச்சு இருந்துச்சு. அது நெசமா.. பொய்யான்னு தெரியல. இவரை சாக்கு வச்சி மேல மேல ஊழல் பிடிச்ச ஆளுங்க கட்சிக்குள்ள வந்துட்டா குழப்பமாயிருமேன்னு பயமா இருக்கு"

'ஆஹா.. கேப்டன் கட்சி ஆளுங்க ரொம்பத்தேன் வெவரமா இருக்காங்கப்பா'ன்னு நெனச்சிக்கிட்டே, தூரத்துல கேப்டன் புகழ் பாடிட்டிருந்த நால்வரோடு ஐவரா உட்காந்து கடல போட்டேன். நம்ம முறை வந்தப்போ "ஏம்ப்பு... நம்ம கட்சியை சாதிக்கட்சி ரேஞ்சுக்கு இப்படி பேசிக்கிட்டிருக்காங்களே''ன்னு லேசா ஊசி ஏத்தினேன்.

"ஆமப்பு.. என்னவோ இதை கேப்டன் கண்டுக்கவே இல்ல. நாயக்கர் ஓட்டுக்கு நாமளும், வைகோவும் அடிச்சுக்கற மாதிரி எழுதறாங்க. பேசறாங்க. இப்போ நாம அஞ்சு பேரு உட்கார்ந்திருக்கோம். நம்மள்ல எத்தனை பேரு நாயக்கரு, சொல்லு"ன்னு ஒருத்தரு குரலை உயர்த்த,

கொய்யா... பையா!



• பண்ருட்டி ராமச்சந்திரன்

யாருமே கைதூக்கல.

"பார்த்தியாப்பா, சும்மா இப்படித்தான் கதையளந்துக்கிட்டு இருக்காங்க. உண்மையா சொல்லணும்னா நம்ம கட்சி ஒரு சமத்துவபுரம்"ன்னு ஒரு தொண்டர் ஒரே போடாப்போட, நகர்ந்து வெளியே வந்தேன். ரெண்டு தொண்டருங்க வந்துட்டிருந்தாங்க. பாவம் யாரோ ஒரு



புரபஸரைப் போட்டு பேசகல காய்ச்சி எடுத்தாங்க.

"கருத்துக்கணிப்புன்ற பேர்ல நம்ம கேப்டனோட இமேஜை டேமேஜ் பண்ணிக்கிட்டுத் திரியறாரு. கூட்டம் வரல. கொள்கை இல்லையாம்... அதான் கேப்டனே தெளிவா சொல்லிட்டாரே. உணவு, உடை, உறைவிடம் தர்றதுதான் கொள்கைன்னு. அப்புறம் என்னவாம். 'கேப்டன் உடனே சி.எம். ஆயிடுவார்'னு கண்ணை மூடிக்கிட்டு நாம நம்புறதா சொல்றாரு. ஆனா, நாங்க ரொம்பத் தெளிவா இருக்கோம். படிப்படியா முன்னேறுவோம். நியூஸ் பேப்பருங்க ஹெல்ப் பண்ற மாதிரி, டீ.வி. காரங்க ஹெல்ப் பண்றதில்ல. அதுக்கும் கேப்டன் ஒரு ஏற்பாட்டை பண்ணிட்டாரு"ன்னு ஒருத்தரு பேசிக்கிட்டே போக, குறுக்கால பூந்து "இருங்கண்ணே. கேப்டன் கைத்தட்டலை வாங்கறதுக்காகவே அப்பப்போ 'வாழ்ந்தாலும் உங்களுக்காக, செத்தாலும் உங்களுக்காக'ன்னுல்லாம் பஞ்ச் டயலாக் விடுறதா சொல்றாங்க"ன்னு வலியப் போய் வம்புக்கு இழுத்தோம்.

"மனகல பட்டதைப் பட்டுன்னு சொல்றாரு. அது நமக்குப் புடிச்சிருக்கு. கை தட்றோம். சில பேரு மாதிரி பேசிக்கிட்டு இருக்கறப்போ திடீர்னு பத்து செகண்டு பேச்சை நிறுத்தி, கைத்தட்டல் வாங்குறவர்தில்ல அவரு." என்றார் அண்ணாச்சி வீராவேசமாக.

தூரத்துல கன்னத்தில் கை வச்சுக்கிட்டு ஒரு பையன் கேப்டனோட பேனரையே பார்த்துட்டிருந்தான். விசாரிச்சேன். கேப்டனோட தீவிர ரசிகனாம். இல்லல்ல... வெறியனாம்.

"என்னய்யா எத்தனை தொகுதில நிக்கப் போறீங்க?"

"அதான் கேப்டனே சொல்லிட்டாரே... முன்னால பத்துப் பதினான்குல போட்டி போடுறதா இருந்தேன். இப்போ மாநாட்டுக்குப் பிறகு எம் மனசுல புதுக்கணக்கு வந்திருக்குன்னு.. எப்படியும் நாத்தம்பது இடத்துல நிக்கணும். அப்பத்தான் கட்சியில வந்து சேர்ற மத்தக் கட்சி ஆளுங்க போக, எங்க ஆளுங்க கணிசமான தொகுதிகள்ல போட்டியிடறதுக்கு வசதியா இருக்கும். இல்லன்னா தொண்டருங்க வெறுப்பாயிடுவாங்க."

"அது சரி, கூட்டணி யாருகூட வைக்கப் போறீங்க... அம்மாவா.. அய்யாவா?"

"அதெல்லாம் முடிவு பண்றது எங்கண்ணன்யா கொய்யா!"ன்னுட்டு கிளம்பிட்டான் பையன்.

- ஒற்றன்

படங்கள் : ஸ்ரீஹரி

கண்ணீர் தந்த

சுதா மூர்த்தி

சுனாமி பாதிப்புக்குப் பிறகு நாங்கள் நாகப்பட்டினம், கடலூர், வேளாங்கண்ணி, காரைக்கால் போன்ற இடங்களுக்குப் போயிருந்தபோது, ஏராளமான நிவாரணப் பொருள்கள் வந்து குவிந்திருந்தன. ஆனால் அவற்றைப் பாதுகாப்பாக வைக்கச் சரியான இடம்தான் இருக்கவில்லை. திருட்டும், பாதிக்கப்பட்டவர்களுக்குள் சண்டையும் சர்வசாதாரணமாக இருந்தன. அவர்களுக்கு நிறையவே பொருள்கள் கொடுத்தாலும், மிக முக்கியமான பொருள்கள் சில கொடுக்கப்படவேயில்லை.

நாங்கள் போனதே இதை எல்லாம் கண்டறிந்து, அவர்களுக்கு உண்மையில் தேவையானவற்றை வழங்க ஏற்பாடு செய்யத்தான்.

சுனாமியால் பாதிக்கப்பட்டோரின் தாற்காலிக நிவாரணத்துக்கு உதவ இருபத்தைந்து அத்தியாவசியப் பொருள்களடங்கிய ஒரு பெட்டியைத் தயாரித்தோம்.

நல்ல கனமான, கெட்டியான பெரிய அலுமினிய டிரங்க் பெட்டி. மருந்துகள், தார்ப்பாலின், டார்ச் லைட், ஒரு சிறிய ரேடியோ, சோப்பு, பவுடர், சீப்பு எல்லாமே அதில் இருந்தன.

அவற்றை எல்லாம் ஒரே இடத்தில் தனித்தனியாகப் பிரித்து அடுக்கி, ஒவ்வொரு பெட்டியிலும் நிரப்ப, பிரம்மாண்டமான இடம் தேவைப்பட்டபோது, என் மாணவர்களில் ஒருவரான ஜார்ஜ் ஜோசப், நகரை விட்டுத் தள்ளியிருந்த தமது பெரிய பங்களாவின் கீழ்த்தளத்தைத் தர முன் வந்தார். நாங்கள் வேன்களில் அங்கே எல்லாவற்றையும் கொண்டு சேர்ப்பித்து, ஒவ்வொரு பெட்டிக்கும் தேவையானதை அடுக்க ஆரம்பித்தோம். அவர்கள் ஆயிரக்கணக்கானப் பெட்டிகளில் மளமளவென்று அடுக்கியது, கைதேர்ந்த பணியாளர்களால் மட்டுமே சாத்தியம். இரண்டு நாட்களிலேயே அவற்றைத் தயார் செய்த என் குழு உறுப்பினர்கள் பத்துப் பேரையும் பாராட்டத்தான் வேண்டும்.

பெட்டிகள் முழுமையாகிச் சேரச் சேர, அவற்றை லாரிகளில் ஏற்றுவதும், ஏற்ற வசதியாக ஒரே இடத்தில் அவற்றை அடுக்கி வைப்பதும் அவசியமாயிற்று. நாங்கள் இதற்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, "நீங்கள் கவலைப்படாதீர்கள் அம்மா! பக்கத்து இடம் காலியாகத்தான் இருக்கிறது. எனக்கு அந்த உரிமையாளரை நன்றாகத் தெரியும். கட்டட வரைபடம் வரைந்த ஆர்க்கிடெக்ட் தினமும் அங்கு வருவார். அவரிடம் அனுமதி பெற்று விடுகிறேன். ஏனென்றால் உரிமையாளர் வெளிநாட்டில் இருக்கிறார். இந்த மாதிரி உபகாரங்கள் செய்யும்போது யாரும் எதையும் மறுக்க மாட்டார்கள்!" என்றார் ஜார்ஜ்.

லாரிகள் வந்து நின்று பெட்டிகளை ஏற்றிச் செல்ல வசதியாக இருந்தது அந்தப் பக்கத்து வீட்டு மனை. எனவே ஜார்ஜின் யோசனையைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தோம்.

அடுத்தநாள் ஓர் இளம் பெண் எங்கள் இடத்துக்கு வந்தாள். மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் புன்னகை செய்து, "அம்மா, நான் ஆர்க்கிடெக்ட் லங்கேஷின் உதவியாளர். லங்கேஷ் ஊரில் இல்லை. ஜார்ஜ் மூலம், நீங்கள் டிரங்குப் பெட்டிகளை அடுக்க பக்கத்து வீட்டுமனையில் இடம் கேட்டிருந்



காசோலை!

தீர்களாம். நல்ல யோசனை. எங்களால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாகப் போய் உதவ முடியாது என்றாலும், இந்தச் சிறிய உதவியையாவது உங்களுக்குச் செய்து, இடம் கொடுத்து உதவலாமே என்று இங்கு வந்தேன்!" என்றாள்.

நான் நன்றி தெரிவித்தபோது, மேலும் ஏதாவது உதவி தேவை என்றால் கேட்கச் சொன்னாள்.

பெட்டிகளை எல்லாம் தயார் செய்து அவற்றைப் பக்கத்து வீட்டுமனையில் அடுக்கி வைத்தபோது மாலை ஆகிவிட்டது. அடுத்தநாள் காலையில் லாரிகள் வந்து அவற்றை எடுத்துக்கொண்டு போக வேண்டியது தான் பாக்கி.

நாங்கள் கிளம்பத் தயாராக இருக்கிறபோது, பென்ஸ் காரில் ஓர் இளைஞன் தடபுடலாக வந்து இறங்கினான். கையில் செல்போன். பார்க்க லட்சணமாக இருந்தான். ஆனால் அவன் முகத்தில் எங்களால் ஏதோ பாதிக்கப்பட்ட மாதிரி ஒரு கடுகடுப்பு தெரிந்தது.

அவன் எங்களை நெருங்கி, "உங்கள் பெட்டிகளை எல்லாம் இங்கே கொண்டு வந்து அடுக்க யார் உங்களுக்கு அனுமதி தந்தார்கள்?" என்றான் கோபமாக.

அவர்தான் ஆர்க்கிடெக்ட் லங்கேஷ் என்று புரிந்துகொள்ள எனக்கு அதிக நேரம் ஆகவில்லை.

"ஜார்ஜ் உங்களிடம் பேசி அனுமதி வாங்கி விடுவதாகச் சொன்னார். நேற்று உங்கள் உதவியாளர் வந்து சம்மதம் தந்து விட்டுச் சென்றார். அதனால் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன்."

"இல்லை. அது உண்மை அல்ல. நான் பயணம் செய்துகொண்டிருந்தேன். என்னிடம் யாரும் எதுவும் பேசவும் இல்லை. நீங்கள் சுனாமி பணிகள்தான்

செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் என்னிடம் இவற்றை இங்கே அடுக்கி வைக்க எந்த அனுமதியும் பெறவில்லை. என்னுடைய உதவியாளரின் அனுமதி அல்ல, என் அனுமதிதான் முக்கியம். நான்தான் இந்தக் கட்டடத்தை உருவாக்கும் ஆர்க்கிடெக்ட். எனக்குப் பொறுப்பு இருக்கிறது."

நான் பயந்த தொனியில், "தவறு நடந்துவிட்டது. மன்னியுங்கள். இன்னும் பத்தே மணி நேரம்தான். நாளைக் காலை லாரிகள் வந்துவிட்டால், பெட்டிகளை எல்லாம் ஏற்றி அனுப்பி விடுவோம்" என்றேன்.

"இரவா, பகலா என்பதல்ல பிரச்னை. சர்வே ஆட்களை இன்று வரச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் எப்போது வேண்டுமானாலும் வருவார்கள். எனவே உங்கள் பெட்டிகளை எல்லாம் எடுத்துப் போய்விடுங்கள்!"

"அவர்கள் அடுத்த வாரம்தான் வருவார்கள் என்று உங்கள் உதவியாளர் சொன்னார்... இப்போது திடீரென்று இவற்றை எல்லாம் எடுக்கச் சொன்னால், எங்கே கொண்டு போய் மறுபடி அடுக்குவது?" என்று வேண்டினேன்.

"அது எனக்குத் தெரியாது. அது என் பிரச்னை அல்ல. சாலை ஓரத்தில் வேண்டுமானால் அடுக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் என் அனுமதியை முன்னாலேயே பெறவில்லை. நீங்கள் முன்னதாகவே என்னிடம் சொல்லியிருந்தால், நான் எப்படியாவது இடம் ஏற்பாடு செய்திருப்பேன்!" என்றார் பிடிவாதமாக.

எனக்குப் புரிந்து போயிற்று. அவருக்கு இடம் கொடுப்பதில் ஆட்சேபணை எதுவும் இல்லை. ஆனால் அவருடைய அதிகாரத்தைக் காண்பிப்பதில்தான் ஆர்வம்!

"இப்போதே இந்தப் பெட்டிகளை எடுத்து, சாலை ஓரத்தில் வைத்து விடுகிறேன். உங்கள் இடத்தைக் காலி செய்து விடுகிறேன். அது இரட்டை வேலை என்று எனக்குத் தெரியும். ஆனால் உங்கள் அதிகாரத்தில் குறுக்கிட்டதற்கு நாங்கள் கொடுக்கும் தண்டனை அதுதான்!" என்றேன்.

மறுநாள் என் குழு உறுப்பினர்களுள் ஒருவனான குமார் வந்து என் எதிரே அமர்ந்தான். லாரிகள் பெட்டிகளை எல்லாம் சாலை ஓரத்திலிருந்து எடுத்துச் சென்றிருந்தன.

"அம்மா, நேற்று நடந்ததை நான் மறக்கவில்லை... உங்களுக்கு சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை முன்பின் தெரியாது. அவர்கள் உங்களுக்கு உறவும்

புள்ளி விபரப் புலி!



1998 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி வேலை தேடிக் கொண்டிருக்கும் பெண்களின் எண்ணிக்கை 95.30 லட்சம். 2003இல் இந்த எண்ணிக்கை 107.50 லட்சமாக உயர்ந்துள்ளது. வேலை தேடும் பிற்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 58 லட்சத்திலிருந்து 66.3 லட்சமாக உயர்ந்துள்ளது. 60 வயதைக் கடந்து இன்னமும் வேலை தேடிக் கொண்டிருப்பவர்கள் மட்டும் 59,000 பேர் உள்ளனர். இது 'அஃபீஷியல்' புள்ளிவிவரம் மட்டுமே. அது சரி, வேலையில்லாமல் வாலைச் சுருட்டிக் கொண்டிருக்கும் புலிகளைப் பற்றி யாராவது கணக்கெடுப்பு நடத்துவார்களா?

அல்ல. அவர்களுக்கு உதவுவதால் உங்களுக்கு எதுவும் கிடைத்து விடப் போவதில்லை. நேற்று அந்த ஆர்க்கிடெக்ட் உங்களிடம் கொஞ்சம் கூடக் கருணை இல்லாமல், கடுமையாக நடந்துகொண்டபோது, எப்படி உங்களால் அமைதியாக இருக்க முடிந்தது? இந்த மாதிரி தொல்லைகள் இருந்தும் எதற்கு இதில் எல்லாம் ஈடுபட்டு உழைக்கிறீர்கள்?'' என்றான் குமார்.

அப்போது ஒருவர் கதவை விரல்களால் தட்டிவிட்டு உள்ளே வந்தார். நடுத்தர வயதுக்கார செக்யூரிட்டி பணியாளர். கடந்த இரண்டு நாட்களாக ஜார்ஜின் பங்களாவை அடுத்த வீட்டுமனையில் அவரைக் காப்பாளராகப் பார்த்த நினைவு வந்தது. ஆனால் பிரச்னைதான் முடிந்துவிட்டதே, மறுபடி இவர் எதற்கு இங்கே வந்திருக்கிறார் என்று கவலை தோன்றியது.

''அம்மா, நேற்று என் முதலாளி செய்தது தவறு. அவரை எதிர்த்துப் பேச எனக்கு உரிமை இல்லை. நேற்று என்னுடைய ஷிஃப்ட் முடிந்ததும், சாலையில் உங்கள் பெட்டிகளுக்குக் காவல் இருந்தேன், உங்கள் அனுமதி இல்லாமலே. நான் எளியவன். என்னிடம் உங்களுக்குக் கொடுப்பதற்கு கத்தை கத்தையாகப் பணம் இல்லை. ஆனால் என்னுடைய ஒருநாள் சம்பளத்தை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். இதோ, என்னுடைய செக்!'' என்று ஒரு பழைய கவரில் அதை வைத்து என்னிடம் கொடுத்தார். நான் பிரமித்து உட்கார்ந்துவிட்டபோதே, போய்விட்டார்.

நான் கவரைப் பிரித்து, செக்கை எடுத்துப் பார்த்தேன். ரூ. 160/-க்கான காசோலை அது. என் கண்களில் நீர் துளித்துவிட்டது மகிழ்ச்சியில்.

நான் குமாரைப் பார்த்தேன். ''குமார், என்னைப் பொறுத்தவரையில் இந்தத் தொகை பதினாறு லட்சத்துக்குச் சமானம். இப்படிப்பட்ட மக்களின் மனங்களுக்காகத்தான் நாம் உழைக்கிறோம்!'' என்றேன்.

(தொடரும்)

டி.வி.எஸ் பிஃப்டி ஒன்று வெகுவேகமாய் வந்து, பிரேக் பிடித்துத் தரை தேய்த்து நிற்கின்றது. அதை இயக்கி வந்த இளைஞனுக்கு நீண்ட தூர ஓட்டப்பந்தயத்தில் ஓடி வந்த மாதிரி மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்குகிறது. அவனது உடலும் வார்த்தைகளும் படபடத்து வருகின்றன. "இங்கனெ... ஆறுமுகம்ங்கிறது... யாருங்க?" என்கிறான். "நான் தான்ப்பா என்னா வேணும்...? சொல்லு!" என்று எழுந்து செல்கிறது நெடிய உருவம் ஒன்று. "ஊர்க்கேணியிலெ... எங்க அக்கா ஒண்ணு குதிச்சு தற்கொலை பண்ணிக் கிச்சுங்க... ஐம்பதடி ஆழத்துலெ சிக்கிக்கிச்சுங்க. பாடியைத் தூக்கணும்ங்க!" பையன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே டி.வி.எஸ் பிஃப்டியின் பின்னிருக்கையில் அமர்ந்து விடுகிறார் ஆறுமுகம். வண்டி வேகமெடுக்கிறது.

இவர்கள் செல்வதற்குள் போலீசும் அந்த இடத்துக்கு வந்துவிடுகிறது. "ஆறுமுகம் வந்துட்டாருல்லே. பாடியை எடுத்துடலாம்!" எனக் கூறும் காவலர் ஒருவர், கேணியைச் சுற்றிலும் வேடிக்கை பார்த்தபடி நின்று கொண்டிருந்த ஊர் ஜனங்களைத் தள்ளிப் போகும்படி விரட்டுகிறார். 'தண்ணீர் மாயாவி' ஆறுமுகத்தைக் கண்டதும், மொத்த ஜனத்திரளும் வழிவிட்டு ஒதுங்குகிறது. கேணித் தண்ணீருக்குள் சரேலெனப் பாய்கிறார் ஆறுமுகம். அடுத்த பத்து நிமிடங்களுக்குள் ஐந்தாறு முழுக்குகள் போட்டுத் தேடிப் பிடித்து, அந்த இளைஞனுடைய அக்காவின் சடலத்தை ஐம்பதடி ஆழத் தண்ணீருக் குள்ளிருந்து நீர் மட்டத்துக்கு மேலே தூக்கிவந்து விடுகிறார் ஆறுமுகம்.

ஆடிப்பெருக்கு விழா என்றால், அன்று மேட்டூர் அணையில் பாதுகாப்புப் பணி யில் ஈடுபட்டிருக்கும் போலீசாருடன் ஆறுமுகமும் ஒரு நபராக நின்று கொண்டிருப் பார். மடித்துக் கட்டிய லுங்கி, கட்டம் போட்ட அரைக்கை சட்டை, தோளிலே ஒரு துண்டு. இதுதான் ஆறுமுகம். வயது ஐம்பத்தி மூன்று. மேட்டூரின் பதினாறு கண் பாலத்திலிருந்தோ, காவிரியிலிருந்தோ யாரேனும் தவறி விழுந்து விட்டதாகத் தகவல் வந்த உடன், மறுநிமிடம் அங்கு இருப்பார். தன்னுயிரை, துச்சமென நினைத்து தண்ணீரில் குதித்து விடுவார். தவறி விழுந்தவர்களை எப்பாடுபட்டாவது உயிருடன் மீட்டுக் கொண்டுவர பெரும்பாடு பட்டு விடுவார். சில நேரங்களில் தவறி விழுந்தவர் களின் சடலங்களை அறுபதடி, எழுபதடி ஆழத்திலிருந்தும் தூக்கிவந்து விடு வாராம்.

"மொத மொதலா இந்த வேலைல ஈடுபட்டப்போ எனக்கு வயசு பதினேழு. மேட்டூர் பதினாறு கண் பாலத்துல, பதினேழு வயசுப் பையன் ஒருத்தன் தவறி விழுந்துட்டான். அப்போ அங்க இருபதடி ஆழம். சேதி அறிஞ்சதும் யோசிக்காம கொள்ளாம பதினாறு கண் பாலத்திலிருந்து 'தொப்'புனு குதிச்சுட்டேன். தொடர்ந்து பல முழுக்குகளுக்குப் பின்னாடி அந்தப் பையனை வெறும் சடலமாத்தான் என்னால தூக்கி வர முடிஞ்சது. அன்னிலருந்து துவங்கின இந்த உயிர் மற்றும் உடல் மீட்புப்



தண்ணீர் மாயாவி!

பணியை கடந்த முப்பத்தஞ்சு வருஷமா தொடர்ந்து தொய்வில்லாம செஞ்சுட்டு வர்றேன்" என்று கூறும் ஆறுமுகத்தின் தந்தையும், அவரது காலத்தில் இதுபோன்ற வேலையைச் செய்தவராம்.

"ஆரம்பத்துல மீன் வேட்டைக்குப் போறாங்கன்னுதான் நெனைச்சிருந்தேன். ஒருநாள் நடுச் சாமத்துலெ நாலைஞ்சு பேர் வந்து வீட்டுக் கதவைத் தட்டினாங்க. இவுரு எந்திரிச்சு வெளியெ போனவரு, அவுங்கள்ட்ட ஏதோ பேசிட்டு உள்ளார வந்தாரு. 'ஒரு அவசர வேலையாக் கூப்பிடுறாங்க. போய்ட்டு விடியறதுக்குள்ளார வந்துடுவேன். கதவை மட்டும் தாழ்ப்பாள் போட்டுக்க'ன்னு சொல்லிட்டு இவுரு பாட்டுக்குப் போய்ட்டாருங்க. விடியறவரைக்கும் எனக்குத் தூக்கமே வரலே. விடிஞ்சதும் அக்கம் பக்கத்துலெ போயி சொன்னேன். "ஓ... அதுவா சேதி! எங்கேயாவது யாராவது தண்ணீல வுளுந்து தொலைச்சிருப்பாங்க. அந்த உடம்பைத் தூக்கித் தரப் போயிருப்பான்!"னு சொன்னாங்க. எனக்கு அப்பிடியே 'திகில்' அடிச்சாப்புல ஆயிடிச்சு. அவரு அன்னைக்கி திரும்பி வர்ற வரைக்கும் என் உசுரு என்கிட்டே இல்லே!" என்று கூறும் ஆறுமுகத்தின் மனைவி சித்ராவின் முகத்தில் இன்னமும் கிலியின் மிச்சமிருக்கிறது.

"இதுவரைக்கும் தண்ணியில குதிச்சு உயிருக்குப் போராடிட்டு இருந்தவங்க சுமார் நூற்றி ஐம்பது பேரை உசுரோட காப்பாத்தியிருக்கேன். தண்ணீருக்கடியில இறந்துபோன இருநூற்றி ஐம்பது உடல்களை மீட்டெடுத்திருக்கேன். சில சமயம் தண்ணீருக்குள்ளருந்து சடலங்கள மீட்டுக் கொடுத்துட்டு, வீட்டுக்கு வந்த பின்னாடி இரவு வேளைகள்ல அவங்களை நினைச்சு அழுதுட்டே இருப்பேன். தண்ணீருக்குள்ள சிக்கிக்கிட்டு உயிருக்குப் போராடுறவங்க, உயிரிழந்தவங்க, எல்லாரையும் நான் யாரோ எவரோன்னு நினைக்கறது இல்லை. என் மகளாக, மகனாக, உறவாத்தான் எண்ணி அவங்களைக் காப்பாத்தத் துடிக்குது என் மனசு. அவங்களை உரியவங்க கிட்ட ஒப்படைக்கும்போது, அவங்களுக்கு ஏற்படுற மகிழ்ச்சியை வார்த்தைகளால கூற முடியாது. மேட்டூர் காவிரி ஆத்துல சில குறிப்பிட்ட இடங்கள்ல சுழல் இருக்கு. சுற்றுலாப் பயணிங்க தங்களுக்கு நீச்சல் தெரியும்ங்கிற தைரியத்தில் சுழல் பகுதிக்குப் போயிடுற விபரீதம் ஏற்பட்டுடுது. இந்தச் சுழலில் சிக்கி இறந்தவர்களே அதிகம். உயிருக்குப் போராடும்போது காப்பாற்றிக் கரை சேர்க்கறதுக்குள்ளே ஒரு சிலர் இறந்து போயிடுவாங்க. அப்போ எனக்கு மிகவும் வேதனையா இருக்கும்!" என்று கூறும் ஆறுமுகத்தின் இரண்டாவது மகன் சதீஷ்குமாரும், தற்போது அப்பாவைப் போலவே சடலங்களை மீட்டுக் கொடுக்கத் தொடங்கியுள்ளாராம்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு







புக் ஜாம்

"ஹாய் ஸ்ரேயா... இவ்வளவு சீரியசா எதைப் பத்தி யோசிச்சிட்டிருக்கே? அழகான பெண்கள் யோசிக்க மாட்டாங்கன்னு சொல்வாங்களே?"

"ம்ம்ம்... ஒரு நியூட்ரான் ஒரு பையானை உமிழும்பொழுது ஏற்படும் மாற்றங்கள் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் வஸந்த்"

"ஐய்யோ, என்ன ஆச்சு உனக்கு? ஏன் இப்படியெல்லாம் பேசறே?"

"நான் யார்? நீ யார்? இந்தப் பேரண்ட இயக்கத்தில் ஒரு சிறு துகள்... இல்லை, இல்லை சிறு துமிகள். அப்படித்தான் பொன். சின்னதம்பி முருகேசன் சொல்லியிருக்கிறார்."

"யார் அந்த பொன். சின்னதம்பி முருகேசன்? கொஞ்சம் புரியற மாதிரிதான் சொல்லேன் ஸ்ரேயா"

"ஃபிரிட்ஜோஃப் காப்ராயோட 'டாவோ ஆப் பிஸிக்ஸ்' புக்கை பொன். சின்னதம்பி முருகேசன் தமிழ்ல மொழி பெயர்த்திருக்காரு. புக்கோட பேரு இயற்பியலின் தாவோ. சந்தியா பதிப்பக வெளியீடு."

"என்னது இயற்பியலா? நான் எஸ்கேப்."

"ஏய் பயப்படாதே க்வாண்டம், குவர்க், எனர்ஜி இப்படி பயமுறுத்தற விஷயங்களை உன்னை மாதிரி குட்டிப் பசங்க கூட புரிஞ்சுக்கற மாதிரி எழுதியிருக்காரு. அதோடு சயின்ஸையும் நம்மோட சமய இலக்கியங்களையும் டூப்பா கம்பேர் பண்ணியிருக்காரு. ஒரு தடவை படிச்சுப் பாரு."

"ஓ.கே. பை தி வே, நான் இப்பத்தான்





க்விங்க் படிச்சு முடிச்சேன். வாவ்... சூப்பரா இருந்துச்சு."

"க்விங்கா? அப்படின்னா என்ன? க்வாண்டமோட சிஸ்டரா?"

"நோ... நோ... இது ஆனந்த் ராகவ் எழுதியிருக்கிற புது புக்கோட பேரு. குருவி கத்தற சத்தம் தான் க்விங்க்."

"ஐ... பேரு நல்லாயிருக்கே? சிறுகதைத் தொகுப்பா?"

"ஆமா. கிழக்கு பதிப்பகத்தோட லேட்டஸ்ட் ரிலீஸ். வித்தியாசமா நிறைய கதைகள் இருக்கு. என்ஜாய் பண்ணிப் படிக்கலாம்."

"சரி. அப்ப ஒண்ணு செய்யலாம். க்விங்க்கையும் க்வாண்டமையும் நாம எக்ஸ்சேஞ்ச் பண்ணிக்கலாம். ஓ.கே.வா?"

"டபுள் ஓ.கே."

"ஹே... சொல்ல மறந்துட்டேன். இயற்பியல் படிச்ச கையோடு வாலியோட திரையிசைப் பாடல்கள் தொகுப்பு ஒண்ணு படிச்சேன். வானதி பதிப்பகம் பப்ளிஷ் பண்ணியிருக்காங்க. நல்ல கலெக்ஷன்."

"பரவாயில்லியே. பிரிட்னி ஸ்பியர்ஸ் பாட்டுதான் படிப்பேன்னு நினைச்சேன்."


"அதை ஏன் கேட்கறே? வாலி கூட பிரிட்னி ஸ்டைல்ல நிறைய இங்கிலீஷை சும்மா கலந்து விட்டிருக்காரு. உனக்கு ஒரு பாட்டுப் பாடிக் காட்டட்டுமா?"

"வேண்டாம் தாயே. நான் இந்த பேரியக்க மண்டலத்தில் மேலும் சிறிது காலம் வாழ ஆசைப்படுகிறேன்." ●

1. கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்கள், வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017. 476 பக்கம். ரூ.120/-

2. க்விங்க், ஆனந்த் ராகவ், கிழக்கு பதிப்பகம், எண்.16, கற்பகாம்பாள் நகர், மயிலாப்பூர், சென்னை - 600 004. 192 பக்கம். விலை ரூ.75/-

3. இயற்பியலின் தாவோ, தமிழில் - பொன். சின்னத்தம்பி முருகேசன், சந்தியா பதிப்பகம், 57ஏ, 53வது தெரு, அசோக் நகர், சென்னை - 600 083. 452 பக்கம். விலை ரூ.190/-



அறிவுமதி

சுனாமி துயரத்துக்கு நிதி திரட்டும் முயற்சியாக 'கட்லே கடலம்மா' என்கிற பெயரில் முன்னணி பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள் பலரை ஒன்றுபடுத்தி, இசைக் குறுந்தகடு வெளியிடும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் அறிவுமதி. இதில் பழநிபாரதியும் ஒரு பாடல் எழுதியிருக்கிறார். முழுக்க முழுக்க அனைவரும் இதில் இலவசமாகப் பணிபுரிகிறார்களாம்.

பழநிபாரதி





எங்கே என் கண்ணன்?

'மாயை
என்னில்
ஓர் அங்கம்
மதியும்
அதனில்
அடங்கும்'
- ஸ்ரீ கிருஷ்ணன்

அந்தக் குறிப்புகள் ஜோதிடரை உலுக்கி எடுத்துவிட்டன. காலக் கணக்குப் போடுகின்ற கணக்கு வாத்தியார்கள்தான் ஜோதிடர்கள். எல்லாமே ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவை என்பதுதான் ஜோதிடர்கள், ஜோதிடம் மூலம் உணர்ந்து வைத்திருக்கும் உண்மையுமாகும். எனவே, இந்த மாதிரி அனுபவங்கள் ஏற்படும்போது அதை சந்தேகப்படுவதோ, புரிந்து கொள்ளாமல் போவதோ அவர்கள் வரையில் நடக்க வாய்ப்பில்லை.

ஜோதிடர் பஞ்சாட்சரம்கூட அந்தக் குறிப்புகளை அசை போட்டவராக, அப்போதைய காலப்ரமாணத்தை கவனித்தார். அன்றைய தினம் கேதுவின் ஆதிக்கத்தில் இருந்தது. அவருக்கும் கேது தசைதான்... அதுதான் ஒருவனை கோயில், குளம் என்று தள்ளிக்கொண்டு போகும். எல்லாக் குப்பையிலும் இரும்புத் துகள்களை காந்தமானது கவர்ந்து கொள்கிற மாதிரி, கேது விஷயம் இன்னொரு கேதுவோடு எப்படியாவது கைகோத்துக் கொண்டு விடும்.

இன்றும் அப்படி நடந்து விட்டதை எண்ணி ஆச்சரியப்பட்டவர், 'கண்ணன் வருவானா?' என்று தனக்குள் சந்தேகமெல்லாம் படவில்லை. 'கண்ணன் வரப் போகிறான். கங்கைக் கரையில் கிடைத்திருக்கும் சத்யவாக்கு இது!' என்று நம்பியவர், அப்படியே அந்த சாளக்கிராமங்களை கண்ணில் ஒற்றிக் கொண்டார். கண்களில் கண்ணீர் திரண்டிருந்தது.

திருவல்லிக்கேணி நரசிம்மன் அகத்தில், தன் அகத்து கண்ணனுக்கான



இந்திரா செளந்தர்ராஜன்

திருவாராதனையை முடித்துத் திரும்பவும் பிரம்புப் பெட்டிக்குள் தூக்கி வைத்த போது, பார்த்துக் கொண்டேயிருந்தான் நரசிம்மன் பிள்ளை கௌசிக். ப்ளஸ்டு படிக்கும் பிள்ளை... ஆனால் புஷ்டியான ஆகாரம் காரணமாக, ஒரு ஐந்தாறு வயது கூடுதலாகத் தெரிந்தான். பெர்முடாஸ் ட்ரவுசர், டீ ஷர்ட் என்று நகரத்தனமாய் இருந்தவனுக்கு சீனுவின் திருவாராதனை ஒரு புரியாத புதிராகவே இருந்தது.



"மாமா..."

"உம்..."

"அந்த மரப்பாச்சி பொம்மை யாரு...?"

"கண்ணன்டா... பொம்மைங்காதே, அப்படிச் சொல்லப்படாது..."

"பொம்மை மாதிரி இருந்தது. அதான் கேட்டேன். ஆமா, எங்க போனாலும் எடுத்துண்டுப் போவேளா?"

"நீ என்ன கேக்கறேன்னு புரியறது... இது எங்க ஆத்து பெருமாள். பல தலைமுறையா என் முன்னோர்கள் சேவிச்ச பெருமாள். ஓட்டப்பந்தயத்துல ரிலே ரேஸ் ஓடியிருக்கே தானே?"

"உம்... சொல்லுங்கோ..."

"அப்படி ஒருத்தர் மாத்தி ஒருத்தர் இதை விடாம பூஜை பண்ணிண்டு வர்றோம்..."

"பண்ணலேன்னா...?"

"இதுக்கு என்ன பதில் சொல்றது... பண்ணணும்... பண்ணிண்டு வரோம்."

"ஒருநாள்கூடத் தவறாமலா...?"

"ஆமாம்... ஒருநாள் தவறாம சாப்பிட்றோமா இல்லையா?"

"அந்த மாதிரி விடாம இதைச் செய்யணுமா?"

"ஆமாம்... அந்தக் காலத்துல பெரியவா நிறைய விஷயங்கள் வகுத்துக் கொடுத்துட்டுப் போயிருக்கா. அதன்படி நடந்துண்டா எல்லார்க்கும் நல்லது."

"அது என்னென்ன மாமா...?"

கௌசிக் சங்கிலிக் கண்ணிகளாய் கேள்வி கேட்டுக்கொண்டே போனான். நரசிம்மனுக்கே அது எரிச்சலை உண்டு பண்ணிவிட்டது.

"கௌசிக்... வாட் ஈஸ் திஸ் நான்சென்ஸ். கோ... கோ அண்ட் டேக் யுவர் புக்ஸ். ஹோம் ஓர்க்க முடி. இங்க என்ன தொணதொணன்னு கேள்வி கேட்டுண்டு . மாமா, மாமிக்கு ரயிலுக்கு வேற நாழியாயிண்டுருக்குப் பார்..."

"இல்ல நரசிம்மா... நம்ம வைஷ்ண



கபிலன்

ஷங்கரின் பாய்ஸ், அந்நியனைத் தொடர்ந்து சிவாஜியிலும் பாடல் எழுதவிருக்கிறார் கபிலன். என்ன சொக்குப்பொடி போட்டாரோ!

வத்துல தர்க்கத்துக்கு ஒரு தனி இடம் உண்டு. அதுல கரை கண்ட பெரியவா எவ்வளவோ பேர் நம்மதுல இருந்துருக்கா. ராமானுஜரைப் பார்த்து சமணர்கள் கேட்காததையா இவன் கேட்டுடப் போறான். கேட்கட்டும்... இவனால நானும் கொஞ்சம் யோசிப்பேனோல்லியோ?''

- சீனு திரும்பவும் அவனைத் தூண்டி விட்டார்.

''நீ கேளுடா கௌசிக்...''

உடனே கௌசிக்,

''இத்தனை வருஷ பூஜையால என்ன கிடைச்சுது?'' என்றான்.

''நல்ல கேள்வி. பூஜைங்கறது ஒண்ணை எதிர்பார்த்துச் செய்யறதில்ல. பிரதிபலன் இல்லாம பண்றதுக்குப் பேர்தான் பூஜை...''

''அப்ப வெட்டிவேலையால்ல இது ஆயிடும்...''

- கௌசிக்கின் பதில், கேள்வி கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது. நரசிம்மனுக்கே என்னவோ போலாகிவிட்டது.

''மாமா...நான் இப்பத்தானே சொன்னேன். விடுங்கோ, உங்களுக்கு ரயிலுக்கு டயமாவுது பாருங்கோ... சாப்ட்டு கிளம்ப சரியா இருக்கும். வழியில சாப்பிட சப்பாத்தி, புளிசாதம், தக்காளித் தொக்குன்னு கட்டி வெச்சிருக்கேன். நாளைக்குச் சாயந்தரம் வரை தாங்கும். நாளான்னிக்குக் கிளம்பற ட்ரெய்ன் வாரணாசி போயிடும். அங்கதான் யாரோ கணேஷ்னு ஒரு பிள்ளையாண்டான் இருக்கான். அவன் பார்த்துப்பான்னுட்டேன்.''

- நரசிம்மன் இடையில் புகுந்து பேச்சை மாற்றி விறுவிறுவென்று அடுத்த கட்டத்துக்குப் போய்விட்டார்.

''எங்க ஸ்கூல்ல எங்க மாஸ்டர்ஸ்லாம் எதுவா இருந்தாலும் கடவுள்கிட்ட கேட்கலாம், அவர் கொடுப்பார்னு சொல்லியிருக்கா. அதனாலதான் அப்படிக் கேட்டேன். 'தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும்'னு ஜீசஸ்கூட சொல்லியிருக்கறதா ஜேம்ஸ்னு என் ஃப்ரெண்ட் ஒருத்தன் சொல்வான். நீங்கதான் பூஜைங்கறது ஒண்ணை எதிர்பார்த்து செய்யறதில்லைன்னு சொன்னேள். புத்தர்கூட ஆசைப்படாம இருக்க ஆசைப்பட்டார்னு ஒருத்தர் சொல்லியிருக்கார். எதையும் கேக்காம, எதிர்பார்க்காமெல்லாம் யாராலையும் இருக்க முடியாது. அப்படி இருக்கேன்னு யாராவது சொன்னா அது பொய்.

பொய்யானவா எவ்வளவு பூஜை செய்தாலும் பிரயோஜனமில்லன்னு எங்க யோகா மாஸ்டர் சொல்லியிருக்கார்''

- கௌசிக் கொடுத்த தன்னிலை விளக்கம், சீனுவை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது.

சென்ட்ரலில் ஒரு மினி இந்தியாவைக் காண முடிந்தது. எல்லோர் கைகளிலும் ஒரு தண்ணீர் பாட்டில். சீனு வரையில் அந்தக் காட்சி கண்ணைக் கரித்தது.

அப்போது ''அப்பா...'' என்று ஒரு

குரல். திரும்பினால் ஆபீஸ் யூனிஃபார்மில் சம்பத்!

"சம்பா..." ராஜம் கதிர் பட்ட பூமொட்டு போல சத்தமின்றி வெடித்தாள். சீனு முகத்தில் ஒரு சிட்டிகை அளவுக்குச் சிரிப்பு. ஓடி வந்த சம்பத், லக்கேஜை அவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டான். பிரம்புக் கூடையை சீனு தராமல் தானே வைத்துக்கொண்டார்.

"என்னப்பா இது... நம்மாகம் இருக்கும்போது எதுக்கு நரசிம்மனாத்துக்குப் போனேள்?"

சீனு எதுவும் சொல்லவில்லை. ஆனால் ராஜம் அவனோடு சற்று ஒதுங்கிச் சென்று பேசினாள்.

"சம்ப்பா... இந்தத் தடவை சாரு ரொம்ப அன்னியமா நடந்துண்டா. அவளுக்கு இந்த நாடி ஜோசியம், யாத்திரை இதுல எல்லாம் துளியும் நம்பிக்கை இல்லை. அப்படி இருக்க, எப்படிடா உன் ஆத்துல இருந்து ஆரம்பிக்க முடியும்...? எல்லாத்துக்கும் மேலா ஆத்து கண்ணனை மரப்பாச்சின்னு ஏளனமாப் பேசிட்டா. ஆகையால பெருமாளோட உன் அகத்துக்கு வரப் பிடிக்கலை."

இலேசாகக் கண்களில் ஈரத்தை மட்டும் காட்டினான் சம்பத். ஏதோ சொல்ல வந்தான். ஆனால் சீனு கோச்சுக்குள் எல்லாவற்றையும் வைத்துவிட்டு அழைத்தார். அதன்பின் உள்ளே போய் அமர்ந்துகொண்டனர்.

"சரிப்பா... நீ கிளம்பு. உனக்கு ஆபீஸ்ல நிறைய வேலை இருக்கும். ஒண்ணு மட்டும் சொல்லிக்கறேன். உனக்கு நிச்சயமா ஒரு குழந்தை பிறக்கும். என் சாவுக்குப் பேரன் நிச்சயம் நெய்ப் பந்தம் பிடிப்பான். அந்த வெளிச்சத்துலதான் நான் வைகுண்டத்துக்குப் போகணும்..."

சீனுவின் பேச்சு சம்பத்தை ஒரு கீறு கீறியது. காந்தவும் செய்தது. அப்பாவை மலங்க மலங்கப் பார்த்தான். பின் மணி பர்சில் இருந்த சில ஐந்நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினான்.

"இல்லப்பா... என்னண்ட இருக்கு. பென்ஷன் பணமெல்லாம் எதுக்கு இருக்கு? நீ கிளம்பு, டயமாச்சு பார்..." என்று அவனை ஒரு மூன்றாம் மனிதனைப் போலக் கிளப்பிவிட்டார். நல்ல வேளை சிக்னல் விழுந்து விசில் சத்தம் கேட்கவும், சம்பத்தும் வேறு வழியின்றி இறங்கினான். ரயிலும் வேகமெடுக்க ஆரம்பித்தது.

உள்ளே கண்களை மூடிக்கொண்டு கைகளைக் கூப்பியிருந்தார் சீனு. அவருக்குள் கௌசிக் விளையாட்டாய் கேட்ட கேள்விகள். ஒரு கேள்விக்குக்கூட தான் சரியான பதிலைக் கூறவில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டவர், 'பொய்யானவா எவ்வளவு பூஜை செய்தாலும் ஒரு பிரயோஜனமும் இல்லை' என்று அவன் சொன்னதில் மையம் கொண்டிருந்தார்.

அவர் வரையில் இதுவரை வாழ்ந்த மொத்த வாழ்வும் அர்த்தமற்ற ஒன்றாக ஆகிவிட்டது போலகூட ஒரு பிரமை தட்டியது.

அதனால்தான் வம்ச விருத்தியில் ஓர் ஊனமோ? மாட்டுப் பெண்ணும் எதிர்மறைச் சிந்தனைகளில் உழல்கிறாளோ?


அவர் கேள்விகளில் தத்தளித்த அந்த நொடியில் அந்த கோச்சுக்குள் ஓர் அழுக்குச் சித்தர் புகுந்திருந்தார்!

(தொடரும்)

மெடிக்கல் மூலை!

காட்டாங்குளத்தூரிலுள்ள SRM மருத்துவக் கல்லூரி நிர்வாகம், பாம்புக் கடியினால் பாதிக்கப்படுபவர்களின் நலனுக்காக, விஷமுறிவு சிகிச்சை பற்றிய முக்கியத் தகவல்கள் கொண்ட இணையதளம் ஒன்றைத் துவக்க இருக்கிறது. கூடவே மக்களிடம் தற்காப்பு நடவடிக்கைகள் குறித்த பயிலரங்கங்கள் நடத்த உள்ளனர்.

- Rx



மேஷம்:

எடுத்த காரியம் யாவும் வெற்றி தரும் வாரம். தனம், குடும்பம், வாக்கு மேன்மை உண்டாகும். வீடு வாங்க முயற்சி செய்யலாம். குழந்தைகள் வழியில் சுபகாரியம் நடக்கும். தொழில் துறையில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்குப் பண வரவு, பதவி உயர்வு கிட்டும். வாகனம் வாங்கலாம். கலைஞர்களுக்குப் பொற்காலம். வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும்.

ரிஷபம்:

இதுநாள் வரை இருந்து வந்த மனக்குழப்பம் போகும். மறைமுக எதிரிகளால் தொல்லை இருக்கும். குழந்தைகள் பற்றிய மனக்கவலை ஏற்படும். நெருங்கிய உறவினர் (அ) நண்பர்களுடன் மனஸ்தாபம் வரும். எச்சரிக்கையுடன் பழகுதல் நலம். எதிர்பாராத வழியில் பரிசுப் பொருள் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் அவசியம். அண்டைநாட்டுத் தொழில் செய்பவர்களுக்கு நல்ல பலன் ஏற்படும். வியாழன்தோறும் குருவுக்கு தீபம் ஏற்றி, குரு காயத்ரி படித்து வரவும்.

மிதுனம்:

உயர்வான வாரம். திருமணத் தடை விலகி திருமணம் கைகூடும். சொத்துக்கள் வாங்க நல்ல நேரம். பொருளாதாரச் சிக்கல் போகும். நீண்டநாள் கனவுகள் நிறைவேறும். குழந்தைகள் வழியில் சந்தோஷம் ஏற்படும். வேலையில் இருந்த நெருக்கடிகள் விலகும். பதவி உயர்வு காத்திருக்கிறது. மனத்தில் தைரியம், தன்னம்பிக்கை வளரும். கலைஞர்கள் நல்ல பலனை அடைவார்கள். கேது / ராகு வழிபடுதல் நலம்.

கடகம்:

நல்ல வேலைவாய்ப்புகள் தேடி வரும். நீண்ட தூரப் பிரயாணம் செல்ல நேரிடும். தெய்வ பலம் இருக்கிறது. சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். அனாவசியமான செலவுகள் குறையும். புதிய வீடு, சொத்துகள் வாங்க ஏற்ற நேரம். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் ஏற்றம் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் நன்றாக இருக்கும். குரு / சனி வழிபாடு நல்லது.

சிம்மம்:


ராசிநாதன் ராசிக்கு 2ல் கேதுவுடன் சஞ்சாரம் செய்வதால் யாரிடமும் அதிகம் பேசக்கூடாது. வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாது. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. வியாபாரிகளுக்குத் தொழிலில் மந்தநிலை இருக்கும். கணவன் மனைவி உறவில் அனுசரணை தேவை. சிலருக்கு வீடு மாற்றம், தொழில் மாற்றம் ஏற்படும். சுபகாரியம் நடக்கும். மாணவ மாணவிகளுக்கு படிப்பில் கவனம் தேவை. கலைஞர்களுக்குச் சுமாரான நேரம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. ராகு/கேது/குரு/சனி வழிபடுதல் நலம். சனிதோறும் ஆஞ்சநேயர் கோயில் சென்று வரவும். சுந்தரகாண்டம் படித்து வருதல் நன்மை தரும்.

கன்னி:

நல்ல வாரம். நினைத்த காரியம் ஒவ்வொன்றும் வெற்றி பெறும். குடும்பத்தில் சந்தோஷம் ஏற்படும். குழந்தைகள் வழியில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

நடக்குமென்பார்

தஞ்சை பரத்வாஜ்



வீடு/வாகனம் வாங்கலாம். மனக் குழப்பம் தீரும். புதிய தொழில் துவங்கலாம். வியாபாரிகளுக்குத் தொழில் முன்னேற்றம் ஏற்பட்டு வளர்ச்சிப் பாதையில் செல்லும். வேலையில் உயர்வு, இடமாற்றம் ஏற்படும். கலைஞர்கள் ஏற்றம் காண்பார்கள். வருவாய் அதிகம் பெறுவார்கள். ராகு/கேது வழிபடுதல் நலம்.

துலாம்:

நல்ல வாரம். எடுத்த காரியம் வெற்றி அளிக்கும். திருமணக் காரியம் கைகூடும். நோய் நொடிகள் விலகும். உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல மாறுதல் வரும். வியாபாரிகளுக்குப் பொருளாதாரம் ஏற்றம் பெறும். புதிய வீடு/ தொழில்/ வாகனம் சேரும். திருமணத் தடை விலகும். சனி பகவான் வழிபாடு நலம் தரும்.

விருச்சிகம்:

நீண்டநாள் முடியாத விவகாரம், வழக்கு, தொல்லைகள் போகும். குடும்பத்தில் நல்ல காரியம் நடக்கும். வீடு/ வாகனம் வாங்கலாம். வெளிநாட்டுப் பிரயாணம் ஏற்படும். மனக்குழப்பம் தீரும். குழந்தைகள் வழியில் நல்லது நடக்கும். வியாபாரிகள் நல்ல வருவாய் பெறுவர். புதிய தொழில் துவங்க நல்ல நேரம். ராகு/கேது வழிபாடு செய்யவும். குரு ப்ரீதி செய்து வரவும்.

தனுசு:

நன்மையான வாரம். சுப காரியம் கைகூடும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் நற்பலன் ஏற்படும். வீடு/ வாகனம் வாங்க ஏற்ற நேரம். வியாபாரிகளுக்குத் தொழிலில் நல்ல மேன்மை கிட்டும். வேலையில் உயர்வு கிட்டும். பொருளாதாரப் பற்றாக்குறை வராது. ஆடை, ஆபரணப் பொருள்கள் வாங்குவீர்கள். கலைஞர்களுக்குப் பொற்காலம். ராகு/கேது/சனி வழிபடுதல் நலம்.

மகரம்:

மிகவும் நல்ல வாரம். தொட்டது துலங்கும். உத்தியோகஸ்தர்களுக்கு இடப்பெயர்ச்சி ஏற்படும். சிலருக்கு வீடு மாற்றம் வரும். தனம், குடும்பம், வாக்கு மேன்மை பெறும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். நீண்ட தூரப் பிரயாணம் ஏற்படும். புதிய தொழில் தொடங்கலாம். வீடு வாங்க ஏற்ற காலம். திருமணம் ஆகாத ஆண், பெண்களுக்குத் திருமணம் கைகூடும். கலைஞர்கள் ஏற்றம் பெறுவர். குரு/சனி வழிபடுதல் நலம்.

கும்பம்:

தொட்டது துலங்கும் வாரம். வெளிநாடு செல்லும் வாய்ப்பு தேடி வரும். அதிகம் பேசக்கூடாது. வீடு / வாகனம்/ ஆடம்பரப் பொருள் வாங்க உத்தமமான நேரம் இது. கொடுக்கல்

நடக்கும்!

பரத்வாஜ் பதில்கள்

என் மூத்த மகனுக்கு 27.1.2000ல் திருமணம் நடைபெற்று, இதுவரை குழந்தைப்பேறு இல்லை. அவனுக்கு குழந்தை பாக்கியம் உண்டா? இரண்டாவது மகனுக்கு விரும்பிய வேலை கிடைக்குமா?

- பெயர் குறிப்பிட விரும்பாத வாசகர், நவிமும்பை.

உங்கள் மூத்த மகனுக்கு 14.2.2006ல் தொடங்கும் சூரிய தசையில், உத்திரம், உத்திராடம், கிருத்திகை இவற்றில் ஒரு நட்சத்திரத்தில் குழந்தை பாக்கியம் உண்டாகும். இரண்டாவது மகனுக்கு அயல்நாடு செல்லக்கூடிய வாய்ப்புடன் அக்டோபர் 2005க்குப் பின் வேலை கிடைக்கும்.

என் மகளுக்கு 29 வயது ஆகிறது. அவளுக்குத் திருமணம் எப்போது கைகூடும்?

- வி. சின்னசாமி, சென்னை.

உங்கள் மகளுக்கு அக்டோபர் 2005க்குப் பின் திருமணம் கைகூடும். பிறந்த ஊருக்கு வடக்கு திசையிலிருந்து, இரு உடன் பிறந்தவர் உடைய, வரன் அமையும். சர்ப்ப தோஷம் உள்ள ஜாதகமாகச் சேர்க்கவும்.

ஜாதகருக்கு மனநிலை சரியில்லை. இது எப்போது சரியாகும்? இவருக்குத் திருமணம் செய்துவைத்தால் நலம் கிடைக்குமா?

- ஆர். ராஜேஸ்வரி, கோவை.

இந்த ஜாதகருக்கு 37 வயதுவரை கேது தசை நடப்பதால் மனக்குழப்பமும், வேலையின்மையும், கஷ்டங்களும் தொடரும். அதன் பின்னரே இவருக்குத் திருமணம் செய்வது நன்மை தரும். கேதுவுக்குப் பரிகாரம் செய்யவும்.

என் தங்கை மகனுக்கு 35 வயது ஆகிறது. பலமுறை முயன்றும் திருமணம் கூடி வரவில்லை. எப்போது திருமணம் நடக்கும்?

- சீதாலக்ஷ்மி கணபதி, பழைய பெருங்களத்தூர்

ஜாதகருக்கு ஜூன் 2006 வரை சுக்ர தசை நடக்கிறது. அதுவரை திருமணமாக வாய்ப்பில்லை. சூரிய தசை தொடங்கிய பின் 37வது வயதில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்கு மேற்கு/தெற்கு திசையிலிருந்து, கோயில் அருகில், மேற்கு பார்த்த வீட்டில் வசிக்கும் படித்த பெண் அமைவாள். உறவில் அமையாது.

என் மகளுக்கு 33 வயதாகிறது. பல பரிகாரங்கள் செய்தும், பலமுறை முயன்றும் திருமணம் கைகூடவில்லை. அவளுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- எஸ். மாரிமுத்து, ஆடுதுறை

உங்கள் மகளுக்கு 34 வயதில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்குத் தெற்கு திசையிலிருந்து, படித்து நல்ல வேலையில் இருக்கும் வரன் அமையும். சர்ப்ப தோஷம் உள்ள வரனாகச் சேர்க்கவும்.

வாங்கலில் உஷார். உடன்பிறந்தவர்களால் அனுகூலம் ஏற்படும். இதுநாள் வரை இருந்து வந்த மனக்குழப்பம் விலகி நற்பயன் கிட்டும். ராகு/கேது வழிபடுதல் நலம்.

மீனம்:

நன்மை தரும் வாரம். மனத்தில் இருக்கும் குழப்பம் நீங்கும். அந்நிய தேசம் செல்லும் வாய்ப்பு வரும். வீடு வாங்கலாம். மாணவ மாணவிகள் படிப்பில் மேன்மை பெறுவார்கள். சுப காரியம் கைகூடும். பணம் பெருகும். வியாபாரிகளுக்குத் தொழிலில் இருந்த மந்தநிலை மாறி நற்பலன் கிடைக்கும். கலைஞர்களுக்கு வளர்ச்சி கிட்டும். குரு ப்ரீதி செய்து வரவும். ○

“கத்திரிக்காய் கூட்டு பிரமாதம். இன்னும் கொஞ்சம் போடு” என்றான் கார்த்திக்.

‘பரிமாற வேண்டிய கையை இறுகப் பிடித்துக்கொண்டே கத்திரிக்காய் கூட்டைப் போட வேண்டுமென்றால் எப்படி?’ ஸ்ரீலதாவினுள் சினம் எழுந்தது.

திருமணமான புதுத் தம்பதிகளுக்குள் இருக்கக்கூடிய, ரசிக்கக்கூடிய இதுபோன்ற செயல்கள் அவளைக் கோபப்பட வைத்தற்கு வேறு காரணங்கள் இருந்தன. சமையல்கார அம்மாவை கார்த்திக் வேலையிலிருந்து நிறுத்தி விட்டிருந்தான். அதுவும் ஸ்ரீயின் கருத்தைக் கேட்காமல். ‘வீட்டில் சும்மா தானே இருக்கிறாள். சமைக்கட்டுமே’ என்ற எண்ணமா? அப்படியே இருந்தாலும் அது குறித்துத் தன் கருத்தை அவன் கேட்டுக் கொண்டு செயல்பட்டிருக்கலாமே!

அவன் தன்னை நெருங்கும்போது தனது கோபத்தை வெளிப்படுத்தும் வகையில் விலகிப் போனால், அவன் முகம் சிவக்கும் விதம் பயமேற்படுத்துகிறது.

சட்டென கார்த்திக்கின் பிடி இளகியது.

“எக்ஸ்யூஸ்மி” என்றபடி நுழைந்து கொண்டிருந்தாள் மல்லிகா. ‘உள்ளே வரலாமா?’ என்ற தொனி அவள் வார்த்தைகளில் தென்பட்டாலும், விடை கிடைப்பதற்கு முன்னே உள்ளே நுழைந்துவிட்டிருந்தாள்.

இந்த உரிமை ஸ்ரீலதாவைத் திகைக்க வைத்தது. இதுபோன்ற சந்தர்ப்பங்கள் அவள் மனதில் இப்போதெல்லாம் பய உணர்வையும் தூண்டுகிறது. மல்லிகாவைப் பார்த்ததும் கணவன் முகத்தில் ஓர் உற்சாகம் பரவுகிறது.


“கீழே நந்தினி மேடம், அவங்க மகனை அழைச்சுக்கிட்டு வந்திருக்காங்க. ஏதோ அர்ஜென்ஸியாம்”. கூறியபடியே உரிமையுடன் மேஜை மீது சற்று இடம் மாறியிருந்த பொருள்களை ஒழுங்கு செய்தாள். கார்த்திக்கும் ஸ்ரீயுமாகக் காட்சியளித்த திருமணக் கோலப் புகைப்படத்தை அவள் நகர்த்திய போது, அவளது விரல்கள் கணவனின் முகப் பகுதியில் சற்று அதிக நேரம் தங்கியது போல் தோன்றியது.

சட்டென கோபம் சுரக்க, “மிஸ் மல்

விலங்குகள்

பாறை ஒன்றின் மீது நரி உட்கார்ந்திருக்க, அருகில் வந்த மனிதன் ஒருவன் மிகவும் மரியாதையுடன் அதற்குக் கீழே கைகட்டி உட்கார்ந்து கொண்டான்.

“இந்த உலகில் வாழப் பல தந்திரங்கள் தேவைப்படுகின்றன நரியாரே. உங்களுக்குத் தெரியாத தந்திரமா? அவற்றையெல்லாம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்” என்ற மனிதன், தான் கொண்டு வந்திருந்த சில பழங்களைக் கீழே வைத்தான். “ஏதோ என்னாலான குருதட்சணை” என்றான்.



நரிக்குப் பெருமை தாங்க முடியவில்லை. ஓர் ஆசானுக்கே உரிய கம்பீரத்துடன், “உனக்கு எந்த அளவுக்கு தந்திரங்கள் தெரியும்? அதைக் கூறினால் அதனையும் தாண்டிய தந்திரங்களை நான் உனக்கு விளக்குவேன்” என்றது.

மனிதன் தனக்குத் தெரிந்த தந்திரங்களைப் பட்டியலிடத் தொடங்கினான். பிரமிப்புடன் கேட்ட நரி, வனத்துக்குள் சென்று சில கனிகளோடு வந்தது. அவற்றை மனிதனுக்கு எதிரே வைத்துவிட்டு “ஏதோ என்னாலான குருதட்சணை” என்றது பணிவாக.

அருண் சரண்யா



லிகா, நீங்க சொல்ல வேண்டிய விஷயத்தை இன்டர்காமிலேயே சொல்லியிருக்கலாமே."

மல்லிகாவின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. "இன்டர்காம் வேலை செய்யலே மேடம்" என்றான்.

"இருக்கலாம். ஆனால் வந்தவுடன் சேதியைச் சொல்லிவிட்டு நகர்ந்திருக்கலாமே. மேஜையைச் சரிசெய்ய வேண்டிய பொறுப்புக்காக உங்களுக்கு இவர் சம்பளம் கொடுக்கலேன்னு நினைக்கிறேன்."

மல்லிகா வேகமாகக் கீழே இறங்கிச் சென்றுவிட, கார்த்திக் ஸ்ரீலதாவை வெறித்துப் பார்த்தான்.

"அம்மாவுக்கு லெட்டர் எழுதியிருக்கேன். நீங்களும் நாலு வரி எழுதினால்



சினேகன்

'கல்யாணந்தான்' பாடலுக்குப் பிறகு, சர்ச்சைக்குரிய பாடல்களை எழுதக் கூடாதென்கிற முடிவிலிருக்கிறார் சினேகன்.

சந்தோஷப்படுவாங்க."

அனுஷாவிடம் இருந்த இந்த நல்ல பழக்கம் ராஜனுக்கு மிகவும் பிடிக்கும். யாரிடமிருந்து கடிதம் வந்தாலும், வந்த இரண்டே நாட்களில் பதில் போட்டுவிடும் பழக்கம்.

அம்மாவிடமிருந்துதான் அடிக்கடி கடிதம் வரும். மகனோடும் மருமகளோடும் தங்கி இருக்க ஆசைதான். ஆனாலும் கிராமத்தில் அதிகப் பிடிப்பு. தவிர, அங்கே மகளோடு இருந்து அவள் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு.

அனுஷா தன் தாய்க்கு எழுதிய கடிதத்தைப் படித்தான். தன்னை 'உங்கள் பிள்ளை' என்றே அவள் பல இடங்களில் குறிப்பிட்டிருந்ததை ராஜன் கவனித்தான். உளவியல் தெரிந்தவள். அம்மாவின் பாசத்தை முழுமையாகவே ஈர்த்துவிட்டாள்.

'அனுஷாவிடம் தான் கூற நினைத்த விஷயத்தை எப்போது வெளிப்படுத்தலாம்' என்ற யோசனையின் நடுவில், அவன் கண்கள் தொடர்ந்து அனுஷா எழுதியதைக் கவனித்தன.

"உங்கள் பிள்ளை மிகவும் கஷ்டப்பட்டு உங்கள் குடும்பத்தை முன்னுக்கு கொண்டு வந்ததை போன கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். அது நிச்சயம் பெருமையான விஷயம்தான்."

ராஜனுக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்தது. 'அம்மாவுக்கு இதே வேலை. மருமகளுக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் சிலவற்றைக் குறிப்பிட்டே தீருவாள். ராஜன் தன் பதினான்காவது வயதிலேயே தந்தையை இழந்ததையும், அப்போதிலிருந்தே குடும்ப பாரத்தை விதவிதமாக அவன் சமாளித்ததையும், தானும் டாக்டர் படிப்பை முடித்து, தங்கையையும் பொறுப்பாக ஓரிடத்தில் கல்யாணம் செய்து கொடுத்ததையும் அம்மாவால் உலகமகா சாதனைகளாகத்தான் பார்க்க முடிகிறது.'

ராஜனை நினைக்கும்போது அனுஷாவுக்குப் பெருமையாகத்தான் இருந்தது.

அதேநேரம் கூடவே வழக்கமான அந்தக் குற்ற உணர்ச்சியும் எட்டிப் பார்த்தது.

மாமியாரிடமிருந்து வரும் ஒவ்வொரு கடிதமும், அந்தக் குற்ற உணர்வைத் தூண்டிவிட்டுத்தான் ஓயும். "என்னை உங்களுடனே வந்து இருக்கச் சொல்லி வற்புறுத்துகிறாய். எனக்கு ஒரு பேரனையோ, பேத்தியையோ நீ பெற்றுக் கொடுத்தால், நான் குழந்தையைக் கொஞ்சுவதற்கு அங்கு ஓடிவந்துவிட மாட்டேனா என்ன?"

போன மாதம்கூடத் தன் கடிதத்தில் 'டாக்டர்கிட்டே வேணா ரெண்டு பேரும் உடம்பைக் காண்பிக்கலாமே' என்று குறிப்பிட்டிருந்தாள்.

"அனு, அம்மா அனுப்பின லெட்டரில் ஒரு பகுதிக்கு மட்டும் நீ பதிலே எழுதாமல் விட்டுட்டியே?"

அனுவுக்குப் புரிந்தது. தலை குனிந்து கொண்டாள்.

ஆனால் ராஜனுக்குப் புரியவில்லை. சமையல், வீட்டைப் பராமரித்தல் இதையெல்லாம் பார்த்துப் பார்த்துதான் செய்கிறாள். வேண்டாம் என்றாலும் தன் துணிகளைத் துவைத்து இஸ்திரி செய்வதுடன், அன்றன்று அணிய வேண்டிய துணிகளையும் தயாராக எடுத்து வைக்கிறாள். அவளுக்குத் தன்னைப் பிடித்திருக்கிறது. ஆனால் இல்லற உறவு பிடிக்கவில்லை. ஏன்?

ராஜன் பலவிதங்களிலும் யோசித்துப் பார்த்துவிட்டான். அவள் உடலில் ஏதாவது சிக்கலா? இல்லற உறவு குறித்த தவறான நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறாளா? பிரசவ பயமா? சிறுவயதில் எதைக் கண்டாவது மனதளவில் பாதிக்கப்பட, அது

இப்படி வெளிப்படுகிறதா?

இது தொடர்பாக விதவிதமான கோணங்களில் அவன் அவளிடம் பேச்சைத் தொடங்கும் ஒவ்வொரு முறையும், அனுஷாவின் கண்களில் சட்டென நீர் நிறையும். அதற்குமேல் அந்தப் பேச்சைத் தொடர முடியாமல் நிறுத்திக் கொள்ள நேரிடும்.

ஆனால் தள்ளிப்போடுவதனால் மட்டுமே அனுஷாவின் போக்கு மாறிவிடாது என்ற எண்ணம் சமீபகாலமாக ஏற்பட்டிருக்க, அவன் அந்த ஆலோசனையை இன்று கூறித்தான் ஆக வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்திருந்தான்.


"அனு, சாயந்திரம் ஆறு மணிக்கு டாக்டர் குமாரதேவிகிட்டே அப்பாயிண்ட்மெண்ட் வாங்கி இருக்கிறேன். போகலாமா?"

"ஏன், உங்கள் உடம்புக்கு என்ன?" பதற்றத்துடன் வந்த அனுஷாவின் கேள்வி பாசத்தை உணர்த்தியது. ஆனால் குமாரதேவி மனநல மருத்துவர் என்பதை அறிந்ததும் அவள் முகம் இறுகுகிறது.

'இவருக்கு எப்படிப் புரிய வைப்பேன்? விதவிதமாக எதற்காக இவர் தினந்தோறும் ஸ்ரீலதாவிடம் தன் அனுபவங்களை விவரிக்க வேண்டும்? சிங்கத்தின் வாய்ப்பகுதியைச் சரி செய்தது, சிறுபாம்புகளையே உணவாகக் கொள்ளும் ராஜநாகத்துக்கு அறுவை சிகிச்சை செய்தது, காண்டாமிருகத்தின் வயிற்றுப் பகுதியில்...' அனுஷாவுக்கு வாந்தி வரும்போல இருந்தது.

ஸ்ரீலதா தன்னுடன் இருந்தவரை தினம் தினம் இப்படி அவளுக்கு விவரித்து, தன்னை விலக வைத்தது அவன்தானே? ஒரு மனைவிக்கு இதெல்லாம் பிடிக்குமா, அவளால் இதை எல்லாம் ரசிக்க முடியுமா என்பதை எல்லாம் சிறிதும் யோசிக்க வேண்டாமா? அதைவிட்டுவிட்டு, இப்போது மனநல மருத்துவரைப் பார்த்தால் நல்லது என்றால் என்ன அர்த்தம்?

மனநல மருத்துவர் எதைப் புதிதாகச் சொல்லிவிடப் போகிறார்? "இந்த நாட்டில் எவ்வளவோ மிருக வைத்தியர்கள் இல்லையா? அவர்கள் மனைவிகள் எல்லாம் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தி, குழந்தைகள் பெற்றுக் கொள்ளவில்லையா?" என்று கேட்கக் கூடும். இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு மனமும் தனித்தனிதானே. அவன் அருகில் நெருங்கும்போதெல்லாம் அவன் ஏதோ ஒரு மிருகத்துக்கு சிகிச்சை செய்வது போன்ற காட்சி மனதில் வந்து அவனிடமிருந்து விலகச் செய்கிறதே!



தாமரை

கடுமையான முதுகு வலியால் அவதிப்பட்டு வந்த தாமரை, தீவிர யோகா பயிற்சி எடுத்து அதிலிருந்து மீண்டிருக்கிறார்.

இதையெல்லாம் இவரிடம் எப்படி வெளிப்படுத்துவது? சொன்னால் அவன் கோபித்துக் கொள்ளலாம். "என் தொழில் என்ன என்பதைத் தெரிந்து கொண்டுதானே கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டே?" என்ற நியாயமான கேள்வியைக் கேட்கலாம். அல்லது இனிமேல் தன் தொழில் தொடர்பான எதையும் அவளிடமோ, அவள் காதுபடவோ பேச மாட்டேன் எனலாம். ஆனால் பேசியது பேசியதுதானே. அவை மனதில் ஏற்படுத்திய தாக்கங்கள் அழிந்துவிடாதே.

"நான் வரலே."

"சைக்யாட்ரிஸ்ட்கிட்டே போவதிலே ஒண்ணும் தப்பில்லே" என்று தொடங்கிய ராஜன் வற்புறுத்தாது நிறுத்திக் கொண்டான். அனுஷாவின் முகத்தில் தெரிந்த வேதனை அவனைத் தடுத்து நிறுத்தியது.

அதே நேரம் தன் புகுந்த வீட்டில் மீன் தொட்டியின் பக்கமாக பார்வை செலுத்திய ஸ்ரீலதாவின் முகம் வெளிறிப்போனது. அதிர்ச்சியின் உச்சத்தில் மயக்கமடைந்தாள்.

(தொடரும்)



அன்புமணி ராமதாஸிடம் கேட்கக் கூடாத பத்துக் கேள்விகள்

1. நீங்க மரம் நட ஆரம்பிச்சிருக்கறது மகன், தந்தைக்காற்றும் கடமைதானே?

2. பிரதமருக்கு ரொம்பப் பிடிச்சது தொலைத் தொடர்பா, மருத்துவமா?

3. எங்கிட்டயாவது சொல்லுங்க, உங்க பசங்க எந்த மீடியத்துலதான் படிக்கிறாங்க?

4. பார்லிமெண்ட் லைப்ரரியில இருந்து 'முப்பது நாட்களில் இந்தி பேசுவது எப்படி?'ங்கற புத்தகத்தை நீங்கதான் எடுத்துட்டுப் போனதா சொல்றாங்களே, நிஜமா?

5. அட்லீஸ்ட் வீட்ல சாம்பிராணிப் புகையாவது போடுவீங்களா, இல்லையா?

6. கார்த்திக்கும் கட்சி ஆரம்பிக்கப் போறாராமே, என்ன பண்ணப் போறீங்க?

7. 'என் குடும்பத்தைச் சேர்ந்தவங்க எம்.பி., எம்.எல்.ஏ.வாக மாட்டாங்க' இது யார் சொன்ன டயலாக்னு ஞாபகமிருக்கா?

8. உலகத்துலயே உங்களுக்குப் பிடிக்காத ஆளு பத்திரிகையாளன்தானே?

9. மாம்பழத்துல இருந்து உதிர்ந்த ரெட்டை இலையை, மறுபடி ஒட்ட வைக்க ட்ரை பண்றீங்களாமே, உண்மையா?

10. 'இங்கிலீஷ்காரன்' படத்துக்கு ஒரு டிக்கெட் இருக்கு... வர்றீங்களா போகலாம்?

போட்டுத் தாக்கு!

பரமு

இளமை கல்கி

காதல் ரொம்ப அவசியமா?

நீலிமா ராணி - இன்றைய தேதிக்கு தமிழ், தெலுங்கு சீரியல், சினிமா என்று பிஸியாக இருக்கும் ஆர்ட்டிஸ்ட். அவருடன் ஒரு சீரியஸ்... சாரி... சீரியல் சாட்...

ஆனந்தம்

இப்போ டாப் கியர்ல போயிட்டு இருக்குற முக்கியமான சீரியல் கோலங்கள். அதுல டக்னு என்னை கமிட் பண்ணியிருக்காங்க. அதுவும் ரொம்ப முக்கியமான கேரக்டர்ல. இதுதான் சமீபத்துல என்னை ரொம்ப ஆனந்தப்பட வைத்த விஷயம்.

அது மட்டும் ரகசியம்

நான் தெலுங்கு சீரியல்ல ஒரு ஆர்ட்டிஸ்டுக்கு டப்பிங் கொடுத்துட்டு இருக்கேன். ஆனா இதுவரைக்கும் யார்கிட்டயும் இதுபத்தி சொல்லல..

இது ஒரு காதல் கதை

அப்படின்னு சொல்ற மாதிரி என் வாழ்க்கைல ஏதும் தற்போதைக்கு இல்ல... என்னைக் கேட்டா, காதல்ங்கறது ரொம்ப அவசியம்னு நான் நினைக்கல.

கெட்டிமேளம்

சத்தியமா இப்போதைக்கு இல்ல... இன்னும் நிறைய சாதிக்க வேண்டியிருக்கு... அப்புறம்தான் கெட்டிமேளம். நிச்சயமா உங்களுக்கு சொல்லிட்டுத்தான்.

அல்லி ராஜ்யம்

திருமணத்துக்குப் பிறகு எங்க வீட்ல 'அல்லி ராஜ்யம்' நடக்குமா இல்லையாங்கறது, வரப்போற பையனைப் பொறுத்தது. அதிகபட்சம் கூட்டணி ஆட்சிதான்!

ஆசை

உலகம் பூரா என்னோட பேர் ரீச் ஆகணும்ங்கற பேராசை எனக்கு இல்ல... ஆனா... நான் இருக்குற இந்த சின்னத்திரை, வெள்ளித்திரைல ரொம்ப முக்கியமான ஆள் 'நீலிமா'ன்னு பெயர் வாங்கணும். இதுதான் என்னோட ஆசை.

- கலை

படம்: ஸ்ரீஹரி



புரட்சி படைத்திருக்கின்றனர் காங்கேயம் சேரன் கலை அறிவியல் கல்லூரியின் கேட்டரிங் மற்றும் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் துறை மாணவர்கள். வழக்கொழிந்துவிட்ட பாரம்பரிய உணவுகளை, ஊர் ஊராகத் தேடிப் போய் மீட்டெடுத்துத் திரும்பி, தங்களது கண்டுபிடிப்புகளை கல்லூரி உணவு ஆய்வகத்தில் செய்து பார்த்து, தமிழகம் முதல் டெல்லி வரை உள்ள பல ஐந்து நட்சத்திர ஹோட்டல்களின் உணவுப் பட்டியல்களில் இடம் பிடிக்கச் செய்து, சாதித்திருக்கின்றனர். துறைத் தலைவர் ஜேக்கப் சகாய குமார் தலைமையில் புறப்பட்ட மாணவர் குழு, குடியரசுத் தலைவரிடமிருந்து பாராட்டுப் பட்டயத்தைப் பெற்றிருப்பதுதான் ஹைலைட்!

காங்கேயம் காளைங்க



* சேரன் காலேஜ்...



* 'செஃப் பேக்டரி'யில் செக்கிங்...!

"இன்று சைனீஸ், பிட்ஸா, பர்கர் என்று வெளிநாட்டு உணவுக் கலாசாரங்களை விரும்பி வரவேற்கிறோம். நம் நாட்டு உணவு வகைகளில், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும்கூட பிரபலமாக இருப்பது செட்டிநாடு உணவு வகைகள். இது நமக்குப் பெருமை என்ற போதும், 'தமிழகத்தின் இதர பகுதி மக்களின் பாரம்பரிய உணவு வகைகள் எல்லாம் என்னவாயிற்று?' என்ற கேள்வி ஒருநாள் எங்கள் வகுப்பில் தீப்பொறி போலப் பற்றிக் கொண்டது. உடனே இதற்கு விடை கண்டே தீருவது என களத்தில் குதிக்க முடிவு செய்தோம். எங்கள் முதல் தேடல் கொங்கு நாட்டு சமையல் வகைகளில், மூன்று வருடங்களுக்கு முன்பு ஆரம்பித்தது. கொங்கு சமூகம் பொறுமையிழந்துவிடாத காங்கேயம் காளைகள் போன்ற எங்கள் மாணவர்களின் தேடலில், சூடும் சுவையுமாகப் பல உண்மைக் கதைகள்" என்று பீடிகை போட்டார் ஜேக்கப்.

"கோவை, திருப்பூர், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, ஊட்டி, சேலம், மேட்டூர், ஈரோடு, காங்கேயம், கரூர், தாராபுரம், பழனி வரையிலான அறுபது ஊர்கள் கொண்ட கொங்கு மண்டலத்துக்கு ஆறுமாதம் எடுத்துக் கொண்டோம். மூன்று, நான்கு பேராகப் பிரிந்து வீடு வீடாகப் போன எங்களை, மார்கெட்டிங் பிரதிநிதிகள் என்று நினைத்து

முதலில் விரட்டியடித்தார்கள். இன்னும் சிலர், "லூட்ல தனியா இருக்கிற அம்மணிங்க கண்ணுல மண்ணைத் தூவிட்டு, இடைச்சதைத் தட்டிக்கிட்டுப் போகலாம்னு வந்திருக்கனாக்கும்" என்று மிரட்டினார்கள். ஆனால் பலபேர் எங்களைப் புரிந்துகொண்டு, சமையலறை வரையிலும் உற்சாகத்தோடு அனுமதித்தார்கள். சுவையோடு கொங்கு மண்டலச் சமையல் வகைகளை தோண்டித் துருவி எடுத்து வந்தோம்" என்றார்.



• ஜேக்கப் சகாயகுமார்



நாங்க!"

நாடார் சமுதாய உணவு வகைகளைக் கண்டறிய தென் மாவட்டங்களுக்குப் படையெடுத்திருக்கிறது மாணவர் படை. இராஜபாளையம் நகரில் ஆய்வுக்காகப் போனபோது, மழைக்காக ஒரு ஸ்வீட் ஸ்டாலில் ஒரு குழு ஒதுங்க... அங்கேயிருந்த ஸ்வீட் மாஸ்டர், நாசரேத் சிகப்பி ஆச்சியின் மகத்துவம் பற்றிச் சொல்லியிருக்கிறார். அடுத்த நாளே நாசரேத் போனவர்களுக்குப் பெரிய ஏமாற்றம். நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த எண்பது வயது சிகப்பி ஆச்சி உடல்நலமில்லாமல் படுத்த படுக்கையாக இருந்திருக்கிறார். நம்பிக்கை யிழந்து திரும்பிய மாணவர்களுக்கு, மூன்று மாதம் கழித்து சிகப்பி ஆச்சியிடமிருந்து கடிதம். 'பேராண்டிகளா... பத்து, பதினைஞ்சு நாள் தங்குற மாதிரி வந்துடுங்க' என்றதும் ஒரே கொண்டாட்டம்.

ஊரே தினசரி கூடி வேடிக்கை பார்க்க, நாசரேத் சிகப்பி ஆச்சி சொல்லிக் கொடுத்த அறுபது வகை உணவுகளை, அங்கேயே செய்து பார்த்து திருப்தியடைந்த பிறகே கிளம்பி வந்திருக்கிறார்கள். இப்படிப் பல சிகப்பி ஆச்சிகளை மதுரை முதல் கன்னியாகுமரி வரை தேடிப்பிடித்து ரெசிப்பிகளை அள்ளியிருக்கிறார்கள்.

"மூன்றாண்டு ஆய்வில் கிடைத்த கொங்கு, நாடார், மாப்பிள்ளை முஸ்லிம் மற்றும் ஆங்கிலோ இந்திய பாரம்பரிய உணவு வகைகளை மையமாகக் கொண்டு, சென்னை, பெங்களூர், மும்பை, டெல்லி உள்ளிட்ட நகரங்களில் உள்ள பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் 'நிலாச்சோறு' என்ற தலைப்பில், இதுவரை பத்து உணவுத் திருவிழாக்களை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோம். இன்று சென்னையில் உள்ள பல நட்சத்திர ஹோட்டல்களின் உணவுப் பட்டியலில் கொங்கு மற்றும் நாடார் பாரம்பரிய உணவு வகைகளில் பல சட்டென்று இடம் பிடித்துவிட்டன. இந்த வரவேற்பு நாட்டின் இதர பகுதிகள், வெளிநாடுகள் எனப் பரவும்போது, தமிழர்களின் உணவுக் கலாசாரம் புகழ் பெறும். அப்போதுதான் நாங்கள் முழு வெற்றி பெற்றவர்கள் ஆவோம்" என்கிறார் ஜேக்கப் சகாயகுமார்.

கட்டுரை, படங்கள்:
திரு

இளமை கல்கி

என்ன முழிக்கறீங்க...? இந்த வாரம் இளமைல சின்னான். வாங்க இன்னும் இளமையா பேசலாம்...

ஜப்பான்ல இருந்து நம்ம நாட்டுக்கு வரப் போகுது! எலக்ட்ரானிக் அயிட்டம் இல்ல! இது எலி பத்தின விஷயம்! புதுசா எதுவும் மருந்து இருந்து கண்டுபிடிச்சா, நம்ம விஞ்ஞானிகள் எலிக்குத்தான் 'முதல் மரியாதை' கொடுப்பாங்க! நம்ம ஜப்பான்காரங்க இந்த மாதிரி டெஸ்ட் பண்றதுக்குன்னே ஸ்பெஷலா ஜீன்ஸ் மாத்தி (அதான் மரபணு) செஞ்ச எலிகளை உண்டாக்கியிருக்காங்களாம். இப்போ அதை இந்தியா, சீனா, தைவான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்துன்னு எக்ஸ்போர்ட் பண்ணிக்கிட்டு இருக்காங்களாம்.



ஆசை, தோசை, அப்பளம், வடை!

தொடையை இன்ஷூர் பண்ணுனார் ரம்பா - இது நம்மூரு ஓல்டு நியூசு! ஹாலிவுட் ரம்பா பத்தியும் புதுசா ஒரு நியூஸ் இருக்கு. ஹெய்டி க்லூம்- இந்த அம்மணி ஜெர்மனைச் சேர்ந்த நம்பர்.1 மாடல். சமீபத்துல 'கால்கள் அழகு சாதன' கம்பெனி ஒண்ணுக்கு மாடலிங் பண்ணின அம்மணி, காலா காலத்துல தன்னோட அழகான கால்களுக்கு ஏதாவது பண்ணணும்னு அப்படியே தன்னோட லெக் பீஸ்களையும் இன்ஷூர் பண்ணியிருக்காங்களாம்! அதுல என்ன வித்தியாசம்னா, வலது காலை 12 லட்சத்துக்கும், இடது காலை 10 லட்சத்துக்கும் இன்ஷூர் பண்ணியிருக்காங்களாம். காரணம், வலதைவிட இடது 1 மிமீ வளர்ச்சி குறைவா இருக்குதாம்.

'லகலகலக' அடுத்த ரவுண்டுக்கு தயாராயிட்டுது. எல்லா மொழி மக்களும் 'ராரா'ன்னு தங்களோட மொழிக்கு சந்திரமுகியைக் கூப்பிட்டுக்கிட்டே இருக்காங்க. இப்ப சந்திரமுகி போறது பாலிவுட்டுக்கு. அமிதாப், ஷாருக், ராணி முகர்ஜி, பிரியங்கா சோப்ரான்னு ஒரு கலர்ஃபுல் கூட்டணி 'ஹிந்தி முகி'க்கு ஒப்பந்தமாகியிருக்கு. முன்னணி ஹிந்தி டைரக்டரோட அசிஸ்டெண்ட்டா இருந்த நரேன் ஆதித்யா இந்தப் படத்தை இயக்கப் போறாராம். தயாரிக்கப் போறது ஆந்திராத் தயாரிப்பாளராம். இதுல என்ன ப்யூட்டின்னா, ஜோதிகா மாதிரி தன்னோட முட்டை ஐய்ஸை (eyes) உருட்டி நடிக்க ஐஸ் ரொம்ப 'ஆசை'ப்பட்டுச்சாம். அது தோசை, அப்பளம், வடை ஆயிடுச்சு! ஹூம்!

சின்னான் செய்திகள்



இரவில் நகரம்!

க்ரைம் பீட்

எழில்மிகு சென்னைக்கு இரண்டு முகங்கள். பகலில் ஒரு முகம். இரவில் வேறொரு முகம். முன்னது பரபரப்பானது; பிரச்னைகள் குறைவானது. பின்னது அமைதியானது. ஆனால் அதிர்ச்சி தரக் கூடியது. இரவு பத்து மணி தொடங்கி அதிகாலை நான்கு மணி வரை. சென்னையை நாம் வலம் வந்தபோதுதான் எத்தனை எத்தனை காட்சிகள்...!









நேரம்: இரவு 10 ஸ்பாட்: சென்ட்ரல் ஸ்டேஷன் சாலை


ஜனநடமாட்டம் மெல்ல மெல்லக் குறைய ஆரம்பித்திருந்த வேளை... ஒரு ஆட்டோ சென்று கொண்டிருக்கிறது. உள்ளே பலம் பொருந்திய ஆசாமிகள் நான்கு பேர். தங்களின் வாகனத்துக்குக் குறுக்கே வந்த பைக் ஜோடியை நிறுத்தச் சொல்லி வம்பு செய்கிறார்கள். பைக் புறப்படவே, இறங்கி வழி மறிக்கிறார்கள். பேச்சு, கைகலப்பாய் மாறுகிறது. அடிதடி நடக்க, இளம் பெண்ணிடம் பதற்றம், அழுகை. அடுத்தடுத்து வந்த வாகன ஓட்டிகளின் தலையீட்டில் ஜோடி விடுவிக்கப்படுகின்றனர். சற்றுத் தள்ளி பரோட்டா கடை போட்டிருந்த நபர், 'த்தூ' என்று காறி உமிழ்ந்துவிட்டு நம்மிடம் பேசினார்...

"ஏண்டா இந்த பாழாப்போன ராத்திரி வருதுன்னு இருக்கு. நிம்மதியே இல்ல... என்னோட அனுபவத்துல பிரச்னை இல்லாத ராத்திரிகளை நான் சந்திச்சதே இல்ல. இன்னிக்கு இந்தச் சண்டைதான் மொத போணி. இன்னும் விடிய விடிய என்னென்ன நடக்கப் போகுதோ...." என்றவரிடம் 'அப்படியென்னங்க நடக்குது?' என்றோம். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு சன்னமான குரலில் பேசினார்.

"என்னென்னமோ நடக்கும்ங்க... ரெண்டாமாட்டம் சினிமா விட்டுப் போற காலேஜ் பசங்ககிட்ட, ஏரியா தாதாங்க காசைப் பிடுங்குவாங்க... ஜோடியா வர்றவங்கள மிரட்டி நகையை அடிச்சுக்கிட்டு ஆட்டோவுல எகிறிடுவானுங்க..! பிராத்தல் நடக்கும், சப்வேக்கள்ல இன்னும் மோசம்" என்றவர், தூரத்தில் பைக்கில் போலீஸ் தலைகளைப் பார்த்ததும் பரோட்டாவில் மும்முரமானார். 'இனி இவர் பேச மாட்டார்' என்று நினைத்துக் கொண்டு, நாமும் நடையைக் கட்டினோம்.

நேரம் : இரவு 11.30 ஸ்பாட் : பீச் ரோடு

எழிலகத்துக்கு அருகே டாடா சுமோ ஒன்றை மடக்குகிறது போலீஸ். உள்ளே நான்கு ஆண்கள், மூன்று இளம் பெண்கள். எல்லோருமே போதையில்!



மகாபலிபுரத்திலிருந்து வருகிறார்களாம். கால் மணி நேரம் கழித்து, டிரைவரைத் தெளிய வைத்து சுமோவை ஓட்டச் சொல்லிவிட்டு, போலீஸ் ஜீப் பின்தொடர, இரு வண்டிகளும் மறைகின்றன.

இந்தக் காட்சியை நம்மோடு சேர்ந்து பார்த்துக் கொண்டிருந்த பிச்சைக்காரர் ஒருவர், "போங்க ராஜா போங்க... யாருக்குமே தெளியப் போறதில்ல... கூடுதலா சிலருக்கு ஏறத்தான் போகுது போதை..." என்று புலம்பினார். "என்ன சொல்றீங்க" என்று நாம் கேட்கவும், அமைதியாகிவிட்டார்.

நேரம்: இரவு 1.30 ஸ்பாட்: கிழக்குக் கடற்கரைச் சாலை

டூவீலரில் இரு ஆசாமிகள் வேகமாக வந்து கொண்டிருக்கின்றனர். மடக்குகிறது போலீஸ்... அவர்கள் வைத்திருந்த பையில் மதுபான பாட்டில்கள். "பாண்டி போயிட்டு வர்றோம் சார்... 'சீப்பா' இருக்கும்னு வாங்கினோம்... பர்சனல் யூஸுக்கு சார்..."

"பர்சனலுக்கு எதுக்குப்பா பதினைஞ்சு பாட்டிலு...?"

"எப்போவாவதுதான் பாண்டி போவோம். அதான் மொத்தமா..." என்று இழுத்து, தொடர்ந்து விவாதம் நடக்க, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒருவரை தனியே தள்ளிப் போய் பேசினோம்.



* சைலேந்திரபாபு

"இந்தப் பணக்காரப்பய ஊருல ராத்திரியாச்சுன்னாலே இப்படித் தாங்க... காசு கொழுப்புல பொண்ணுங்களோட ஏகப்பட்ட பயலுங்க வந்து ரகளை பண்ணுவானுங்க. போலீசும் லேசா அட்ஜஸ்ட் பண்ணித்தான் போகுது. திடுதிடுப்புன்னு எதுனா ஒரு மேட்டரு பேப்பர்ல லீக் ஆவும்... அப்புறம் ஒரு பதினைஞ்சு நாளு நல்லபடியா இருக்கும்... பெறகு பழைய குருடி... கதவைத் திறடி கதைதான்" என்றவர், பீடியைப் பற்ற வைத்தபடி நகர, நாமும் நகர்ந்தோம்.



நேரம் : பின்னிரவு 3.00 மணி
ஸ்பாட் : பெசன்ட் நகர்

ஏழெட்டுப் பேர் ஒற்றையடிச் சாலையில் வந்து கொண்டிருந்தனர். அதில் ஒருவர், "இன்னா மாமு... சுண்டக் கஞ்சியா? இடம் தெரியுமா... இல்ல... இஸ்துக்கினு போவுணுமா..." என்று 'ஸ்டடியாக' நின்றபடி நம்மிடம் கேட்டு, கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றார்.

நேராக சுண்டக் கஞ்சி விற்குமிடத்துக்கு அழைத்துச் சென்றவர், 'குந்து நைனா' என்று பானையைச் சுற்றி உட்கார்ந்து சுவாரஸ்யமாக குடித்துக் கொண்டிருந்தவர்களை வழிவிடச் சொன்னார். உஷாராகி நைசாக வெளியே வந்து நடந்த நம் முன் சென்ற பெரியவர், போகிற போக்கில் பேசிக்கொண்டே போனார்...

"இந்த எழவக் குடிச்சிட்டுத்தான் ராத்திரியெல்லாம் கும்மாளம் போடுறானுங்க. கேக்க வந்தா போலீசுக்கே மாமூல் கொடுத்துடுறானுங்க. எங்க போய் முடியப்போகுதோ தெரியலை சாமி."

நேரம்: அதிகாலை 4 மணி
ஸ்பாட் : கோயம்பேடு

கோயம்பேடு பேருந்து நிலையத்தை நாம் நெருங்கியபோது வாசலில் நல்ல கூட்டம். கூட்டத்தை விலக்கி விட்டுப் பார்த்தால், ஒரு கிராமத்துப் பெரியவர் மூட்டை முடிச்சுகள் சிதறிக் கிடக்க, அழுது புலம்பிக் கொண்டிருந்தார். "நமக்கு பெரியகுள முங்க... வியாசர்பாடில எம் பொண்ணு வூடு இருக்குதுங்க. இப்பத்தான் பஸ்காரன் கொண்டாந்து எறக்கிவுட்டான். எந்த பஸ்ல போவணும்னு நாலைஞ்சு பேருகிட்ட விசாரிச்சேன். அதைக் கவனிச்ச ரெண்டு மூணு ஆளுங்க, கண்ணை மூடித் திறக்கறதுக்குள்ள என்னைய தள்ளிவுட்டுட்டு, மஞ்சப் பையை மட்டும் புடுங்கிட்டுப் போயிட்டானுங்க... அதுல ஆயிரத்து ஐந்நூறு ரூபா சொச்சம் வச்சிருந்தேனுங்க...." என்றவரை கூட்டத்தில் ஒரிருவர் முன் வந்து, "பணம் கிடைச்சுடும். வாங்க, போலீஸ்ல கம்ப்ளைண்ட் கொடுக்கலாம்" என்று அழைத்துச் சென்றனர்.

இணை கமிஷனர் சைசேலந்திரபாபுவைச் சந்தித்து இரவின் நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டோம். "இரவில் குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவர்கள் கைது செய்யப்பட்டு, உடனடியாக அபாரதம் வசூலிக்கப்படுகிறது. இரவில் தனியாக வருபவர்கள் தங்களுடைய அலுவலக அடையாள அட்டை, டிரைவிங் லைசென்சுடன் வர வேண்டும். வெளியூரிலிருந்து வருபவர்கள் பயணச்சீட்டு, சினிமா பார்த்து விட்டு வருபவர்கள், அதற்கான டிக்கெட் ஆகியவற்றுடன் வருவது நல்லது" என்றவர், "சென்னையைப் பொறுத்தவரை இரவு நேரத்தில் 2000 காவலர்கள் மற்றும் ஹோம் கார்டுகள், ஃப்ரெண்ட்ஸ் ஆஃப் போலீஸ் உள்ளிட்ட 5000 பேர் காவல் பணியில் ஈடுபடுகிறாரகள். 121 ரோந்து வாகனங்கள் செயல்படுகின்றன. 18 இடங்களில் ரகசியக் கேமராக்கள் உள்ளன" என்றார். ம்... இத்தனை இருந்துமா சென்னை இரவில் இப்படியிருக்கிறது!

- இரா. முத்துக்குமார்

படங்கள்: ஸ்ரீஹரி

நீங்கள் கேட்டவை
-தராசு

● பி.பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி

? பத்திரிகையாளரைத் தகாத வார்த்தையால் தாம் திட்டியதை ஒப்புக் கொண்டு ஸ்டாலின் வருத்தம் தெரிவித்துள்ளது பற்றி?

! ஏற்றுக் கொள்வோம். மறுபடி இப்படி நிகழாமல் அவர் பார்த்துக் கொள்ளட்டும்.

● அ.கலைஹல் ரஹ்மான், திருச்சி - 21

? 'நடிகர் விஜயகாந்த் கட்சியால் ம.தி.மு.க.வுக்குப் பாதிப்பு இல்லை' என்கிறாரே வைகோ?

! எல்லா கட்சியினரும் இதே பல்லவியைத்தான் பாடுவார்கள்-வெளிப்படையாக. மனசுக்குள் அனுபல்லவி வேறு வடிவம் எடுத்துக் கொண்டிருக்கும்!

● வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை

? வெள்ளிச் செங்கோல், தங்கக் கிரீடம் - தேவைதானா விஜயகாந்துக்கு?

! தே.மு.தி.க. ஒரு வித்தியாசமான அரசியல் கட்சியாக வளர்ச்சி பெற வேண்டுமானால் இதெல்லாம் தேவையில்லை. ஆரம்பத் தடுமாற்ற ஆடம்பரங்களாக முற்றுப் பெற்றுவிட்டால் நல்லது... இல்லாவிட்டால், கட்சி பத்தோடு பதினொன்றாகிவிடும்.

★ செ.சத்தியசீலன், கிழவளேரி

? அத்வானியின் பதவி விலகல் பி.ஜே.பி.க்குப் பாதகமாக அமையுமா அல்லது ஆர்.எஸ்.எஸ்-க்குப் பாதகமாக அமையுமா?

! பி.ஜே.பி.யின் அரசியல் பின்னடைவு என்பதால், இந்தியாவுக்கே பாதகமாகத்தான் அமையும்.

● த.சத்தியநாராயணன், அயன்புரம்

? இளங்கோவன் Vs தமிழக காங்கிரஸ்?

! 'இதென்ன உட்கட்சிப் பூசல்?' என்று கேட்டால், "இல்லையில்லை! உட்கட்சி ஜனநாயகம்" என்று சொல்கிறார்கள். இதுதான் உ.க.ஜ. என்றால், தமிழக காங்கிரஸை ஆண்டவனால்கூட காப்பாற்ற முடியாது.

● ஆன்டனி தமிழரசன், மும்பை

? 'பொடா மீண்டும் வந்தாலும் தீவிரவாதம் ஒழியாது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தால்தான் நக்சலைட்டுகளும் ஒழிவார்கள்' என்ற கருணாநிதியின் கருத்து பற்றி...?

! மிகச் சரியான கருத்து!


● அ.அப்துல் காதர், தூத்துக்குடி

? சினிமா மூலம் சொல்வதற்கு எத்தனையோ விஷயங்கள் இருக்க, காதலை மட்டுமே முக்கிய விஷயமாகப் பெரிதுபடுத்திக் காட்டுகிறார்களே... ஏன் இப்படி?

! காலம் காலமாகப் படைப்பாளிகளின் கற்பனைக்கு ஊற்றுக்கண்ணாக இருந்து வருவது காதலென்னும் உன்னத உணர்வு என்பதால், அது பெரிய விஷயம்தான். பெரிதுபடுத்தப்பட வேண்டிய அவசியமில்லாத பெரிய விஷயம் - வற்றாத சுனை அது... சினிமாவில் அதைப் பல சமயம் விழலுக்கு இரைத்த நீராகப் பயன்படுத்துகிறார்களே, அது தான் சோகம்.

● சியாமளா ஈஸ்வரன், தேலூர்

குஷ்புவின் புரட்சிக் கருத்துகள் பற்றி...?




மேட்டுக்கடை

? 'தமிழகத்திலும் மத்திய அரசைப் போல கூட்டணி ஆட்சி கருணாநிதி தலைமையில் அமைய வேண்டும்' என்று சோ. பாலகிருஷ்ணன் கூறியுள்ளது பற்றி...?

! முன்பு இளங்கோவன் இதைக் கூறப் போகத்தான் பெரிய பிரச்னையாகி, சோனியாவிடம் குட்டுப்பட்டார். சோ.பா. அதை மறக்கலாமோ! சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவுக்குப் பெரும்பான்மை கிடைக்காது போனால் - கூட்டணிக்குப் பெரும்பான்மை இருந்தால் - சோ.பா.வின் கனவு பலிக்கலாம்.

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? கற்பு என்பதற்குப் புது இலக்கணம் சொன்ன குஷ்புவின் புரட்சிக் கருத்துகள் பற்றி...?



! குஷ்பு சொன்னது தப்புத்தான்; அவர் ஒரு குரல் அழுது மன்னிப்பும் கேட்டுவிட்டார்; விட்டுத் தள்ளுங்க! செத்த பாம்பை அடிக்க வேண்டாம். ஆனால் தராசுக்கு என்ன புரியலைன்னா, ஆய்வு என்ற பெயரில் பத்திரிகைகளும், தனியார் தொலைக்காட்சிகளும் வெளியிடும் அபத்தக் கருத்துகளுக்கு மட்டும் எதிர்ப்பே காணோமே, ஏன்?



● இரா. சக்கரபாணி, மதுரை - 7


? 'மீண்டும் பொடா தேவை' என்று வலியுறுத்தியுள்ளாரே தமிழக முதல்வர்...?



! துஷ்பிரயோகமாகி பழகிப்போன அதிகார பலம் குறைகிறபோது எழுகிற தாபக் குரலாகவே ஒலிக்கிறது. பொடா இருந்தால்தான் நக்ஸலைட்டுகளையும், தீவிரவாதிகளையும் கட்டுப்படுத்த முடியும் என்ற கருத்து மிகவும் தவறானது. இந்தத் தவறான கருத்தை வெளியிடும்போது, தமது ஆற்றலின்மையை அவர் ஒப்புக்கொள்வதாகிறது.



● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி



? 'ரோம் சக்தி'க்கு எதிராக 'ஓம் சக்தி'யை ஒன்று திரட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்கிறாரே சுப்ரமணிய சுவாமி?

! ஆகா! வருகிறார் சு.சுவாமி! பா.ஜ.க.வும் பரிவார் அமைப்புகளும் வழிவிட்டு வணங்கி நிற்க வேண்டியதுதான்!

❑ லலிதா செல்லப்பா, சென்னை

? 'குடும்பத்தில் ஒரே பெண் குழந்தை இருந்தால் அந்தக் குழந்தைக்கு ஆரம்பக் கல்வி முதல் மேல் படிப்பு வரை இலவசம்' என்ற மத்திய அரசின் முடிவு எதைக் காட்டுகிறது?

! வேலைவாய்ப்புகளைப் பெருக்கி குடும்பப் பொருளாதாரம் உயர வழிவகுப்பதுதான் நாடு உருப்படுவதற்கான வழி - நேர் வழி. மற்ற குறுக்கு வழிகளெல்லாம் வோட்டுப் பிடிக்கச் செய்யப்படும் காரியங்கள். ஒருசாராருக்குத் தரப்படும் இலவசம், பல பேர் தலையில் விழும் வரிச்சுமை. (இடி) என்பதுதான் அடிப்படைப் பொருளாதாரம்.

● ஏ. சுகுமார், காட்பாடி

? 'எம்.ஜி.ஆர். ஆட்சியில் ஊழலே இல்லை' என்று விஜயகாந்த் கூறியுள்ளது பற்றி...?

! எம்.ஜி.ஆரை முன்வைத்து வோட்டுக் கேட்பவர் இப்படித்தான் பேசியாக வேண்டும். இன்னும் கொஞ்ச நாளில் 'எம்.ஜி.ஆர். ஆட்சி மலர ஆதரவு தாரீர்' என்று வோட்டு வேட்டை நடத்துவார்.

● எஸ்.கருணையானந்தம், உசிலம்பட்டி

? 'அம்மா உத்தரவிட்டதால்தான் அப்பாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டேன்' என இன்பத்தமிழன் கூறியுள்ளாரே...?

! இந்தக் கூற்று குடும்பப் பாசத்தின் சீரழிவை அதிகம் பறைசாற்றுகிறதா அல்லது கட்சிக்குள் தனிமனித சுதந்திரத்தின் சீர்குலைவை அதிகம் பிரதிபலிக்கிறதா என்று பட்டிமன்றம்தான் நடத்த வேண்டும்!

● ரேவதிப்ரியன், ஈரோடு

? ரசிகர் மன்றங்கள் அரசியல் அமைப்புகளாக மாறி வருவது ஆபத்து என்கிறாரே ராமதாஸ்?

! சாதி, மத, இன சங்கங்கள் அரசியல் கட்சிகளாக உருவாவதில் உள்ள ஆபத்தை விடவா?

● கே.எஸ்.வெங்கடேஷ், மதுரை - 12

? சினிமாக்களில் சிகரெட் குடிப்பதற்குத் தடை விதித்தது போல் கவர்ச்சிக்கும் தடை விதித்தால் என்ன...?

! சிகரெட் தடைக்குத் தடைகோரி எழுந்துள்ள நீதிமன்ற மனுக்களைக் காட்டிலும் பல மடங்கு வேகத்தில் மனுக்கள் நாடெங்கும் நீதிமன்றங்களை நிறைக்கும்.



❑ ரூ.100 பரிசு பெறுபவர் :
லலிதா செல்லப்பா,
144 பி, காந்தி மெயின் ரோடு,
சங்கர் நகர், பம்மல்,
சென்னை - 600 075.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
செ. சத்தியசீலன்,
434, கன்மலைத் தெரு,
கிழவனேரி - 627 117.



சாணக்யா



ரொம்பப் புதுசா ஒரு கதை சொல்லியிருக்காங்க! 'காமெடி இல்லீங்க... நிஜம்தான்'னு நான் சொன்னாலும் எப்படியும் நீங்க நம்பப் போறதில்ல... அதனால, பழைய கதை! போதுமா? சின்ன வயசுல குடும்பத்த சாகடிச்ச கும்பல்ல ரெண்டு பேரை அடுத்தடுத்து உடனடியா பழிவாங்கற சரத்து, கடைசி ஆள மட்டும் படம் முடியுற வரைக்கும் பழிவாங்கறாரு, பழி வாங்கறாரு... பழி வாங்கிக்கிட்டே இருக்காரு... ஓஹோ... ரெண்டரை மணி நேரம் படத்த இழுக்கணுமா! அதுக்குத்தானா! சாரி, சாரி.

யப்பா தேவா சன், உம்மோட ஒரு குத்துப் பாட்டு ஹிட்டுதான். பேக்ரவுண்ட் மீசிக்ல என் காது அவுட்டுதான். அட, யாரு மதுஅம்பாட்டா ஒளிப்பதிவு? அவர அதிகம் பயன் படுத்தலங்கறதவிட பயன்படுத்தினதே அதிகம்னுதான் எனக்குத் தோணுது. வடிவேலு இல்லப்பா, மதுரைப் புயலு... வெடிவேலு.

பார்த்தாலே தியேட்டர்ல சிரிப்பு பொத்துக்குது. கலக்குண்ணே.

டைரக்டர் சார குத்தம் சொல்ல முடியாது. தன்னோட ஃபார்முலா மாறாம பார்த்துக்கிட்டிருக்காரு. அதிகம் எதிர்பார்த்துப் போனது நம்ம தப்புதேன்... நம்ம தப்புதேன். தொட்டதுக்கெல்லாம் கேமராவைத் தூக்கிட்டு வந்துடுற விஷுவல் மீடியாவ சரத்து இத்தான் சாக்குன்னு படத்துல வெளுத்து வாங்கறது சூப்பரப்பு... சுபாவோட வசனம் டாப்பரப்பு!

என்னடா இன்னும் வர்லியேன்னு பார்த்தீங்க தானே... த்தோ வந்துட்டேன்... லயா, வெடிகுண்டுன்னா, நமீதா அணுகுண்டு. வெடிச்சா ஏழேழு ஜென்மத்துக்கும் பாதிப்பு இருக்கும். டைரக்டருங்க நமீதாவ, ஸ்மூத்தா பயன் படுத்தினா நல்லது.

கடேசியா ஒரு வார்த்த, சரத்துக்குக் கதைத் தேர்வுல இன்னும் கொஞ்சம் சாணக்கியத் தனம் தேவைப்படுது.

- லஜ்ஜாவதி

சேனல்



மீனாவுக்கு அடித்த ஜாக்பாட்!

குஷ்பு விவகாரம், காத்ரீனா போல கமல் நடிக்கும் என்று எதிர்பார்க்கவில்லையாம் ஜெயா டி.வி. 'ஜாக்பாட்' நிகழ்ச்சிக்கு கிடைத்து வந்த எக்கச்சக்க வரவேற்பு, இனி தொடருமா என்று மண்டையை ஒரு பக்கம் குடைந்து கொண்டே, இன்னொரு பக்கம் மீனாவை, தொகுப்பாளினியாகக் களமிறக்கி, 'ஹவுஸ்ஃபுல்' என்ற இன்னொரு கேம் ஷோவை அதிரடியாக ஆரம்பிக்கப் போகிறார்கள். லைவ் நிகழ்ச்சியான இது, ஞாயிறு காலைகளில் ஒளிபரப்பாகவிருக்கிறது. இதற்கும் பரிசுத் தொகை ஒரு லட்சம்.

முழுக்க முழுக்க செல்போன் எஸ்.எம்.எஸ் சேவைகளைப் பயன்படுத்தி வீட்டிலிருந்தபடியே நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டு அல்லது பார்க்காமலேயே போட்டியில் கலந்து கொள்ளலாம் என்று செல்போன் சமுதாயத்தை ஒட்டுமொத்தமாய்க் குறி வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு பிரமாண்ட செட், எக்ஸ்க்ளூசிவ் காஸ்ட்யூம்கள் என்று மீனாவை தேவதை ரேஞ்சுக்குக் காட்டப் போகிறார்களாம். மீனாவுக்கு எப்படி அடித்தது இந்த ஜாக்பாட்?

"வாய்ப்பு இல்லாமத்தானே டீவிக்கு வந்துட்டீங்கங்கற கேள்வியை மட்டும் நீங்க கேட்கவும் கூடாது. கேட்டால் நான் பதிலும் சொல்லவும் மாட்டேன்" என்கிற நிபந்தனையோடு குழந்தை மாதிரி கீச்சுக் குரலில் பேசினார்.

"இந்த கேம்ஷோ கான்செப்ட் ரொம்பப் பிடிச்சது! ஏற்கெனவே குஷ்பு அக்கா கலக்கறாங்க. அவங்க அளவுக்கு நானும் பேர் வாங்குவேன். என்னை இதுவரைக்கும் நடிகை மீனாவா பாத்த எல்லோரும் இனி ரியல் மீனாவைப் பார்ப்பாங்க" என்றவரிடம் 'சினிமாவில் ஓ.கே. டீவி லைவ் நிகழ்ச்சியில் தமிழ் திருத்தமாகப் பேசுவீங்களா?' என்று தெரியாமல் கேட்கப் போய், நம்மைப் பார்த்து ஒரு எதிர்கேள்வி கேட்டார்: 'என்னை என்ன வட நாட்டு நடிகைன்னு நினைச்சுட்டீங்களா?'

- ஸ்ரீ



‘மியூசிக் அகாடமி’ சங்கீதக் கச்சேரிகளை நடத்துவதை விட்டுவிட்டு, கோர்ட் கச்சேரிக்குப் போனது ஒரு வழியாக முடிவுக்கு வந்திருக்கிறது.

கடந்த மூன்றாண்டுகளாக சென்னை ஹைகோர்ட்டில், அகாடமி சார்பாக போட்ட வழக்குகளுக்கு, உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் விடையளித்துள்ளது.

அப்படி என்னதான் கலாட்டா அங்கே? விடைக்கு அகாடமியின் வரலாற்றைக் கொஞ்சம் புரட்டிப் பார்ப்பது அவசியம்.

கடந்த 1929ம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட மியூசிக் அகாடமி, 1860 வருட சங்கப் பதிவுச் சட்டத்தின் கீழ், ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டது. பல பெரிய மனிதர்களைத் தலைமைப் பொறுப்பில் அமர்த்தி அழகு பார்த்தது. பதவியுடன் வரும் பொறுப்புகளைத் தட்டிக் கழித்ததன் விளைவு, நிர்வாகத்தில் சிக்கல்! பல உப விதிகளைத் திருத்திய நிர்வாகிகள், அவற்றை முறையாகப் பதிவு செய்யவில்லை. 1975ம் வருடம் தமிழ்நாட்டில் சங்கங்களின் பதிவுச் சட்டம் புதியதாக உருவாக்கப்பட்டது. பழைய சொசைட்டிகளை, புதிய சட்டத்தின் வரையறைக்குள் கொண்டுவர சட்டம் கட்டளையிட்டது.

ஆனால், மியூசிக் அகாடமியிலோ, அப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவ்வப்பொழுது திருத்திய உப விதிகள் உடனடியாகப் பதிவு செய்யப்படவில்லை. மேலும் புதிய சட்டத்துக்குப் புறம்பாக ஒரு டிரஸ்டி குழு உருவாக்கப்பட்டது. அதற்குப் பதவிக் காலம் ஆறு வருடங்களாகவும், அவர்கள் தேர்தலில் நிற்காமலே டிரஸ்டிகளாக நியமனம் செய்யப்படவும், அப்படி டிரஸ்டிக்கள் எடுக்கும் முடிவுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் குழு கட்டுப்பட வேண்டுமென்றும் துணை விதிகள் திருத்தப்பட்டன. இதற்கு அரசு நியமித்த சங்கப் பதிவாளர்களின் ஒப்புதல் பெறப்படவில்லை. சட்டத்திற்கு அப்பாற்பட்டு செயல்படும் ஒரு குழுவாக டிரஸ்டிகள் செயல்பட்டு வந்தனர்.

2001ம் வருடம் சங்கத்துக்குத் தேர்தல் நடைபெற்றது. அதில் உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள், நல்லி குப்புசாமி செட்டியாரும் ஒருவர். அவர்தான் இப்பிரச்னையை முதலில் கிளப்பினார். அவரை அடுத்து வேறு சில நிர்வாகிகளும், உறுப்பினர்களும் அரசுக்குப் புகார் செய்ய, சங்கப் பதிவாளர், அகாடமிக்கு நோட்டீஸ் அனுப்பினார். அதில், நடந்த முறைகேடுகளைச் சுட்டிக்காட்டிய சங்கப் பதிவாளர், ‘முறைகேடுகளைக் களையாவிட்டால், சங்கத்தின் நிர்வாகக்குழுவைக் கலைத்து, தனி அதிகாரி ஒருவரை ஏன் நியமிக்கக் கூடாது’ என்று விளக்கம் கோரினார். அப்பொழுது அகாடமியின் தலைவராக இருந்த காலஞ்சென்ற திரு. டி.டி. வாசு, தனி அதிகாரியை நியமிக்கத் தமது சார்பில் ஆட்சேபணையில்லை என்று அறிவித்து, ஓர் அணுகுண்டைப் போட்டார். ஆனால் மற்ற நிர்வாகிகளும் டிரஸ்டிகளும் கோர்ட்டுப் படிகளில் ஏறி, அரசுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தனர். 2004ம் வருடம் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் காலம் முடிந்த பின்னும், கோர்ட்டில் இடைக்கால உத்தரவு வாங்கி,

கச்சேரிக்குப் போன மியூசிக் அகாடமி!



* நல்லி

தங்களது பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டனர். கோர்ட்டு உத்தரவின் பேரில் 2003, 2004ம் ஆண்டுகள் இசை விழாக்களையும் நடத்திக் கொண்டனர்.

இதற்கிடையில் பல பெரிய மனிதர்களின் சமரச முயற்சிகளும் தோல்வியுறவே, கோர்ட் தனது இறுதி உத்தரவை கடந்த இருபத்து மூன்றாம் தேதி பிறப்பித்தது. நீதிபதிகள் பி.கே.மிஸ்ரா மற்றும் என். கண்ணதாசன் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் அளித்த உத்தரவில், அரசு அனுப்பிய விளக்கம் கோரும் நோட்டீசில் தவறேதுமில்லை என்றும், அதற்கு அடிப்படையாக அமைந்த 1975ம் வருட தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின் பிரிவு 34ஏ, அரசியல் சட்டப்படி செல்லும் என்றும் அறிவித்தது. இதற்கிடையில் நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் 2004ல் முடிந்துவிட்டதனால், புதிய தேர்தலை அக்டோபர் 31ம் தேதிக்குள் நடத்த உத்தரவிட்டுள்ளது. தேர்தலை மேற்பார்வை செய்ய, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.பி. சிவசுப்பிரமணியம் அவர்களையும் நியமித்துள்ளது. எல்லாவற்றிற்கும் உச்சகட்டமாக, டிரஸ்டி குழுவின் அமைப்பை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது நீதிமன்றம். இரண்டு டிரஸ்டிகளுக்கு மேல் கமிட்டியில் இருக்கக் கூடாது என்றும், அவர்களது பதவிக்காலம் மற்ற உறுப்பினர்கள் போலவே மூன்று வருடங்கள் மட்டுமே என்றும், அவர்களும் முறையாகத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு வரவேண்டும் என்றும், அவர்களுக்கு விசேஷ அதிகாரம் ஏதுமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர் நீதிபதிகள். இதன்படி சமுதாயத்தின் பெரிய மனிதர்கள் கொல்லைப்புற வழியாகப் பதவியை அடைய முடியாத நிலை உருவாகியுள்ளது.

நல்லி குப்புசாமி செட்டியார் இதுவரை கூறிவந்த குற்றச்சாட்டுகளை சரியென்று உயர்நீதிமன்றம் ஏற்றிருப்பதால் அவரது முயற்சிக்கு வெற்றி!

> “வித்வத் சபை வியாபார வித்தகர்களின் சபையாக மாறக் கூடாது!”

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படப் போகும் நிர்வாகக் குழு, இவ்வருடம் மார்கழியில் இசை விழாவை நடத்துமா? அல்லது பதவி பறி போன டிரஸ்டிக்கள் குழு மேற்கொண்டு வழக்கைத் தொடர சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகுமா என்று தெரியவில்லை.

எது எப்படியிருந்தாலும் சமுதாயத்தில் அந்தஸ்து உள்ளவர்கள் சங்கப் பொறுப்புக்கு வந்தால், சட்ட திட்டத்தின் வரையறைக்குள் நடக்க வேண்டும் என்பது மீண்டும் ஒரு முறை நினைவூட்டப்பட்டுள்ளது.

'வித்வத் சபை' (இசை) விற்பன்னர்களின் சபையாக இருக்க வேண்டுமே ஒழிய, வியாபார வித்தகர்களின் சபையாக மாறக் கூடாது. அகாடமியில் சான்ஸ் கிடைக்க அவதியுறும் கலைஞர்களின் அவலநிலை மாற வேண்டுமென்றால், மீண்டும் அகாடமி, இசைக் கலைஞர்களின் கட்டுப்பாட்டில் வரவேண்டும். கலை, கம்பெனி ஸ்பான்சர்களின் கைதியாக மாறிவிடக்கூடாது.

- கட்டியக்காரன்

சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி!

உங்க வீட்ல யாராச்சும் பொறுப்பில்லாம, ஊதாரித்தனமா இருக்காங்களா? மொதல்ல போய் அப்பாசாமியப் பார்க்கச் சொல்லுங்க. ரெண்டு மணி நேரத்துல மனுஷன் திருந்தி திரும்ப வருவாரு.

மலையாளத்துலருந்து இறக்குமதி செய்யப்பட்ட கதைன்னு யாராச்சும் சொன்னாத்தானுங்க தெரியுது. மொத மொறையா தங்கர்பச்சான் நாயகனா வேஷம் கட்டியிருக்காரு. கதைக்கேத்த முகம். ஸோ, மனுஷன் தப்பிச்சுடுறாரு.

'தேனு தேனு...'ன்னு பொண்டாட்டிகிட்ட அவரு உருகறப்போ, படம் பார்க்கற விடலைங்களுக்கே 'ச்சே, சீக்கிரம் கண்ணாலம் பண்ணிக்கணும்'னு தோணும். ஒய்ஃப்பு நவ்யா நாயரு அட்டகாசம் பண்ணியிருக்காங்க. ரெண்டு புள்ளைங்களுக்கு அம்மாவா நடிச்சதே பெரிய விஷயம். அதுல சூப்பரா ஆக்ட் கொடுத்துருக்கறது இன்னும் தூளு. மத்த ஹீரோயினுங்க இவங்ககிட்ட கத்துக்க வேண்டிய விஷயம் நிறையவே இது.



ராஜாவோட இசை அள்ளுது. 'என் தாய் மண்ணு'ன்னு சொல்லிச் சொல்லி கலாய்க்கற 'காமெடி கறுப்பு'க்கு பிரகாசமான எதிர்காலம் இருக்குடோய்!

அதிகமான காட்சிங்க வீட்லயே நடக்கறதால திடீர்னு நாடகம்தான் பாக்கறமான்னு அப்பப்ப சந்தேகம் வந்துடுது. பிரமிட் நடராஜன், சுந்தர்ராஜன், ஜெகன் மூணு பேரும் குணச்சித்திரத்துல அடி பின்றாங்க. நல்ல படத்துல கவர்ச்சிக் குத்துப்பாட்டு இருக்குறது ரொம்ப நெருடுது. தங்கரு அண்ணாச்சி இந்தப் பழக்கத்தை மாத்திக்கிட்டா நல்லது.

எது துறவறம், யாரு துறவின்ற கேள்விக்கெல்லாம் அப்பாசாமி மூலமா பதில் தந்திருக்கறது ஓ.கே. ஆனா, பல காட்சிகள பார்வையாளன் முன்னாடியே அனுமானிக்கறது படத்தோட பெரிய பலவீனம்.



எது எப்டியோ, 'அழகி'யா இல்லாட்டாலும், 'அப்பாசாமி'யும் கொஞ்சம் அழகன்தான்!

- லஜ்ஜாவதி

Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka.

